# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-9

செப்டம்பர்-2020 (மொஹரம்-1442)

விலை ரூ. 20/-



## தப்லீக் ஜமாஅத்

மீதான அவதூறுகளும்
எதிர்பட்ட யதார்த்தங்களும்...



## அறிஞர் அண்ணாவும் இஸ்லாமும்

## பிரசாந்த் பூஷனின் உச்ச நீதிமன்ற வாக்குமூலம்.!

## பாஜகவின் ஊதுகுழலான முகநூல்

“

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

”


தப்லீக் ஜமாஅத் மீதான அவதூறுகளும் எதிர்பட்ட யதார்த்தங்களும்... - 6

அறிஞர் அண்ணாவும் இஸ்லாமும் - 24

பிரசாந்த் பூஷனின் உச்ச நீதிமன்ற வாக்குமூலம்.! - 27

நீட்தொடரும் கொலைகள் விரிவான அலசல் - 34

சிலுவைப் போர்கள் 2.0 - 40

பாஜகவின் ஊதுகுழலான முகநூல் - 42

அஷ் ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்களின் வாழ் நாள் ஆசை - 46

முஸ்லிம்களை பழி வாங்கும் - NIA வின்அடுத்த நாடகம் - 48

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் - 53

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... - 58

நூல் ஆய்வு - அத்தாட்சிகள் திருக்குர்ஆன் கலைக் களஞ்சியம் - 62



செப்டம்பர்-2020 | மொஹரம்-1442

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# மது ஒழிப்பு..!

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, குடும்ப சீரழிவு, நோய் என நிறைய தீமைகளுக்கு முக்கிய காரணமாக அமைவது மது. விபத்துகளால் ஏற்படும் மரணங்களில் சுமார் 40% மது அருந்தி ஓட்டுவதினால் ஏற்படுகின்றது.

அந்த மதுவை ஒழிக்க காந்தியடிகள் முதல் இன்று வரை நிறைய தன்னார்வளர்கள் போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆட்சியாளரும் சரி எதிர்க்கட்சியாக இருப்பவர்களும் சரி மதுவை ஒழிக்க போராடதவர்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு பாரபட்சமின்றி எல்லா கட்சிகளும் மதுவுக்கு எதிராக போராடுகிறார்கள். ஆனால் மது ஒழிந்தபாடில்லை.

மாறாக அதன் வளர்ச்சி இந்திய மக்கள் தொகையைப் போன்று பெருகிக் கொண்டே போகிறது. ஒருசில நபர்கள் மிகத் தொலைவில் சென்று மது அருந்திய காலம் போய்விட்டது.

இன்று வயது வரம்பில்லாமல் பள்ளி செல்லும் மாணவர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை குடிக்கின்றார்கள். இன்னும் ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் மதுவுக்கு அடிமையாகி தங்கள் வாழ்வை தொளைக்கின்றார்கள்.

நமது அரசாங்கமும் மதுவை ஒழிக்கக்கடுமையாக நடவடிக்கை எடுத்துள்ளார்கள். பிரதான சாலைகளில் மதுக்கடை இருக்கக்கூடாது. பள்ளி, கல்லூரி, வழிபாட்டுத் தலங்கள் இருக்கும் பகுதியில் ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கு மதுக்கடை இருக்கக் கூடாது. மது பாட்டில்,மது கொட்டும் இடம் நாட்டிற்கும் கேடு என அச்சிட்டு விற்பது, தொலைக்காட்சி, சினிமா போன்றவற்றில் மது அருந்தும் காட்சிகளில் சிறியதாக மதுஅருந்துவது உடல் நலத்திற்கு கேடு என காண்பிப்பது இன்னும் ஒருபடி மேலாக மதுவின் விலையை உயர்த்துவது என நகைச்சுவையான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்கிறது.

பல சீர்கேடுகளுக்கும் ஆணிவேராக இருக்கக் கூடிய மதுவை ஒழிக்க வேண்டிய அரசாங்கம் அதை எடுத்து நடத்துகிறது. படிப்படியாக ஒழிப்பதாக கூறிக்கொண்டு நாளுக்கு நாள் அதன் உற்பத்தியை அதிகரிக்கிறது. அதன் விற்பனை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே போகிறது.

இலாபத்தை மட்டுமே பார்க்கும் அரசாங்கம் இதனால் மக்களுக்கு ஏற்படும் தீமைகளைப் பற்றி சிந்திப்பதில்லை. வாழ்வாதாரத்திற்கோ வழியில்லாத காலக்கட்டத்திலும் கூட மதுக்கடைகள் திறக்கப்படுகிறது.

மதுவைத் தங்கள் வாழ்வில் இருந்து பிரிக்க முடியாது என்ற கலாச்சாரத்தைக் கொண்ட மிகப்பெரிய சமூகத்தை இஸ்லாம் அவர்கள் கைகளாலே மதுவைக் கீழே ஊற்றச் செய்தது. மதுவைத் தயாரித்த, சேமித்த வைத்தப் பாத்திரங்களைக்கூட தங்களுக்கு விலக்கு ஆக்கிக் கொண்டே சமூகமாக இஸ்லாம் மாற்றிக் காண்பித்தது.

குர்ஆன் அவர்களுக்கு இறை அச்சத்தோடு மனிதனுக்குத் தீங்கு உண்டாக்கக் கூடிய மதுவைப் பற்றி உணர்த்தியது. படிப்படியாக மதுவை விட்டு அவர்களை விலகச் செய்தது. பின்பு முற்றிலுமாக மதுவை அவர்கள் வாழ்விலிருந்து விலக்கியது. மதுவினால் ஏற்படும் நன்மைகளை விட அதன் தீமைகள் அதிகம் என உணர்த்தியது.

"மது மற்றும் சூதாட்டம் மூலம் உங்களுக்கிடையே பகைமையும், வெறுப்பையும் ஏற்படுத்தவும் அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகைசயை விட்டும் உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான். எனவே விலகிக் கொல்ல மாட்டீர்களா?" - *(5:90)*

"பேரீட்சை மற்றும் திராட்சைக் கனிகளில் இருந்து மதுவையும் அழகிய உணவையும் தயாரிக்கிறீர்கள். விளங்கும் சமுதாயத்திற்கு இது சான்றுள்ளது." *(16:67)*

"மது மற்றும் சூதாட்டம் பற்றி (முகம்மதே) உம்மிடம் கேட்கின்றனர். அவ்விரண்டிலும் பெரும் கேடும் மக்களுக்கு சில பயன்களும் உள்ளன. அவ்விரண்டின் பயனை விட கேடு, இவ்வுலகிலும் மறுமையிலும் மிகப்பெரியது எனக் கூறுவீராக" *(2:219)*

மதுவுடன் சம்மந்தப்பட்ட எல்லோரும் குற்றவாளிகள். ஒரு மனிதன் எந்த வகையிலும் மதுவுடன் சம்மந்தப்படக் கூடாது என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது.

முகம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மதுபானத்தையும், அதை பருகுவதையும், பிறருக்கு பருகக் கொடுப்பவரையும் அதை விற்பவரையும், அதை வாங்குபவரையும், இதைப் பிறருக்கு தயார் செய்து கொடுப்பவரையும், தானே தயார் செய்து கொள்பவரையும், அதை சுமந்து செல்பவரையும், யாருக்காக அது சுமந்து செல்லப்படுகிறதோ அவரையும், அல்லாஹ் சபிக்கிறான் என்று கூறினார்கள்.

- அறிவிப்பாளர் இப்னு உமர் (ரழி)
நூல் : இப்னு மாஜா

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

மது குடிப்பவர்களை சாட்டையால் அடியுங்கள். அவர்கள் மீண்டும் குடித்தால் அப்போதும் சாட்டையால் அடியுங்கள். அவர்கள் மீண்டும் குடித்தால் அப்போதும் சாட்டையால் அடியுங்கள். அதன்பிறகும் குடித்தால் அவர்களைக் கொன்று விடுங்கள்.

-அறிவிப்பாளர் முஆவியா (ரழி)
நூல் : அபுதாவூத்

போதைப் பொருளை அருந்துபவனுக்கு தீனதுல் கபால் எனும் பானத்தைப் புகட்டுவதாக அல்லாஹ் ஒரு வாக்குறுதி உள்ளது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதரே தினதுல் கபால் என்றால் என்ன? எனத் தோழர்கள் கேட்டதும், நரக வாசிகளின் வியர்வை அல்லது நகரவாசிகளின் சீழ் என பதில் அளித்தார்கள்.

-அறிவிப்பாளர் : ஜாபர் (ரழி)
நூல் : முஸ்லிம்



# தப்லீக் ஜமாஅத்

## மீதான அவதூறுகளும் எதிர்பட்ட யதார்த்தங்களும்...

கொரோனா, என்ற கொள்ளை நோய் இந்தியாவையும் தாக்கப்போகின்றது என்ற உண்மையை முதலில் எடுத்துரைத்தவர்கள், எச்சரித்தவர்கள் எதிர் கட்சியினர்தாம்.

நாடாளும் மன்றத்தில் இதனை காங்கிரஸ் கட்சியினர் முதன் முதலில் எச்சரித்தார்கள். அப்போது ஆளும் பாரதீய ஜதனா கட்சியைச் சார்ந்தவர்கள் கிண்டலடித்தார்கள்.

ராகுல் காந்தி இத்தாலியிலிருந்து வந்தவர். வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்குத்தான் கொரோனா வரும் என்கின்றார்கள். அவரை - ராகுல்காந்தியை - முதலில் சோதனைகளுக்குள்ளாக்கிடுவோமா? என ஏகடியம் பேசினர்.

தமிழகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் கொரோனா பிரச்சனையை எழுப்பினார்கள். அதனை இங்கே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் எகத்தாளமாக இந்தத் தொற்று நோய் வயதானவர்களுக்குத்தான் வரும், எதிர்க் கட்சியில் அமர்ந்திருக்கும் துரைமுருகன் அவர்கள் வயதானவர், ஆனால் அவர் அஞ்ச வேண்டாம் என்றார்கள்.

ஆனால், கொரோனா கோரதாண்டவம் ஆடிடும்போது கைது நிலைக்கு வந்து விட்டார்கள்.

ஆனால், மத்தியில் உள்ளவர்கள், மத்தியில் ஆட்சி செய்பவர்கள், வரப்போகும் கொரோனாவை எப்படித் தங்கள் பாசிச கொள்கைக்குச் சாதகமாகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் எப்படிப் பயன்படுத்துவது என்பதை ஆலோசித்தார்கள். கொரோனா பரவுக்கு முஸ்லிம்கள்தான் காரணம் எனக் கதைக் கட்டி விட்டால், ஓர் அலாதியான முஸ்லிம் வெறுப்பை ஏனைய சமுதாயங்களிடையே எற்படுத்திடலாம் என்று திட்டமிட்டனர்.

வெறும் திட்டமிட்டலோடு நின்றுவிடாமல் ஒருபடிமேலே போய், அதற்காக பெரும் நிதி ஒன்றை ஒதுக்கினார்கள். அதன்வழி தங்கள் சமூக ஊடகக் கைக்கூலிகளை இயக்குவது என்றும் முடிவு செய்தார்கள். தொடர்ந்து EVMS மின்னஞ்சல் வாக்குப்பதிவு இயந்திரங்களின் வழி தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தை முடிந்த மட்டும், இதற்குப் பயன்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஏற்கெனவே, ஆண்டாண்டு காலகாலமாக, முஸ்லிம்களுக்கெதிராகவும், இந்தியாவை ஓர் ஆரியவர்த் இந்து ராஷ்டிரமாகவும் ஆக்கிட உழைத்துக் கொண்டிருக்கும் மத்திய உளவுத் துறையையும் பயன்படுத்திட முன் வந்தார்கள்.

மத்திய உளவுத்துறை இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அடுக்கடுக்கான ஆதாரங்களை மராட்டிய காவல்துறையைச்

சார்ந்த (ஐ.ஜி.) உயர் அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள், தன்னுடைய நூல்களில் நிரம்பவே வெளியிட்டிருக்கின்றார்கள்.

பார்க்க :

**1) கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்,**

**2) 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?,**

**3) பிராமிணிட்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கில் தொங்கினார்கள்,**

**4) இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு : புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்தது என்ன?**

இந்த மிகப்பெரிய சதித்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் முதன்முதலில் பலப் பொய்யான செய்திகளை முஸ்லிம்களுக்கெதிராக வெளியிடும் தினமலர்-தான் வெளியிட்டது.

தினமலரில் இடம்பெறும் பொழுது போக்குப் பகுதியான 'டீக்கடை பெஞ்ச்' பகுதியை பயன் படுத்தியது. அதில் 26.2.2020 அன்று அதில் முஸ்லிம்கள், கொரோனா ஜிஹாத், செய்கின் றார்கள் எனச் செய்தியை வெளியிட்டது.

உடனேயே நாம் தாருல் இஸ்லாம் சார்பில் அதன்மீது தினமலர் மீது வழக்குத் தொடர முயற்சிகளை மேற்கொண்டோம்.

மூன்றாவது நாள், அதே டீக்கடை பெஞ்ச் பக்கத்தில், ஒரு மறுப்பை வெளியிட்டது. அந்த மறுப்பில் அது, அதாவது முஸ்லிம்கள் கொரோனா ஜிஹாத்-ஐ செய்கின்றார்கள், என வெளியிட்ட செய்தி உளவுத்துறை தந்த செய்தி, இப்போது அது அந்தச் செய்தி பொய் என்று கூறிவிட்டது, என்றது.

இதற்குள் பல்வேறு தனி மனிதர்களும் முஸ்லிம் அமைப்புகளும் (ONLINE) ஆன்-லைன் புகார்களை முதலமைச்சர் பிரிவுகளும் - காவல் துறைக்கும் கொடுத்தன.

## சுகாதாரத்துறை செயலர்

தினமலர் மறுப்புச் செய்தி வெளியிட்ட அன்று மாலை தமிழ்நாடு சுகாதார துறை செயலாளர் பீலா ராஜேஷ் அவர்கள், கொரோனா பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய புள்ளி விபரங் களைத் தந்திடும்போது, தப்லீக் மர்கஸ்சிற்குச்

- *8-12-2019* சீனாவில் கொரோனா ஆரம்பம்.
- *21-12-2019* சீனா அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு.
- *15-1-2020* உலகெங்கும் கொரோனா படர்ந்தது.
- *18-1-2020* உலக ஆரோக்கிய அமைப்பு எச்சரிக்கை
- *30-1-2020* முதல் வருகை கேரளாவில்
- *7-2-2020* ரஷ்யா வடகொரியா நாடுகள் தங்களது எல்லையை மூடின.
- *12-2-2020* ராகுல் காந்தி அறிக்கை (இந்தியா வில் கொரோனா பரவி விட்டதாக அறிக்கை)
- *13-2-2020* மத்திய அரசு ஏகடியம்.
- *16-2-2020* 5000 பேர் கலந்துகொண்ட கோடுத்தா மாநாடு ஏற்பாடு. இந்து மகா சபை.
- *21-2-2020* ஜக்கி வாசுதேவ் கோவையில் சிவ ராந்திர பூஜை ஏற்பாடு. (ஜக்கி வாசுதேவ், இதில் பல வெளி நாட்டவர்களும் பங்கேற்பு)
- *23-2-2020* ஒரு வாரமாக டெல்லியில் வன்முறை கட்டங்கள்.
- *24,25-2-2020* அமெரிக்க அதிபர் டிரம்ப் திருவிழா, லட்சம் பேர் பங்கேற்றதாகப் பீற்றல்.
- *8-3-2020* ஜனாதிபதி மாளிகையில் 500 மகளிர் கலந்துகொண்ட மகளிர் தின விழாக் கொண்டாட்டம்.
- *10-3-2020* குஜராத் அஹமதாபாத் கய்பூரில் 40,000 பேர் கலந்துகொண்ட ஹோலி பண்டிகை திருவிழா.
- *11-3-2020* உலக ஆரோக்கிய அமைப்பு கொரோனா PANDAMIC என்ற பெருந்தொற்று நோய் என அறிவிப்பு.
- *12-3-2020* 50,000 பேர் கலந்துகொண்ட சீக்கியர் மத திருவிழா.
- *13-3-2020* மத்திய அரசு கொரோனா ஒரு மருத்துவ நெருக்கடி A HEALTH EMERGENCY என அறிவிப்பு.
- *13,14,15-3-2020* டில்லியில் தப்லீக் மாநாடு.

■ *15-3-2020* விளம்பரம் இல்லாமல் மத்திய பிரதேச அரசு கவிழ்ப்பு.

■ *15-3-2020* கர்நாடக பி.ஜே.பி. எம்.எல்.ஏ. மகள் திருமண நிகழ்ச்சியில் எடியூரப்பா 5000 பேருடன் பங்கேற்பு.

■ *16-3-2020* லண்டனிலிருந்து வந்த கண்ணிகாகபூர் நிகழ்ச்சியில் பி.ஜே.பி. VIP-க்கள் கலந்துகொண்டனர். 1000 பேர் கலந்துகொண்ட தில் துஷ்யந்த் சிங் எம்.பி. கலந்துகொண்டு பாராளு மன்றம் சென்ற நிகழ்வு. பலப் பிரச்சிளை உருவாக்கியது.

■ *17-3-2020* திருப்பதியில் 40,000 பேர் அடைத்து வைக்கப்பட்டு, தரிசனம் முடிந்ததும் வெளியேற்றப்பட்டனர்.

■ *19-3-2020* சமூக இடைவெளி குறித்து மோடி முதன் முதலாக அறிவிப்பு.

■ *22-3-2020* ஒருநாள் ஊரடங்கு - கை தட்டுதல்.

■ *24-3-2020* உ.பி. முதல்வர் 10,000 கலந்து கொண்ட ராம நவமி திருவிழா நடத்தினார்.

■ *25-3-2020* ஊரடங்கு 21 நாட்கள் தொடர் மத்திய அரசு அறிவிப்பு.

■ *2-4-2020* மருத்துவ ஏற்றுமதிக்கான தடை அறிவிப்பு.

■ *3-4-2020* அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டல்

■ *4-4-2020* டிரம்ப் மிரட்டலுக்குப் பயந்து மருந்து ஏற்றுமதிக்கான தடை நீக்கப் பட்டது.

■ *5-4-2020* விளக்கு ஏற்ற மத்திய அரசு அறிவிப்பு.

■ *6-4-2020* விளக்கு ஏற்றம் என்ற பெயரில், பா.ஜ.க.வினர் பட்டாசு வெடித்து பல குடிசைகள் எரிந்தன.

■ *13-4-2020* மீண்டும் 19 நாட்கள் மே-3 வரை ஊரடங்கு நீட்டிப்பு.

■ *12-5-2020* மேலும் 15 நாட்கள் ஊர டங்கு பின்னர் ஜூன்-1 வரை ஊரடங்கு

சென்று வந்தவர்களுள் இத்தனை பேர் எனப் பிரித்து புள்ளி விபரங்களை வெளியிட்டார்கள்.

சுகாதாரத்துறை செயலாளர் அவர்களின் அறிக்கையில் பத்திரிகைகளும் ஊடகங்களும், புதுத்தெம்பைப் பெற்றன.

மீண்டும் தப்லீக் ஜமாஅத் முஸ்லிம்கள் - கொரோனா பரவல் என இடைவிடாமல் பரப்பிக் கொண்டே இருந்தார்கள்.

நமது சன் டிவி தொலைக்காட்சி, இத்தனை மிகையான அதிர்ச்சிகளைக் கூட்டி வெளியிட்டது.

செய்திகளை வாசிக்கும்போது, கொரோனா எப்படி பரவுகின்றது என்ற மர்மம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. அது தப்லீக் ஜமாஅத் டெல்லி மாநாட்டிலிருந்துதான் பரவுகின்றது எனக் குறிப்பிட்டது.

இந்தச் செய்தியை மிகவும் பரவலாக மக்களைச் சென்றடைந்திட காரணம் சன் டி.வி.தான் மக்களால் அதிகமாப் பார்க்கப்படுகின்றது.

## இதர தொலைக்காட்சிகள்

சன் டி.வியே இப்படி என்றால் இதர தொலைக்காட்சிகள் கேட்கவா வேண்டும். வெறும் வாயிக்கு அவல் கிடைத்த கதையாக முஸ்லிம்களை மென்று விழுங்கின.

இந்த தொலைக்காட்சி செய்திகளுக்கு சாட்சியம் சொல்வதைப் போல், சுகாதாரத் துறை செயலாளர் தினமும் கொரோனா தொற்றில் இத்தனை பேர் தப்லீக் மர்கஸ் டெல்லி மாநாட்டுக்குச் சென்று வந்தவர்கள் எனத் தூபம் போட்டுக் கொண்டே இருந்தார். சுமார் 500 புகார்கள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து முதல மைச்சர் தனிப்பிரிவுக்கு அனுப்பப்பட்டன. ஆனாலும் ஓயவில்லை. தொடர்ந்து கொண்டே தான் இருந்தது.

ஏறத்தாழ 15 நாள்கள் தொடர் பேராட்டத் திற்குப் பின்னரே ஓய்ந்தது. தலைமைச் செயல ருக்குப் பதிலாக சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் செய்திகளைத் தரத் தொடங்கினார்.

## சமூக ஊடகங்களில்

சமூக ஊடகங்கள் வழி பொய்யை ஊர் சுற்றிட விடுபவர்களில் வேகமானவர்கள் நமது சங்கிகள்.

இதற்காக நாடெங்கும் *1,20,000* (ஒரு லட்சத்து இருபதாயிரம்) பேரை முழு நேரமாக நியமித்திருக்கின் றார்கள், என்பது *2014* தேர்தல் செய்தி. பின்னர் ஒரு பதிவுக்கு இவ்வளவு என்று ஒரு ஆடியோவுக்கு இவ்வளவு என்றும், ஒரு வீடியோவுக்கு இவ்வளவு என்றும் வழங்கப்படுகின்றது.

**கான்பூர் (உத்திரப்பிதேசம்) அரசு மருத்துவக் கல்லூரியின் முதல்வர், கீர்த்தி லால் சந்தினி என்ற அம்மணி, தப்லீக் ஜமாஅத்-ஐ சேர்ந்தவர்களை சிறையில் தள்ளுங்கள் நாம் ஏன் அவர்களுக்கு நமது பணத்தைச் செலவு செய்ய வேண்டும் எனக் கூறி இருக்கின்றார். இது உலக அளவிலும், நம் நாட்டிலும் மிகப்பெரிய எதிர்ப்புகளைக் கிளப்பி இருக்கின்றது. 7-5-2020**

நீட்டி முழக்காமல் சொன்னால், சமூக ஊடகங் களின் வழி எந்த அசைவைச் செய்தாலும், அவர்களுக்குப் பணம் வழங்கப்படுகின்றது. இவர்கள் வெறுமனே பணத்திற்காகப் பொய்யைப் பரப்புபவர்கள் என்றில்லை. மாறாக அவர்களின் கொள்கையும் கூட.

தங்களுடைய கொள்கைகளுள் ஒன்றான மத்திய, மாநில அரசுகளின் பாராட்டும், பாதுகாப்பும் கிடைக்கின்றன,அவ்வளவுதான்.

தமிழகத்தில் களமிறங்கிய சங்கிகளை முஸ்லிம்கள் நன்றாகவே எதிர்கொண்டார்கள். அதில் *48* பேர் கைது செய்யப்பட்டதாகவும், *94* பேர் மீது வழக்குகள் பதியப்பட்டிருக்கின்றன. நீதிமன்றங்கள் முறையாகச் செயல்படத் தொடங்கியவுடன் இந்த வழக்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதை வழக்கறிஞர்கள் குழுக்கள் வழி பின் தொடர வேண்டும். இன்ஷா அல்லாஹ் அது நடக்கும்.

ஆனால், வட இந்திய முஸ்லிம்கள் - குறிப்பாக தமிழகமல்லாத மாநிலங்களில் இத்தகையதொரு விழிப்புணர்வு இல்லை என்பதை நாம் பார்க்கின்றோம்.

எத்தனையோ போன்களுக்குப்பிறகு ஜம்மியத்துல் உலமாயே ஹிந்த் ஒரு பெரிய வாக்கை உச்ச நீதிமன்றத்தில் தொடுத்தது.

உச்ச நீதிமன்றம் நாங்கள் தலையிட முடியாது எனக்கூறியது. PRESS COUNCIL என்ற பத்திரிகைகள் குழுமத்தை அணுகும்படி கூறி தட்டிக் கழித்தது.

சுகாதாரத்தறை செயலாளரை எதிர்கொண்ட இல்யாஸ் ரியாஜி ;

இதனிடையே நமது தலைமைச் செயலாளர் ஷண்முகம் அவர்கள் - தமிழக அரசின் தலைமைச் செயலாளர் செயலகத்தில் *3-4-2020* அன்று கூட்டம் கூட்டினார்கள்.

அதில் முஸ்லிம்களின் சார்பில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் பொருளாளரும், ஜமாஅத்துல் உலமா சபையின் துணைத் தலைவருமான பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி கலந்து கொண்டார்கள்.

அவர்கள் தப்லீக் ஜமாஅத்தையும் அதன் வழி முஸ்லிம்களையும் கொரோனா பரவலுக்குப் பழிப்பது தவறானது எனக் குறிப்பிட்டார்கள்.

தினமலர் பொய்ச்செய்தி ஒன்றைப் போட்டதும் பின்னர் அது உளவுத்துறை தந்தத் தகவல், அது உண்மையல்ல என உளவுத்துறை சொன்னது பொய் என்று உளவுத்துறையே சொல்லிவிட்டது என்பதையும் குறிப்பிட்டார். அத்தோடு சுகாதாரத்துறை செயலர் அவர்கள் அன்று மாலை முதல், கொரோனா புள்ளி விபரங்களைச் சொல்லிடும்போது, டெல்லி மர்க்ஸ் - டெல்லியிருந்து திரும்பி வந்தவர்கள் என்றே அழைத்தார்கள். இதனால்தான் முஸ்லிம்கள் மீது பழிசுமத்தப்பட்ட பழி அதிகாரப்பூர்வமானதாக ஆகிவிட்டது என்றார். இதை செவிமடுத்ததும் சுகாதாரத்துறை செயலர் மிகவும் வேகமாக எழுந்து சென்று விட்டார் என குமுதம் ரிப்போர்ட்டர் **10-4-2020** அன்று இதழ் குறிப்பிட்டது.

ஆக முஸ்லிம்களைக் குற்றப்படுத்திடும் செயல்கள், பதிவுகள், செய்திகள் இவை அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று வந்தது.

நமது புகார்கள், வழக்குகள் தொடரவேதான் அவை கட்டுக்குள் வந்தன.

## தொலைக்காட்சிகளின் நரித்தனம்

தப்லீக் ஜமாஅத் டெல்லி மாநாட்டுக்குச் சென்று வந்தவர்களில் செல்போன் எண்களை வாங்கிக் கொண்டுதான் அவர்களின் இல்லங்




களுக்குச் சென்று அவர்களைக் கட்டாயப்படுத்தி வேன்களில் மருத்துவ மனைகளுக்கு அழைத்துச் சென்றார்கள். இவர்களை அழைத்துச் செல்லும் வேன்கள் மருத்துவ மனைகளைச் சென்று சேருவதற்கு முன்னால் அங்கு தொலைக்காட்சி ஊடகங்கள் வந்து சேர்ந்தனர்.

இன்னும் சில இடங்களில், தொலைக் காட்சிக்குத் தகவல் சொன்ன பின்னர்தான் டெல்லி சென்று வந்தவர்கள் இல்லங்களுக்குச் சென்றார்கள். இதில், நமது உள்ளூர் உளவுத் துறையினர் தாராளமாக தங்கள் கைவரிசையை முஸ்லிம்கள் வெறுப்புணர்வைக் காட்டினார்கள். ஊடகங்களுக்குத் தகவல்களைச் சொன்னார்கள்.

ஒரு கட்டத்தில் கொரோனா செய்திகள் என்றால் முஸ்லிம்களின் படங்கள், காட்சிகள் என்றே ஆகிவிட்டது.

நாம் ஒரு பக்கம் எதிர்த்துக் கொண்டிருக்கும் போதே - பாமர மக்கள், முஸ்லிம்கள்தான் கொரோனாவைப் பரப்புகின்றார்கள் என நம்ப வைக்கப்பட்டு விட்டார்கள்.

மிகக் குறுகிய காலக்கட்டத்தில் படித்தவர்கள் - குறிப்பாக மருத்துவர்கள் இந்தப் பொய்ப் பிரச்சாரத்தில் வீழந்துவிட்டார்கள். இதனால் தங்கள் மருத்துவமனைக்கு நீண்ட நாள்களாக மருத்துவத்திற்கு வந்த முஸ்லிம் - நோயாளிகளைக் கூட பார்க்க மறுத்துவிட்டார்கள். இது மேட்டுப்பாளையம், மேலப்பாளையம், காயல்பட்டினம், திருச்சி என பல இடங்களில் நடந்தது.

காயல்பட்டினம் போன்ற இடங்களில் நீண்ட நாள்களாக, அதாவது கருவுற்ற நாள் முதலாகவே தன்னைக் காட்டி சோதனைகளுக்குப் உட்படுத்தி வந்த கற்பமுற்ற பிரசவ நேரத்தில் பார்க்க மிகவும் தயங்கினர். அவரை பலமணி நேரங்கள் வெளியே வைத்துப் பல விசாரணைக்கு உட்படுத்தினார். அவருடைய குடும்பத்தில் யாராவது டெல்லி தப்லீக் மாநாட்டுக்குச் சென்று வந்தார்களா? எனக் கேட்டுக் கொண்டே இருந்திருக்கின்றார். (சகோதரி ஃபாத்திமா முசாஃபர், பதிவு 3-4-2020)

மேலப்பாளையத்தில், அதேபோல் நீண்ட நாள்களாக காட்டிக்கொண்டிருந்த கர்ப்பணி பெண்ணை பார்க்க மறுத்த டாக்டர் அவருடைய மருத்துவ பரிசோதனைகள் அடங்கிய கோப்பை அவருடைய முகத்திலேயே தூக்கி எரிந்தார்.

திருச்சியில், ஒரு பிரசவத்திற்காகச் சென்ற கர்ப்பிணி பெண், வழக்கமாகத் தான் காட்டிடும் மருத்துவ மனையில் பிரசவம் பார்க்காததால் 8-வது ஒரு மருத்துவமனையைத் தேடிச் சென்றிட வேண்டிதாயிற்று. அங்கேயும் மறுக்கப்பட்டிருந்தால் அவள் பிணமாக ஆக்கப்பட்டிருப்பாள்.

இவையெல்லாம் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவில் எடுத்துக் காட்டப்

பட்டவைதான்.

மருத்துவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் என்றால், பொதுமக்கள் இந்த ஊடகத்தின் முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்திற்கு மிக எளிதாக பலியாகி இருந்தார்கள்.

## தடுப்புச் சுவர்கள்

தமிழகத்தில் மீஞ்சூர் (சென்னை) அதிராமப்பட்டினம் போன்ற இடங்களில் முஸ்லிம்கள் வாழுமிடங்களுக்கும் இடையே தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டன. பல இடங்களில் இந்த தடுப்புச் சுவர்களை, காவல்துறையும் சுகாதாரத்துறையும் இணைந்தே செய்தன.

இதில், மக்களைச் குறைச்சொல்லி எந்தப் பயனுமில்லை. ஏனெனில் தங்கள் உயிரையே காவு கொள்ளும் ஒரு நோய் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தவர்களால் பரவுகின்றது என்றால், அவர்கள் உறவுகளைவிட தங்கள் உயிர்களைத் தானே பெரிதாக எடுத்துக்கொள்வார்கள்.

இப்படி ஒரு விஷமத்தைப் பரப்பிய ஊடகங்களை இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றிட வேண்டும் முஸ்லிம்களைப் பற்ற.

## பாமரர்களின் மனநிலை - அரசியல்வாதிகள் மனநிலை

மேட்டுப்பாளையத்தில் இட்லி, தோசை மாவுகளை விற்பனை செய்து கொண்டிருந்த முஸ்லிம் சகோதரி ஒருவரிடம் நீங்கள் எங்களிடம் வர வேண்டாம், உங்களால்தான் கொரோனா பரவுகின்றது எனக் கூறி இருக்கின்றார்கள். அந்தச் சகோதரி மனம் உடைந்து போயிருக்கின்றார்கள்.

நாகை மாவட்டம், ஒரு கிராமத்தில் முஸ்லிம்கள் மக்கள் கொடுத்த கொரோனா நிவாரப் பொருள்களை மக்கள் மறுத்திருக்கின்றார்கள்.

மேட்டுப்பாளையத்திலும் இதுபோன்ற ஒரு நிகழ்வு அங்கும் அண்ணா தி.மு.க. கவுன்சிலர் ஒருவர் நிவாரணப் பொருள்களைக் கொண்டு சென்ற முஸ்லிம் அமைப்பினரை துரத்தி அடித்தார். அப்படித் துரத்தும்போது நீங்கள் தானே கொரோனாவைப் பரப்புகின்றீர்கள் எனக்கூறி இருக்கின்றார்.




அதேபோல், ஆனமலையில் அண்ணா தி.மு.க.வின் முக்கியப் பிரமுகர் ஒருவர் நடுரோட்டில் நின்றுகொண்டு இப்படிக் கத்தி இருக்கின்றார்.

கடையநல்லூரில் உள்ள தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை மருத்துவ பாதுகாப்பில் வைத்திட, ஆலடி அருளா அவர்களின் கல்லூரியில் இடம் கேட்டபோது நீங்கள் அவர்களை சிறையில் வையுங்கள் ஏன் அவர்களை இங்கெல்லாம் அழைத்து வருகிறீர்கள் எனக் காவல்துறையோடு மோதும், காட்சிகள் திரும்பத் திரும்ப காட்சி ஊடகங்களில் காட்டப்பட்டன.

## நாகர்கோவிலில்

வெள்ளாடிச்சிவனாயில் ஒரு பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர், தனது காரில் சென்று காவல்துறையினரை அழைத்து வந்து தன் பகுதியிலிருந்த ஒரு முஸ்லிம் குடும்பத்தை படாய் பாடுபடுத்தி அவர்களைத் தனிமைப்படுத்தும் வார்டுக்கு அழைத்துச் செல்ல வைத்தார். மொத்தக் காவல்துறையையும், சுகாதாரத் துறையில் ஒரு பிரிவினரையும் அங்கே வர வைத்தார். காரணம், அந்தக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் தப்லீக் ஜமாஅத் மாநாட்டுக்கு டெல்லி சென்று வந்தாராம்.

இப்படி வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர், 5 மாத கர்ப்பிணிப் பெண். தப்லீக் ஜமாஅத்திற்கு சென்று வந்தவர்களைத் தனிமைப்படுத்தும் முகாமிற்கும், குடும்பத்தை வீட்டிலேயே கட்டுப்பாட்டிலும் வைத்திருந்த காலம் அது. வீட்டிற்கு வந்து சுகாதாரத்துறையைச் சார்ந்தவர்கள் பரிசோதனையை செய்தும் சென்றார்கள். ஆனால் முஸ்லிம்களைத் தனிமைப்படுத்துவதிலும்,

அவர்கள்தான் கொரோனாவைப் பரப்புகின்றார்கள் என்பதை மக்கள் மத்தியில் பதிய வைக்கவுமே இதுபோன்ற கெடுபிடிகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

தாருல் இஸ்லாம் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அவர்கள் கேட்கவில்லை. பா.ஜ.க. வைச் சார்ந்த ஒருவர் கொடுத்த அழுத்தமே இதற்குக் காரணம். இதில் கோட்டார் காவல்துறை துணை ஆய்வாளர் சரவணகுமார் எடுத்துக்கொண்ட ஆர்வம் அலாதியானது.

பின்னர் வயதான மூதாட்டி, கர்ப்பிணி பெண் முதலானோர் வலுக்கட்டயாமாக வேனில் ஏற்றப்பட்டு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தவறாமல் இந்தச் செய்தியை பத்திரிகைகளுக்கும் கொடுத்தார்கள். ஒவ்வொரு பத்திரிகையும் தங்கள், தங்கள் கற்பனையின்படி செய்திகளை வெளியிட்டார்கள்.

அடுத்தநாள் நாகர்கோவில் மாநகராட்சி கமிஷனர், சமூக சேவையில் ஈடுபட்டு வந்த அதாவது நகராட்சியின் சார்பில், வாழ்வாதா ரத்தை இழந்தவர்களுக்கு உணவு வழங்கிடும் சேவையில் ஈடுபட்டு வந்த பத்து முஸ்லிம் தன்னார்வர்களைத் தனிமைப்படுத்தி, அவர்களி டமிருந்து அடையாள அட்டைகளைக் கைப் பற்றி அதனையும் பத்திரிகைகளுக்குச் செய்தி யாகக் கொடுத்தார்கள்.

இப்படி நாள்தவறாமல் முஸ்லிம்கள்தாம் கொரோனாவைப் பரப்புகின்றார்கள் எனச் செய்தியைக் கொடுத்துக்கொண்டே இருந் தார்கள்.

இதுபோதிய அளவு தாக்கத்தை பாமர மக்களிடம் ஏற்படுத்தாமலில்லை.

அதே நாகர்கோவிலில் அப்போது தனது குழந்தைக்கு ஆடை வாங்கிடச் சென்ற ஒரு பெண்ணிடம், அம்மா கடைக்குள்ளே வராதீர்கள். உங்களால்தான் கொரோனா பரவுகின்றது என்கின்றார்கள் எனக்கூறி இருக்கின்றார் அந்தக் ஆடையகக் கடைக்காரர்.

இப்படி, மக்களின் மனங்களில் முஸ்லிம்கள் மீது வெறுப்பை வளர்க்கும் துரோகிகள் அனை வரையும் குமரி மாவட்ட மக்கள் வீழ்த்தி னார்கள். தப்லீக் ஜமாஅத் டெல்லி மாநாடு சென்று வந்தவரின் வீட்டிலுள்ளவர்கள் அனை வரும் ஆரோக்கியமாகவே வீடு திரும்பினார்கள். அல்லாஹ்வின் உதவியோடு ஆதுமதியாளர்களின் சூழ்ச்சியை வீழ்த்தினார்கள். ஆனால், பாமர மக்களின் மனங்களிலிருந்து அந்த பீதி முழுமையாக விடுபட்டதாகத் தெரியவில்லை.

## ஈரோடு மாவட்டம்

ஈரோட்டிற்குத்தான் முதன் முதலில் டெல்லி மாநாட்டுக்குச் சென்றவர்கள் திரும்பி வந்தார்கள். இவர்கள் டெல்லியிலிருந்து வந்ததால் அன்றைக்கு தமிழ்நாட்டிலேயே அதிக தொற்று உள்ள மாவட்டமாக ஈரோடு அறிவிக்கப்பட்டது. அந்த மாவட்டத்தின் பல கிராமங்கள் ஒட்டு மொத்தமாக சீல் வைக்கப் பட்டது.

கொரோனா தொற்று இருந்தவர்களும் இல்லாதவர்களும் குத்து மதிப்பாக மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். டெல்லி தப்லீக் மாநாட்டுக்குச் சென்று வந்தவர்கள் என்ற முஸ்லிம் வெறுப்புப் பிரச் சாரத்திற்கு இதனை போதுமான அளவுக்குப் பயன்படுத்திய பின்னர்தான் யதார்த்தங்களை உணர்ந்தார்கள்.

பின்னர் தமிழகத்தில் முதன்முதலாக "பச்சைப்பகுதி" என அழைக்கப்பட்டது ஈரோடு மாவட்டம். இந்தப் பச்சைப்பகுதி (GREEN ZONE) என்ற நிலையே ஒரு குறிப்பிட்ட காலம்வரை நிலைத்தது. பச்சைப் பகுதி தகுதியை எப்போது இழந்தது ஈரோடு என்றால் கோயிலுக்குச் சென்று வந்தவர்கள் 6 பேருக்கு கொரோனா என்ற செய்தி வந்த பின்னர்தான், ஈரோடு பச்சை மண்டலத்திலிருந்து வெளியே வந்தது.

**உலக நாடுகள் எங்கும் ஊரடங்கு தளர்வுக்குப் பின் தொற்றின் வேகம் குறைந்திருக்கின்றது. ஆனால் இந்தியாவில் மட்டுந்தான் ஊரடங்குக்குப் பின் தொற்றின் வேகம் மிகையாக அதிகரித்திருக்கின்றது. நியூஸ் 18 நியூஸ். அனாலிபிஸ் 7-6-2020**







டெல்லி மாநாட்டுக்குச் சென்றவர்கள், எந்த நிலையிலும் கொரோனா பரவலுக்கு காரணம் இல்லை என்பது நடைமுறை உண்மை.

ஆனால், மக்கள் மனதிலிருந்து கொரோனா முஸ்லிம்களால்தான் பரவுகின்றது என்ற எண்ணம் முற்றாக அகலவில்லை.

முதலில் தப்லீக் ஜமாஅத் - டெல்லி மாநாடு முஸ்லிம்கள், என தண்டோரா போட்ட எந்த ஊடகமும் இந்த உண்மையை ஒருமுறை கூட சொல்லிடவில்லை.

## திருச்சி

டெல்லி தப்லீக் ஜமாஅத்-ஐ சார்ந்தவர்கள் விவகாரத்தில் அரசு மிகவும் அசட்டையாகவே நடந்து கொண்டார்கள். அவர்களை அரசு மருத்துவமனைகளில் எடுத்த எடுப்பில் பொது வார்டுகளிலே எல்லோருடனும்தான் அனுமதித் தார்கள். அங்கே ஏற்கெனவே தொற்றுள்ளவர்கள் இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் தொற்றுள்ளவர்களையும் தொற்று இல்லாதவர்களையும் ஒரே இடத்தில் வைத்து இவர்களுக்கும் தொற்றை வர வைக் கின்றார்களோ என்ற எண்ணம் மேலோங்கத் தொடங்கியது.

திருச்சியைச் சார்ந்த சமூக ஆர்வலர்கள் முஹம்மத் இக்பால் குழுமம் வழக்கறிஞர் கமருத்தீன் நண்பர்கள் ஆகியோர், தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் நடவடிக்கைகள் இவற்றால் பின்னர் தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள், இதர நோய்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டார்கள். உணவும், மருந்துகளும், அனுமதிக்கப்பட்டு ஓரிருநாள் கடந்த பின்னர்தான் வழங்கப்பெற்றது.

இந்த நாள்களில் சமூக ஆர்வலர்களே உணவு சமைத்துக் மருத்துவமனைக்குக் கொண்டுபோய் கொடுத்தார்கள். இதுவே தமிழகத்திலுள்ள பல்வேறு மருத்துவமனையிலும் நடத்திருக் கின்றது. இதனை நமது கள ஆய்வாளர்களும், நாம் தொடர்புகொண்ட இதர சமூக ஆர்வலர் களும், உறுதிப்படுத்தினார்கள். சம்மந்தப்பட்ட வர்களும் வீடியோ பதிவுகளை வெளியிட்டி ருந்தனர்.

முஸ்லிம்கள்தாம் கொரோனாவைப் பரப்பு கின்றார்கள் என்பதை எல்லோரும் நம்பிட வேண்டும் என்பதற்காக, மருத்துவ விடுதிகள், அனைத்தையும் காற்றிலே பறக்கவிட்டார்கள். நோயாளிகள் - தொற்று பட்டவர்கள் என இவர்கள், அழைத்துச் சென்றவர்களின் பெயர்கள், முகவரிகள், அலைபேசி எண்கள் இவற்றையெல்லாம் வெளியிட்டார்கள்.

சமூக ஆர்வலர்களும், வழக்கறிஞருமான கமருத்தீன் அவர்கள், இதனை நீதிமன்றத்திற்கு எடுததுச் சென்றிட முயற்சிகளை மேற் கொண்டார்.

எனினும், மக்கள் மனதில் முஸ்லிம்கள்தாம் கொரோனாவைப் பரப்பினார்கள் என்பதை பல்வேறு வழிகள் வழி - விஷமப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள்.

எல்லோருக்கும் நோய்த்தொற்று (+Positive') உறுதி செய்யப்பட்டது என்று கண்களை மூடிக்கொண்டு அறிவித்தார்கள். அரசுத் துறையும் ஜால்ரா போட்டது.

ஒவ்வொரு முறையும் தமிழகத்தில் இத்தனை தொற்றுக்கள் அதில் டெல்லி மர்கஸ் மாநாட்டுக்குச் சென்று வந்தவர்கள் இத்தனை பேர் என்றே கணக்குச் சொன்னார்கள். இதில் ஏற்பட்ட எண் கணித அரிச்சுவடி தவறுகளைப் பற்றிக் கூட அவர்கள் கவலைப்படவில்லை.

எல்லோருக்கும் தொற்று உறுதி (+Positive) என்கின்றார்களே அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதை நாம் கண்காணித்துக் கொண்டே இருந்தோம்.

கள ஆய்வாளர்களைத் தொடர்புகொண்ட போதெல்லாம், அவர்கள் நன்றாகவே இருக்கின் றார்கள். நோய் தொற்றுக்காகச் சொல்லப்படும் எந்த அறிகுறியும் இல்லை. - என்றே தகவல்கள் வந்தன. என்றாலும் சில இடங்களில் 14 நாள் களுக்குப் பதிலாக 28 நாள்கள் வரை டெல்லி சென்று வந்தவர்கள், தனிமைப்படுத்தப் பட்டார்கள்.

## நலம் பெற்றார்கள்

அல்ஹம்துலில்லாஹ்! திருச்சி தப்லீக் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் குணம் பெற்று நலமாக வீடு திரும்பினார்கள்.

## வீடு திரும்பும்போது படப்பிடிப்பு

திருச்சியில் மட்டுமல்ல இதர இடங்களிலும் டெல்லி தப்லீக் ஜமாஅத் மாநாட்டுக்குச் சென்று வந்தவர்கள், மருத்துவமனைகளுக்கு இழுத்துச் செல்லும்போதுதான் படமெடுத்தார்கள், ஊரெல்லாம் உசுப்பிவிட்டார்கள் என்றால், அவர்கள் வீடுகளுக்குத் திரும்பும் போதும் படமெடுத்தார்கள், பவனிவர விட்டார்கள்.

நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவமனை யிலிருந்து வீடு திரும்பும்போது நோயாளிகளை படமெடுக்கும், அறிய பழக்கம் ஒன்றை நமது தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்கள்.

இப்போது, மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் போது, படமெடுத்து, வழியனுப்பி னார்கள்என்பது, முஸ்லிம்கள்தாம் அதிக அளவில் நோய்த் தொற்றுக்கு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் எனக் காட்டவும், அவர்களை அரசு நன்றாக கவனித்தது என்றும் காட்டிடத்தான் என நாம் நம்புவோம்.

ஆனால், இப்போதும் கொரோனாவுக்கு முஸ்லிம்களே காரணம் என்பது மட்டும் மக்கள் அனைவருக்கும் நினைவூட்டப்பட்டது.

## திருச்சியில் நடந்த பிரிதொரு நிகழ்வு

மக்கள் மன்றத்தில் கொரோனா செய்தி யோடு முஸ்லிம்களை எப்போதும் இணைத்துக் காட்டிட வேண்டும், அது மக்கள் மனங்களி லிருந்து அகன்று விடக்கூடாது என்பதற்காக இன்னொரு உத்தியைக் கையாண்டார்கள்.

அது, தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் யார், யாரோடெல்லாம் தொலைபேசி, கைபேசி வழியாகத் தொடர்பு கொண்டார்களோ, அவர்களையெல்லாம் தொடர்பு கொண் டார்கள். நீங்களும்தனிமைப்படுத்தலுக்கு வந்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். காவல்துறையையும் இதில் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். வழக்கறிஞர் கமருத்தீன் அவர்களின் தலையீடுகளுக்குப் பின்னரே இந்தக் கொடுமை அகன்றது.

அவர்களும் - தப்லீக் ஜமாஅத்துக்கு சென்று வந்தவர்களும் மருத்துவமனைக்கு வந்திருந்தால் அவர்களையும் தொலைக்காட்சியில் காட்டி அணி அணியாக முஸ்லிம்கள்தாம், இதில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற பொய்யை பொதுமக்களின் மனதில் மீண்டும் பதிய வைத் திருப்பார்கள். இப்படிப் புதுப்புது வழிகளைக் கண்டு பிடித்துக்கொண்டே இருந்தார்கள்.

## இறந்தார் - முஸ்லிம் என்றொரு பொய்ச்செய்தி!

முஸ்லிம் ஒருவர் (-திருவாணைக்காவலில்) ஒரு வெஜிடேரியன் ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்தார். அதில் வியாபாரமும், நீண்ட நாள்களாக நன்றாகவே நடந்து வந்தது. கொடிக்கட்டிப் பறந்த அந்த வியாபாரத்தை இந்துத்துவ தீவிரவாதிகள் குமுறினார்கள். அந்த ஹோட்டலை எப்படியாவது, இழுத்து மூடிட வேண்டும் என நீண்ட நாள்களாக திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வந்தார்கள்.

முடிவில் இந்தக் கொரோனா காலத்தைப் பயன்படுத்துவது என முடிவு செய்தார்கள்.

இந்த ஹோட்டல் முதலாளி (முஸ்லிம்) கொரோனாவால் இறந்து விட்டார்கள் என ஒரு பொய்யைப் பரப்பினார்கள். உடனேயே முஸ்லிம்கள் இதை மறுத்தார்கள். அவரைப் படமெடுத்துப் போட்டார்கள். தங்கள் பொய் அம்பலமாகிவிட்டது என வெட்கப்பட்டு விட்டுவிடவில்லை. தொடர்ந்தார்கள், தங்கள் பொய்ப் பிரச்சாரத்தை இப்போது இன்னொரு பொய்யைப் பரப்பினார்கள். அந்த ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த ஊழியர்கள் கொரோனா தொற்றோடு அலைந்துக் கொண்டிருக்கின்றார்கன் என்றார்கள்.

இப்படி எதையாவது சொல்லி முஸ்லிம்கள் தாம் கொரோனாவைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை ஒழித்தால் கொரோனா ஒரிந்துவிடும் என்றொரு தோற்றத்தை உருவாக்கினார்கள்.

## கொரோனாவுக்கு மருந்தாக தப்லீக் ஜமாஅத்தார்கள்

தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவு (-நெகட்டிவ்) தொற்று இல்லை என வந்தாலும் அவர்களைத் தொடர்ந்து சோதனைக்கு ஆளாக்கிக் கொண்டே இருந்தார்கள். ஏதாவது சோதனையில் (+பாசிட்டிவ்) தொற்று இருக்கின்றதா எனக் கண்டறிய முயன்றார்கள். எல்லா சூழ்ச்சியிலிருந்தும் அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான்.

எல்லா முயற்சிகளும் தோற்றுப்போனபின் அவர்களிடம், நீங்கள் ஏதோ வித்தியாசமாகச் செய்கின்றீர்கள் அது எனக் கேட்கத் தொடங்கினார்கள்.

நாங்கள் தினமும் ஐந்து வேளை குறையாமல் தொழுகின்றோம், அதற்காக கைக் கால்களைக் கழுவுகின்றோம் என்றார்கள். கொரோனோ தொடங்கிய காலந்தொட்டே கைக் கழுவுவதை மட்டுந்தான் மருந்தாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். முகக் கவசம் கூட பின்னர்தான் மாபெரும் மருந்தாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

கையையும், முகத்தையும், மூக்கையும் நன்றாக கழுவுவது (உளூ) என்ற தொழுகைக்கான சுத்தத்தின் முக்கியப் பகுதி. இதனை (தொழும்) முஸ்லிம்கள், ஆண்டாண்டுகாலமாகச் செய்து வருகின்றார்கள். - அதாவது கொரோனாவின் முதல் மருந்தை முஸ்லிம்கள் தொன்று தொட்டே நடைமுறைப் படுத்தி வருகின்றார்கள்.

தப்லீக் ஜமாஅத்தவர்கள் சில (முஸ்தஃபிலன்) சிறப்பான தொழுகையை - ஐங்கால தொழுகையோடு தொழுவதால் அவர்கள் அடிக்கடி 'உளூ' என்ற கை, மூக்கு, முகம் ஆகியவற்றைக் கழுவுவார்கள்.

இதைக்கேட்ட மருத்துவர்கள், இஸ்லாத்தைப் பற்றி ஓர் நல்ல முடிவுக்கு வந்திருப்பார்கள். அதன்பின்னர் 'பிளாஸ்மா' என்ற கொரோனாவைக் கொல்லும் இரத்த அணுவும் அவர்களிடம் இருப்பதாகக் கண்டறிந்தார்கள். பிளாஸ்மா கிசிச்சையும் மிகவும் அரிதாக வழங்கப்பெற்றது.

இந்நிலையில், இவர்களின் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட தப்லீக் ஜமாஅத்தவர்களின் கைபேசி எண்களை இப்போதும் வாங்கினார்கள். வேறொரு காரணத்திற்காக, அது தேவைப்பட்டால் பிளாஸ்மாவுக்கு அழைக்கலாம் என்பதே அந்த வேறொரு காரணம்.

ஆக, நோயாக போய் மருந்தாக வெளியே வந்தார்கள். அல்ஹம்துலில்லாஹ்!

## மயிலாடுதுறை - நீடூர்

தப்லீக் ஜமாஅத் டெல்லியில் முஸ்லிம்கள் கொரோனா என செய்திகள் வந்து கொண்டே இருந்த நிலையில் நாம் பல வழக்குகளைத் தொடர்ந்தோம். இதனால் அந்த அலைசற்று ஓய்ந்தது.

ஆனால், திடீரென சன் தொலைக்காட்சியில் ஒரு செய்தி, அந்தச் செய்தியில் நீடூரைச் சார்ந்த மருத்துவர் ஒருவர் தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களுக்கு அடைக்கலம் தந்ததற்காக கைது எனக் குறிப்பிட்டார்கள்.

உடனே நாம் மாயவரத்தைச் சார்ந்த அப்துல் ரவூஃப், தாரிஃப் ஆகிய சகோதரர்களைத் தொடர்புகொண்டு, அந்த மருத்துவர் யார் என்றும், நடந்தது என்னவென்றும் வினவிவோம். அவர்கள் உடனேயே ஒர் கள ஆய்வை




மேற்கொண்டு நமக்குப் பின்வரும் தகவல்களைச் சொன்னார்கள்.

மக்களுக்குச் சொந்தமான சிலர் பிரான்சில் உள்ளார்கள். அவர்கள் தப்லீக் செல்வதும் வழக்கம். அவர்கள் காரைக்கால் பகுதிகளுக்குச் சென்று பின்னர் நீடூர் வந்துள்ளாரக்ள். அவர்கள் மீண்டும் பிரான்ஸ் செல்வதற்கு எல்லாவிதமான பாஸ்போட்டுகளையும் வைத்திருந்தாலும், அன்று முழு ஊரடங்கு இந்தியா முழுவதும் அறிவிக்கப்பட்டுவிட்டதால், அவர்கள் ஊருக்குத் திரும்புவதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றிடவில்லை. அதனால் டாக்டர் அவர்கள் இருப்பதை, கலெக்டர் அலுவலகம், உள்பட எல்லா அதிகாரிகளுக்கும் அறிவித் திருக்கின்றார்கள். அதிகாரிகள் வந்து தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு உணவு வழங்குவது போன்ற அடிப்படை வசதிகளைக் கவனிப்பதை டாக்டர் அவர்கள் பொறுப்பேற்றி ருக்கின்றார்கள். வந்த அதிகாரிகளை பள்ளி வாசலில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதி என ஓர் அறிக்கையையும் ஒட்டிவிட்டுப் போய் விட்டார்கள்.

திடீரென காவல்துறையினர் ஒருநநள் வந்து டாக்டரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர் தப்லீக் ஜமாஅத்தார்களுக்கு அடைக்கலம் கொடுத்தார், மருத்துவ உதவிகளை மீறினார் என்றெல்லாம் குற்றம் சாட்டி உள்ளார்கள். ஒருநாள் காவல் நிலையத்தில் வைத்திருக்கின்றார்கள். பின்னர் அன்று மாலை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். ஆனால் நீதிபதி அவர்கள், அவரைத் தடுப்புக் காவலில் வைத்திட மறுத்து விட்டார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று விட்டார் மருத்துவர்.

## மீண்டும் சன் தொலைக்காட்சி

இந்தச் செய்தியை நீடூரில் தப்லீக் ஜமா அத்தாருக்கு அடைக்கலம் கொடுத்த மருத்துவர் அவர் பெயரையும் போட்டு கைது என்று அண்மைச் செய்தியில் போட்டுக்கொண்டே இருந்தார்கள். நீடூர் ரவூஃப், தாரிஃப், சாதிக் அவர்களைத் தொடர்புகொண்டு மேற்சொன்ன விபரங்களைத் திரட்டியதைச் சொன்னபோது, அவர்கள் எங்கள் நீடூர் செய்தியாளர் தந்த செய்தி யைத்தான் போட்டிருக்கின்றோம் என்றார்கள்.

இதனிடையே தம்பி தாரிஃப் முதலானவர்கள், சன் தொலைக்காட்சி, நிருபரைத் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். அவர் போலிஸ் தந்த செய்தியைத்தான் கொடுத்தேன் எனச் சொல்லி

இருக்கின்றார்.

சன் டி.வி.யினர் மறுப்பை டாக்டரே சொன்னால் நாங்கள் ஒளி பரப்புகின்றோம் என்றார்கள். டாக்டரை நாமும், வைகறை வெளிச்சம் நிருபர்களும் பலமுறை கைபேசியில் அழைத்தும்அவர் கைப்பேசியை எடுக்கவில்லை. அதற்குமேல் நாம் அந்தப் போரைத் தொடர்ந்திட இயலவில்லை.

பொய் செய்தியே ஆனாலும், ஒருநாள் முழுக்க முஸ்லிம்களைக் குற்றப்படுத்தும் பணி, சன் செய்தியால் நிறைவேற்றப்பட்டது.

## மதுரை

இங்கே ஒரு முஸ்லிம் இறந்த செய்தி - முதலில் ஊடகங்களுக்கு விருந்தானது. அவர் தப்லீக் ஜமாஅத் மாநட்டிற்கு டெல்லி சென்று வந்தவர்களை வரவேற்றார், அதனால் தொற்று தொற்றிக் கொண்டது என செய்தி ஊடகங்கள் அலறின.

அவரது உடல் மிகச்சில உறவினர்களின் தொழுகையுடன் அடக்கம் செய்யப்பட்டது என்ற செய்தியைப் பரப்பினார்கள். நாம் அந்தத் தெருவையும், ஜமாஅத்தையும் சார்ந்தவர்களைத் தொடர்புகொண்டு கேட்டோம். அவர்கள், அவர் கொரோனாவால் இறக்கவில்லை. அவர் வேறு நோயால்தான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இறந்தபின் கொரோனா எனச் சொல்லிவிட்டார்கள். எந்த மருத்துவ சான்றிதழும் தரவில்லை என்றார்கள்.

பின்னர் அவருடைய வீட்டை அமர்க்களப் படுத்தினார்கள். வீட்டைப் பூட்டினார்கள், சீல் வைத்தார்கள் எனக் காட்சி ஊடகங்களில் அமர்க்களப்படுத்தினார்கள்.

முஸ்லிம்கள் திட்டம் போட்டு இந்த நோயைப் பரப்புகின்றார்கள் என்ற எண்ணத்தை நிலைபெறச் செய்திட இந்தச் செய்திகள் பெரிதும் பயன்பட்டன.

பின்னர் அந்த வீட்டில் இரண்டு பேருக்கு கொரோனா உறுதி என்றொரு செய்தியை உலவ விட்டார்கள். இது இந்தச் செய்தியை அதாவது முஸ்லிம்கள் கொரோனாவைப் பரப்புகின்றார்கன் என்ற செய்திக்கு அழுத்தம் தந்தது.

ஆனால், இப்போது அந்த வீட்டிலுள்ள அனைவரும் குணமடைந்து நன்றாகவே இருக்கின்றார்கள். ஆனால், ஊடகங்கள் மக்கள் மனதில் பதிய வைத்தவை பாய்ந்திட மாதங்கள், வருடங்கள் ஆகும். தொடக்கத்தில் ஊடகங்கள் மேல் வழக்குத் தொடுப்போம் என சவடால் விட்ட அந்த வீட்டைச் சார்ந்தவர்கள் பின்னர் எமது அழைப்புகளை எடுக்கவே இல்லை.

இவைபோன்ற பொறுப்பற்ற செயல்கள், மொத்த முஸ்லிம் சமுதாயத்தையும் குற்றவாளி களாக காட்டியவர்கள் தங்கள் தவறை உணர்ந் திட இயலாமல் போய்விடுகின்றார்கள்.

## சென்னையில்

நாகர்கோவிலைப் போலவே எங்கேனும் முஸ்லிம்களுக்கக் கோவிட்-19 சோதனை நடந்தால் அவர்களைத் தனிமைப்படுத்தவோ அல்லது அழைத்துச் செல்லவோ பல காவல் துறையினரோடு ஓரிரு வாகனங்களும் அனுப்பப் படுகின்றன. அத்தோடு பதாகைகளும் பெரி தாகத் தொடங்கவிடப்படுகின்றன. ஆனால், ஏனையோரிடம் அது கடைப்பிடிக்கப்படுவ தில்லை. சில சுகாதாரத் துறையைச் சார்ந்த வர்கள்தாம், வந்து போகின்றார்கள் என்றார்கள்.

இதனை நாம் சில அதிகாரிகளிடம் விசா ரித்தபோது அப்படி எதுவுமில்லை என்றார்கள். ஆனால், நம்மிடம் தகவல் சொன்னவர்கள் மீண்டும் அதை உறுதிப்படுத்தினார்கள்.

## தெலுங்கானா நீதி மன்றம்

தெலுங்கானாவில் ஊரடங்கு விதிகளை மீறியதற்காக நீதிமன்றம் அழைத்து வரப்பட்ட வர்களெல்லாம்முஸ்லிம்களாகவே இருந்தார்கள். இதனால் நீதிபதி அவர்கள், காவல்துறையினரைப் பார்த்து 'முஸ்லிம்கள் மட்டுந்தான் ஊரடங்கு விதிகளை மீறுகின்றார்களா?, ஏனைய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் யாரும் விதிகளை மீறுவதில்லையா? எனக் கேட்டார். அத்தோடு காவல்துறையில் சிலர் அத்துமீறிச் செயல்படுபவர்களாக இருக்கின்றார்கள்,' என்றும் கூறினார். MM / Scroll

இதேபோல் அத்து மீறுபவர்கள், தமிழகத் திலும் தலையெடுத்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மொத்தத்தில் கொரோனாவை முஸ்லிம்கள் தாம் பரப்பினார்கள் என்று ஒரு திட்டமிட்டப் பெயர் பரப்பப்பட்டது.

## தப்லீக் ஜமாஅத்திற்கு எதிரான சதியோ..?

கொரோனாவை தப்லீக் ஜமாஅத்தோடு தப்லீக் ஜமாஅத்தான் அதன் பரவலுக்குக் காரணம் என்பது திட்டமிட்டுப் பரப்பப்பட்ட ஒன்றாகவே தெரிகின்றது. இந்தச்சதி அகில இந்திய அளவில் திட்டமிடப்பட்டது.

முதலில், நமது தமிழ்நாட்டில், தினமலர் தான் இந்தச் செய்தியை வெளியிட்டது. பின்னர் நாம் வழக்குத் தொடர்ந்தோம். அதற்கு மறுப்புத் தெரிவித்தபோது, அது உளவுத்துறை யின் தகவல் என்றது.

இதிலிருந்து உளவுத்துறையை இயக்கும் மத்திய அரசு, இதனை ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தது வெளிவந்தது.

இந்தியாவில் என்ன நடக்க வேண்டும், எங்கெல்லாம் குண்டு வைக்க வேண்டும், அதில் எந்தெந்த முஸ்லிம் அமைப்புகள் மீது பழிபோட வேண்டும். யாரைக் கொண்டு இந்த விசார ணையை நடத்திட வேண்டும். எந்த நீதிமன் றத்தில் வழக்கை நடத்திட வேண்டும். என்ன தண்டனை வழங்கிட வேண்டும் என்பனவற்றை முடிவு செய்கின்றார்கள் உளவுத்துறையினர் இதை விளக்கமாகக் குறிப்பிடுகின்றார். தன்னு டைய பல நூல்கள் வழியகாவும், எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள்

இதுபோன்ற நாசகரமானத் திட்டங்களைத் தீட்டுவதில் இப்போதைய, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் வல்லவர். இதையும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் உறுதி செய்கின் றார்கள்.

இதுபோன்ற திட்டங்களை வகுத்திடும் களமாகத்தான் பயன்படுகின்றது டெல்லியில் இருக்கும் விவேகானந்தா ஃபவுண்டேஷன் கூறுகிறார்கள் என்பதையும் எஸ்.எம். முஷ்ரிஃப்.

விரிவான தகவல்களுக்குப் படிக்கவும், *26/11* நீதித்துறையும் மயங்கியது ஏன்? இந்த நூல் வேர்கள் பதிப்பகத்தில் கிடைக்கும்.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் நூல்களில் இடம் பெற்றவை பல நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.




உளவுத்துறையின் கைவண்ணந்தான் COVID-19 "கொரேனா ஜீஹாத்' என்ற சொல் லாட்சி என்றால் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் இரண்டாவது நூலாகிய "*26/11* நீதித்துறையும் மயங்கியது ஏன்?" என்ற நூலின் பின்வரும் அத்தி யாயங்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்திட வேண்டும்.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் இரண்டா வது நூலின் பின்வரும் பகுதிகள் ஆழ்ந்து சிந்திக் கத் தக்கவை. அவையாவன...

*1)* IB என்ற மத்திய உளவுத்துறை - ஆர்.எஸ். எஸ். கூட்டு - இதுவரை அகழ்ந்து பார்த்திடாத ஒரு மாற்று நாட்டு நிர்வாகம்.

IB / RSS ஆகியவற்றின் நிழல் ஆட்சிதான் இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றது.

IB - RSS Combine - An "fathomed Deep State" Chap... - 12, Page 198 : தமிழ் மொழிப் பெயர்ப்பில் *333*

*2)* IB என்ற மத்திய உளவுத்துறை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். ஆர்.எஸ். எஸ். (அத்தியாயம்-*10*. தமிழ் மொழிப் பெயர்ப் பின் பக்கம்-*283*) (RSS Tooks Full Control of the IB - English Edition Page - 172)

*3)* ஆர்.எஸ்.எஸ். இன் தீர்மானங்களை நிறைவேற்றும் 'IB' என்ற மத்திய உளவுத்துறை -

*தமிழ் மொழி பெயர்ப்பின் பக்கம் - 288, அத்தியாயம்-10.*

(IB - Carayimg out RSS Agenda. English Edition Page- 1730)

*4. பொதுமன்னிப்பில் மகிழும்* 'IB' *என்ற மத்திய உளவுத்துறை. (அதாவது மத்திய உளவுத் துறை செய்யும் எந்தத் தவறுக்கும் தண்டனை இல்லை)*

*(தமிழ் மொழி பெயர்ப்பு பக்கம் - 288. அத்தியாயம்-10. ஆங்கில நூலில்* IB Enjoy's Amnesty. P.175)

*ஆக இங்கே* IB/RSS *மத்திய உளவுத்துறையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் ஓர் கூட்டாட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றன. அது முஸ்லிம் களைப் பூண்டோடு ஒழிப்பதை இலட்சியமாகக் கொண்டது.*

*- இந்தப் பின்னணியில்தான் மிகப்பெரிய சதி ஒன்று தீட்டப்பட்டுள்ளது. தப்லீக் ஜமாத்-க்கு எதிராக இந்தச் சதியின் அடிப்படையில் தப்லீக் ஜமாஅத்-இன் டெல்லி மக்கள் கூடலை தாராள மாக அனுமதிப்பது என்று முடிவு செய்யப் பட்டது.*

*இனி டெல்லி மாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாடுகளிலிருந்து பலர் வருவார்கள் என்பது அரசுக்கு ஏற்கெனவே தெரியும். காரணம், அத்தனை பேருக்கும் விசா என்ற உள்நுழைவு அனுமதி. அதாவது நம் நாட்டுக்கு உள்ளே வரும் சீட்டை வழங்கியது மத்திய அரசுதான். மத்திய அரசு மத்திய உளவுத்துறையின் வழிகாட்டுதல் கள்வழியாகத்தான் செயல்படும் என்பது ஊரறிந்த உண்மைதான். அதனால்தான் தப்லீக் ஜமாஅத் தார்கள் இன்ன தேதிகளில் இங்கே கூடுவார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.*

## கூட்டத்தைக் கூடவிட்டு, பின்னர் அதன்மீது பழியைப் போடுவதுதான் அரசின் திட்டம்

*இதில், நாம் கவனிக்க வேண்டியது. என்னவெனில் தப்லீக் ஜமாத்தவர்கள் கூடிய முதல் மாநாடோ கூட்டமோ அல்ல. அவர்களின் கூற்றுப்படி இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இது நடந்துகொண்டேதான் இருக்கின்றது. அடுத்து 2023-ஆம் வருடத்தில் கூடும் தேதிகளை இப்போதே கொடுத்துவிட்டார்கள்.*

*இவையெல்லாம் அவர்கள் தொடர்ந்து மத்திய, மாநில அரசுகளுடன் தொடர்ந்து தொடர்பில்தான் இருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தி வருகின்றன.*

*ஆகவே இஃதோர் திட்டமிட்ட சதி!*

*இதில் மிகவும் கூர்மையாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில்* World Health Organization *என்ற உலக சுகாதார அமைப்பு. கொரோனா தொற்று போகப்போகத்தான் அதிகரிக்கும் என்பதையும், அது 2021-2022 ஆண்டு வரை உலகில் உலாவிக் கொண்டுதான் இருக்கும் என்பதையும் சிலகோடி மக்களின் உயிரை பலி வாங்கிவிடும். அதனைக் கட்டுப் படுத்தாவிட்டால், என தொடக்க நாள் முதலே சொல்லி வருகின்றது. இந்த அறிவிப்பு அரசுகள் தங்கள் கொள்கைகளை வகுத்துக்கொள்ள வழங்கப்பட்டதாகும். இந்த கொள்கைகள் என்பதில் மக்களின் உயிரைப் பாதுகாப்பது ரீதியான மருத்துவ கொள்கைகள். ஏற்படும் பொருளாதாரச் சரிவை சரிசெய்ய வகுக்கப்பட வேண்டிய எதிர்கால பொருளாதாரத்திட்டங்கள், இதர திட்டங்கள், அடித்தட்டு மக்களின் வாழ்வுரிமை பாதுகாப்பிற்கான நிதி உதவிகள் - மருத்துவ உதவிகள், தேவையான மருத்துவ உபகரணங்களையும் தொடர்ந்து ஏற்படும் மரணங்களையும் எப்படி முஸ்லிம்களின் மீது போட்டு இதர எல்லா சமுதாயத்தவர்களையும், முஸ்லிம்களையும் வெறுக்கவும், அவர்களைக் கண்ட இடங்களிலெல்லாம் தாக்கிடவும், அழிக் கவும் செய்திடலாம் என முடிவு செய்தார்கள். டெல்லியில் கூடவிருந்த தப்லீக் மாநாட்டை அதற்கு ஏற்ற சிறந்த வாய்ப்பாக கருதினார்கள். அவர்களின் திட்டம் நிறைவாகவே நிறைவேறி யது. நாடு முழுவதும் முஸ்லிம்கள் ஒருவித குற்ற உணர்வுக்கு ஆளாக்கப்பட்டார்கள். பல இடங் களில் முஸ்லிம்கள் நடைபாதை வியாபாரிகள் தாக்கப்பட்டார்கள். அங்காடிகளிலிருந்து துரத் தப்பட்டார்கள். அவர்கள் செல்லுமிடங்களி ளெல்லாம் கொரோனாவைப் பரப்பிடத்தான் செல்லுகின்றார்கள் என்ற பிரச்சாரமும், அதன் பின்னணியில் தாக்குதலும் நடந்தன.*

*இதில் உலகெங்கும் இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையினர் எப்படி நடத்தப்படுகின்*

றார்கள் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதன் பின்னணியில் உலக நாடுகளெல்லாம் கண்டிக்கத் தொடங்கின. பின்னர் மோடி, கொரோனா ஜாதி, மதம் பார்த்து வருவதில்லை என்றொரு பெரிய கண்டுபிடிப்பை பிரகடனப் படுத்தினார். ஆனாலும் அவரின் எடுபிடிகள் அந்தப் பிரச்சாரத்தையே செய்து கொண்டிருந் தார்கள்.

கொரோனா காலத்தில் இதர மத நம்பிக்கை யாளர்களால் என்னென்ன கெடுபிடிகள் கட்ட விழ்த்திடப்பட்டன என்பதை இந்தக் கட்டுரை யின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். இருந்தாலும் தப்லீக் ஜமாஅத், கொரோனா ஜிஹாத் என்பனவற்றை தைரியமாகப் பரப்பி யதற்கான காரணங்கள் பலப்பல. அவற்றுள் ஒன்று தப்லீஃக் ஜமாஅத், தள்ளி பாசிச ஆட்சி யாளர்களின் ஆசியையும் ஆதரவையும் உதவியை யும் பெற்ற அமைப்பு என நினைத்தது மிக முக்கியமான காரணம்.

எடுத்துக்காட்டாக இவர்கள் போபாலில் மத்தியப் பிரதேசத்தின் தலைநகரில் 2017-ஆம் ஆண்டு, நவம்பர் 25,26,27 ஆகிய நாள்களில் ஒருபெரும் மாநாட்டை நடத்தினார்கள். இந்த மாநாட்டில், 15 லட்சத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டார்கள். அப்போது மத்தியப் பிரதேசம் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்தது. அதிலும் ஆர்.எஸ்.எஸ்.-இல் ஊறித் திளைத்த இந்துத்துவவாதி ஷிவாராஜ் சிங் சவ்கான் அவர்கள் ஆட்சியிலிருந்தார்கள். இவர்கள் முஸ்லிம்களைச் சொல்லொண்ணா கொடுமைகளுக்கு ஆளாக்கிக் கொண்டிருந் தார்கள். ஆனால் தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்த வர்கள், இந்த பிஜேபி அரசோடு கைக்கோர்த்து நின்றார்கள். அவர்கள் மாநாட்டுக்கு 352 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டன. அத்தோடு மாநாடு நடக்கவிருந்த இடத்தை பாசிச பாரதீய ஜனதா கட்சியின் முதலமைச்சர் ஷிவ்ராஜ் சிங் சவ்கான் பிப்ரவரி 29-ஆம் நாள் வந்து பார்வையிட்டார். அத்தோடு அவர்களுடைய அரசாங்கத்தில் தன் னுடைய பரிவாரங்களோடு கலந்துகொண்டார். சிறப்புரை ஆற்றினார். அந்த உரையில்

தப்லீக் ஜமாத் மாநாட்டில் ஆர்.எஸ்.எஸ். முதல்வர் வரை இந்த மாநாட்டுக்கு சிறந்த ஏற்பாடுகளை அமைத்துத் தந்திட வேண்டும். இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் தேவை களைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண் டும். சீரான போக்குவத்து வசதியைச் செய்து தந்திட வேண்டும். நல்ல குடிநீருக்கு ஏற்பாடு செய்திட வேண்டும். தூய்மைப் பணியாளர்கள், மின் தேவைகள், மருத்துவ உதவிகள் ஆகிய வற்றிற்கு ஏற்பாடு செய்திட வேண்டும். "60 ஏக்கரில் கூடாரங்கள் அமைத்திட வேண்டும். இதில் மூன்று லட்சம் பேர் தங்கிடுவார்கள். 32 ட்யூப் கிணறுகள், 400 நீர்த்தேக்கத் தொட்டிகள், 7500 (Pipe Connections) குழாய்கள், 3500 தற்காலிக கழிவறைகள் ஆகியவை செய்யப்பட்டி ருக்கின்றன. இரண்டு (Mobile Towers) கைப்பேசி கோபுரங்கள் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன. 5 ஆம்புலன்ஸ்களும், 5 தீயணைப்பு வண்டிகளுக் கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. மாநாட்டுக்காக ஓர் கட்டுப்பாட்டு அறையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த மாநாடு நடந்த காலக்கட்டம் பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் காலக் கட்டம். அதனால் நாட்டு மக் கள் அனைவரும் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டி ருந்தார்கள்.



ஆனால் மாநாட்டில் பண மதிப்பு நீக்கப்பட்ட பழைய நோட்டுகளை, புதிய நோட்டு களாக மாற்றிடும் சிறப்பு கவுண்டர்கள், மாநாட்டுத் திடலில் ஏற்பாடு செய்யப்பப்டிருந்தன.

இப்படியெல்லாம் உதவிகளை வழங்கிய தால் தப்லீக் ஜமாஅத் சார்ந்தவர்கள், இந்துத் துவ வாதிகளின் செல்லப் பிள்ளைகள் எனக் கருதினார்கள்.

இப்படியெல்லாம் உதவிகளைச் செய்த தந்து விசாக்களையும் வழங்கியவர்கள், பின்னர் வாய்ப்புக் கிடைத்தபோது ஒரேடியாகக் கவிழ்த்துவிட்டார்கள்.

இந்தியா முழுவதும் கொரேனா ஜிஹாத் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது. Corono Jihad Conspiracy : தலைமையக சதி என்றெல்லாம் பரப்பினார்கள் பாரதீய ஜனதாவைச் சார்ந்த அமைச்சர் முக்தார். Talibani Crime by Thabliqhi Jammath என தப்லீக் ஜமாஅத்-இன் தாலிபான் குற்றங்கள் எனக் குறிப்பிட்டார்கள். இவருக்கு தாலிபான்கள், ஆப்கானிஸதான்கள் ஜிஹாத்கள் வல்லரசு வல்லரசுகளை - ரஷ்யாவையும், அமெரிக்காவையும் வீழ்த்திய வீர வரலாறு தெரியாது. அதில் அவர்கள் இரண்டாவது வல்லரசாகிய அமெரிக்காவை வீழ்த்திய வரலாற்றுக் கும், அவர்கள் (அமெரிக்கர்கள்) ஆப்கானிஸ்தான் முஜாஹித்களிடம் சரணடைந்து ஒப்பந்தம் செய்து கொண்டதற்கும், பிப்ரவரி-29, 2020 இந்தியா சாட்சியாக நின்றது தெரியாது போலும். இவர் எப்படி இந்த விஷயத்தில் அறிவு சூனியமோ, அதேபோல்தான் தப்லீக் ஜமாஅத்தார்கள் அந்த அழகிய முஸ்லிம்களைப் பற்றிய அறிவு சூனியத்திலேயே இருக்கின்றார்கள்.

பாரதீய ஜனதா கட்சியினருக்கு இதுபோல் துரோகங்களைச் செய்வது ஒன்றும் அந்நியமான ஒன்று அல்ல. கஷ்மீரில் மெஹ்பூபா முக்தியை ஆதரிப்பது போல் ஆதரித்து, பின்னர் சிறையில் அடைத்தார்கள். (பார்க்க கஷ்மீர் துரோகத்தின் வரலாறு) 'வைகறை வெளிச்சம்'

பின்னர் அவர் மெஹ்பூபா முக்தி எங்கே இருக்கின்றார் என்பதை அவருடைய மகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்துத் தான் தெரிந்திட வேண்டியதாயிற்று.

இங்கே தப்லீக் ஜமாஅத்திற்கு எதிரான அரசு என்பதை அறிந்ததும், ஊடகங்கள் சேற்றை வாரி இறைத்தன. வார்த்தைகளில் வன்மங்களைக் கூட்டின. தப்லீக் ஜமாஅத்-ஐ சார்ந்தவர்களுக்கு மருத்துவம் செய்யக்கூடாது அவர்களுக்கு 'Gas Champers' முச்சுத் திணறி சாவும் சபக்கிடங்கு களுக்கு ஏற்பாடு செய்திட வேண்டும் என்றெல் லாம் வசைப்பாடினார்கள்.

இப்படி ஒரு சமுதாயம் பழி சுமத்தப்படு கின்றது என்பதால் சர்வதேச அளவில் அழுத் தங்கள் அதிகமாயின. எப்போதுமில்லாமல் முஸ்லிம் நாடுகளிலிருந்து சில பத்திரிகையா ளர்கள், தங்கள் மன உழைச்சலைப் பதிவு செய்தார்கள். அதன்பின்னர் மோடி கொரோனா ஜாதி, மதம் பார்த்து வருவதில்லை என்ற அதிசயத்தைக் கண்டுபிடித்து அறிவித்தார்.

## பிரச்சாரத்தின் விளைவு

தப்லீக் ஜமாஅத் மீது கூறப்பட்ட குற்றச் சாட்டுளை முஸ்லிம் உலகம் ஏறிட்டுப் பார்த் தது. அதன்பின்னர் இந்திய முஸ்லிம்களுக்குத் தொடர்ந்து நடக்கும் இந்திய பொருளாதாரத் திற்குச் செய்ததில் நமது உளவுத் துறைக்கும் பங்குண்டு. ஏனெனில் தினமலரின் கூற்றுப்படி உளவுத்துறைதான் கொரோனா ஜிஹாத் என்ற சொல்லாடலை வடிவமைத்தது.

மழை நின்றாலும், தூரல் நிற்கவில்லை என்பதைப்போல் இன்னும் சிலர் சில ஊடகங் களில் இந்தப் பாட்டைப்பாடி வருகின்றார்கள்.

## வழக்குகள்

தப்லீக் ஜமாஅத்தார் மீதும் அதன்வழி மொத்த முஸ்லிம்களையும் கொரோனாவைப் பரப்புகின்றார்கள் எனப் பழிப்போட்டக் காலக் கட்டத்தில், தாருல் இஸ்லாம், வைகறை வாசகர் வட்டம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் இவை தொடர்ந்த வழககுகளைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். விரிவான தகவல் களுக்குப் பார்க்க 'வைகறை வெளிச்சம்' ஏப்ரல்-மே இதழ்கள்.

அதனைத் தொடர்ந்து பல்வேறு அமைப்பு களும், இயக்கங்களும் பல வழக்குகளைத் தொடுத்தார்கள். சமூக வலைத் தளங்களில் அவதூறுகளைப் பரப்பியவர்களை வாயடைத்துப் போகச் செய்தார்கள். அநியாயங்களைப் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்கள். அதன் பின்னர் தங்கள் நாட்டிலேயே வேலை செய்யும் பலர் இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக் கெதிராகவும் பொய்களை, வெறுப்பை உருவாக்

கும் ஈனமொழிகளை விளம்பிக் கொண்டிருக் கின்றார்கள். என்பதைக் கண்டுபிடித்தார்கள். பலருக்கு வேலைப் பறிபோனது.

எங்களிடமிருந்து 120 மில்லியன் டாலர் இந்தி யாவுக்கு வருவாயாக வந்து கொண்டிருக்கின்றது. அது இங்கே அரபுநாடுகளில் (குறிப்பாக ஐக்கிய அமீரக நாடுகளிலிருது வருகின்றது, ஜாக்கிரதை என்பதாக மிரட்டல்கள் வந்த பின்னரே மோடி யின் மேற்குறிப்பிட்ட ஜானோதயம் பதிவானது.)

இந்நிலையில் சங்கப்பரிவாரத்தினரின் விஷமப் பிரச்சாரம், காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திட வெளிநாடுகளில் சென்று உழைத்து வாழ்ந்த இந்தியக் குடிமக்களின் வாழ்வாதா ரத்தைப் பறிந்தது. இந்தத் துரோகத்தை. ஆனால் ஒரு வழக்கத்தைகூட தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் தமிழகத்தில் பதிவு செய்யவில்லை என்பது மொத்த முஸ்லிம் அமைப்புகளையும் வருத்தத்தில் ஆழ்த்தியது.

## ஜம்மியத்தே உலமாயே ஹிந்த் தொடர்ந்த வழக்கு

என்னதான் தப்லீக் ஜமாஅத்-ஐ வைத்து முஸ்லிம்களை பழிவாங்கினாலும், தப்லீக் ஜமா அத்தைச் சார்ந்தவர்கள் எந்த எதிர் நடவடிக்கை யையும் எடுக்கவில்லை.

இதனால் ஜம்மியத்-தே உலமாயே ஹிந்த், ஊடகங்களின், அடாத செயல்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்கள்.

வழக்கு நன்றாகவே தயார் செய்யப்பட்டி ருந்தது. ஆனால் நமது உச்ச நீதிமன்றம் ஆளும் கட்சி வயப்பட்டு நின்றதால் எந்த நிவாரணத் தையும் வழங்கிடவில்லை. பிரஸ் கவுன்சிலுக்குப் போய் பாருங்கள் எனக் கூறிவிட்டது.

இதேபோல்தான் கொரோனாவால் நடந்த ஊரடங்கள், புலம் பெயர்ந்து உழைத்து வயிறு பிழைக்க வந்த தொழிலாளர்கள் விவகாரத்திலும், உச்ச நீதிமன்றம் நடந்துகொண்டது. புலம் பெயர்ந்து பிழைக்க வந்த தொழிலாளர்கள், எப்படியேனும் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றிட வேண்டும் என்ற முனைப்பில் நடந்தே சென்றார்கள். வழியில் மடிந்தவர்கள் ஏராளம், ஏராளம். பல இடங்களில் முஸ்லிம்களும், இதர தொண்டு நிறுவனங்களும், அவர்களுக்கு சில உதவிகளைச் செய்தார்கள். சமூக ஊடகங்கள் அவர்களின் அவலங்களை அனைத்து மக்களுக் கும் கொண்டு சென்றன. இவர்கள் விவகாரத் தில் அரசு மிகவும் அலட்சியமாகவும், மனிதாபி மானமற்ற வகையிலும் நடந்துகொள்கின்றது என்பதால், உச்ச நீதிமன்றத்தை நல்லுள்ளம் கொண்டவர்கள் சென்றார்கள்.

ஆனால், உச்ச நீதிமன்றமும், அரசுக்கு ஜால்ரா போட்டது. உடனேயே நீதியின் மீது அக்கறைக் கொண்டவர்கள் அனைவரும் உச்ச நீதிமன்றத்தைச் சாடினார்கள். பல மூத்த வழக்கறி ஞர்களும், ஓய்வு பெற்ற நீதிபதிகளும், உச்ச நீதிமன்றத்தின் (Bar Association) என்ற வழக்கறி ஞர்களின் குழுமம், இவையெல்லாம் நீதிபதி களுக்கு கடிதங்களை எழுதி கடிந்துகொண்டன.

மானம் கப்பலேறுவதைக் கண்ட உச்ச நீதி மன்றம், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் விஷயத்தில் தொடர்ந்து தீர்ப்புகளை வழங்கிற்று. ஆனால் அதிலேயும், உச்ச நீதிமன்றம் அரசுக்கு உதவியாக ஒரு தீர்ப்பை வழங்கியது.

அது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் விவ காரத்தில் ஊடகங்கள் அரசின் தகவல்களையே தந்திட வேண்டும் என்பதே அது. Verdict in WP(c) No. A68 of 2020. Dt. 31st March.2020)

இப்போதெல்லாம் ஊடகங்கள்தாம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களைப் பற்றிப் பேசுவ தில்லை. அதனால் அரசின் அலட்சியங்களும், தோல்விகளும் மக்கள் மன்றத்திற்கு வரவில்லை.

## வட இந்தியாவில் தப்லீக் ஜமாஅத் பற்றிய அவதூறுகள்

வட இந்தியாவில் தப்லீக் ஜமாஅத் பற்றிய வந்த அவதூறுகளை இப்படிப் பட்டியலிடலாம்.

*1)* தப்லீக் ஜமாஅத்தை சார்ந்தவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 2500-ஐ வர வழைத்து இந்தியாவில் கொரோனா ஜிஹாதைச் செய்கின்றார்கள். முதலில் டெல்லிக்கு வர வைத்து பின்னர். நாடெங்கும் அனுப்பி கொரோ னாவைப் பரப்புகின்றார்கள்.

*2)* குஜராத்தில் இப்படியொரு துண்டு பிரசுரத்தை அடித்து வெளியிட்டார்கள்.

அதில் மேலேசொன்ன குற்றச்சாட்டை சொல்லி முஸ்லிம்கள் சமுதாயத்தின் எந்தப் பகுதிக்கும் வரவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்கள்.




இதுகுறித்து குஜராத், அஹமதாபாத் காவல் நிலையத்தில் புகார் தந்தபோது அஹமதாபாத் காவல்துறை தலைவர் ஏப்ரல் 1-ஆம் நாள் 2020-இல் அசம்பாவிதமும் நடத்திடாமல், பார்த்துக் கொள்ளுங்கள் என உத்தரவிட்டார்கள். ஆனால் அந்தப் துண்டறிக்கையை வெளியிட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3) தப்லீக் ஜமாஅத்-ஐ சார்ந்தவர்கள் உணவு உண்ணும் தட்டுகளை நக்கிடுவதைப்போல் காட்சிகள் தயாரிக்கப்பட்டு சுழற்சியில் விடப் பட்டன. இந்தத் தட்டுகள் வழியாகவும், கொரோனாவைப் பரப்புவதாக, சமூக வலைத்தளங்களில் பரப்பினார்கள். அதனை (AIT News) என்ற நிறுவனம் அது மிகப் பழையது என்றும், அதுவும் வெளிநாட்டில் ஹாங்காங்கிலுள்ள ஒரு நிறுவனத்தின் செயல் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனாலும் இது சமூக ஊடகங்களில் வலம் வந்துகொண்டே இருந்தது.

4) அதேபோல் முஸ்லிம்கள் காவல்துறையின் மீதும், பொதுமக்கள் மீதும் துப்புவதைப் போன்ற காட்சிகளும் தயாரிக்கப்பட்டு உலா வரவிடப் பட்டன.

5) கொரோனாவைப் பரப்பிடச் சொல்லி நிஜாமுத்தீன் மஸ்ஜித்-இல், முஸ்லிம்களெல்லாலம் ஒன்றாய்க் கூடி நின்று, தும்மினார்களாம். அந்தத் தும்மல் வழி கொரோனாவைப் பரப்புவது நோக்கமாம்.

6) சமூக வலைத்தளங்களிடில் விஷமத்தைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் "கொரோனா ஜிஹாத்' 'கொரோனா தீவிரவாதம்' இஸ்லாமிய எழுச்சி கொரோனா பாம்ஸ் என்பனவாகும்.

பொதுவாக வலைத்தளங்களில் உண்மைக்குப் புறம்பாகவும், சமூக சூழலைப் பாதிக்கும் வகையிலும் செய்திகள், காட்சிகள் வலம் வந்தால், அதைஅந்த வலைத்தளங்கள், டியூட்டர், பேஸ் புக் போன்றவை அகற்றிவிடும். ஆனால், முஸ்லிம்களுக்கெதிரான செய்திகள் வலைத்தளங்களில் வந்தபோது, அந்த நிறுவனங்கள் அவற்றைத் தாராளமாக அனுமதித்தன. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் பருவ இதழ் "டைம்" இதனை டீவிட்டர் நிறுவனத்திடமும், "பேஸ் புக்" நிறுவனத்திடமும் கேட்டபோது, அவை நாங்கள் எல்லாவற்றையும், கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றோம் என்று பதில் சொல்லி இருக்கின்றார்கள். (ஆதாரம் - டைம் இதழ், ஏப்ரல்-3, 2020)

டைம் இதழின் கணப்பின்படி கொரோனா ஜிஹாத் என்ற சொல் 3,00,000 முறற வந்திருந்தது. அதனை 16 கோடியே 50 லட்சம் பேர் பார்த்திருக்கின்றார்கள். இந்தத் தகவலை "இக்குவாலிட்டி லேப்" "QualityLab" என்ற மனித உரிமை குழு டைம் பத்திரிகைக்குச் சொல்லி இருக்கின்றது. டைம், ஏப்ரல்-3,2020.

இந்தக் கட்டுரையைத் தொடங்கும்போதே டைம் ஏடு இப்படிக் குறிப்பிடுகின்றது.

"IT WAS ALREADY DANGEROUS TO BE MUSLIM IN INDIA. THEN CAME THE CORONA VIRUS"

**அதாவது, இந்தியாவில் முஸ்லிமாக இருப்பது ஏற்கெனவே மிகவும் ஆபத்தானது. தொடர்ந்து கொரோனோ வைரசும் வந்தது.**

# அறிஞர் அண்ணாவும் இஸ்லாமும்



தமிழ்நாட்டில் எப்போதுமே முஸ்லிம்கள் தங்கள் பங்களிப்பை தங்கள் விகிதத்திற்கு மேலாக ஆற்றியிருக்கிறார்கள். அதிலும் தமிழகத்தின் வளர்ச்சியில் திராவிட இயக்கத்திற்கு எவ்வளவு பெரிய பங்கு இருக்கிறதோ அதே அளவுக்கான திராவிட இயக்க வளர்ச்சியில் முஸ்லிம்களுக்கு இருக்கிறது.

1920ல் பெரியாரின் நீதிக் கட்சி தொடங்கிய காலத்தில் இருந்து முஸ்லிம்கள் இன்றும் திராவிட இயக்கங்களுக்கு மிக நெருக்கமாகவும், பெரும் பலமாகவும் நின்றிருக்கிறார்கள்.

பெரியார், அண்ணா, கலைஞர் என்ற திராவிட சகாப்தத்தின் மூன்று பெரும்தலைவர்களுக்கு முஸ்லிம்கள் பெரும் துணையாகவும், அவர்களின் வளர்ச்சியில் வேறெந்த சமூகமும் காட்டாத அளவுக்கு பங்களிப்பை செலுத்தியிருக்கிறார்கள்.

அதில் எப்போதுமே பெரியாருக்கும், கலைஞருக்கும் முஸ்லிம்களுடன் இருக்கும் நெருக்கம் பெரும்பாலும் பேசப்படும். ஆனால், அண்ணாவை பற்றி தமிழகத்தில் மக்களுக்கு தெரிந்திருக்கவில்லை. குறிப்பாக முஸ்லிம்களுக்கே கூட அண்ணாவின் அளவு கடந்த முஸ்லிம்களின் நெருக்கத்தை பற்றி தெரிவதில்லை. அதை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் நம் அனைவருக்கும் இருக்கிறது. நாம் இதற்கு முன் பெரியாரும் இஸ்லாமும் என்று நமது முந்தைய இதழில் பெரியாருக்கும் இஸ்லாத்திற்கும் இருந்த நெருக்கமான உறவை பற்றி விரிவாக எழுதியிருக்கிறோம்.

அண்ணா பெரியாரின் திராவிட கழகத்திலிருந்து பிரிந்து அரசியல் கட்சியை உருவாக்கிய பின் அவர் முன்னெடுத்த முழக்கம், " ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்". இதனை பற்றி குறிப்பிடும் போதெல்லாம் அண்ணா இஸ்லாமிய மார்க்கத்தை தான் மேற்கொள் காட்டுவார்.

திராவிட கழகத்திலும் சரி அது கட்சியாக மாறிய பிறகும் சரி, பெரியாரும் அண்ணாவும் முஸ்லிம்களின் மேடைகளில் எப்போதும் சிறப்பு விருந்தினர்களாக அமர வைக்கப்பட்டார்கள்.

குறிப்பாக முஸ்லிம்கள் நடத்தும் மீலாது தின திருவிழா மேடைகளில் கண்டிப்பாக பெரியாரும், அண்ணாவும் பங்கேற்றிருப்பார்கள்.

இதனை பலமுறை அண்ணா, மதம் தொடர்பான மேடைகளில் எங்களை அமர்த்த முஸ்லிம்களால் மட்டுமே முடிகிறது என்று கூறியிருக்கிறார்.

அண்ணா பெரிய புத்தக வாசிப்பாளர், எழுத் தாளர், மதங்களை ஆராய்ச்சி செய்யும் மாணவர் என்ற முறையில் அனைத்து மத நூல்களையும் ஆராய்ந்தவர். இப்படியான அண்ணா எங்குமே இஸ்லாத்தை விட்டுக்கொடுத்ததில்லை.

ஒரு முறை இஸ்லாம் வாளால் பரப்பப் பட்டது என்ற பிரச்சாரத்திற்கு பதில் கொடுத்த அண்ணா,

## வாளால் வளர்ந்ததா இஸ்லாம்?

பலாச்சுளையை சுவைக்க முற்படுவோர், முதலில் மேல் தோலை நீக்கி, பிசிறுகளைக் களைந்துவிட்டு பிறகு சுளையை எடுத்து அதிலுள்ள கொட்டைகளையும் நீக்கிவிட்டே தின்பார்கள். அது போன்றே மதக் கருத்துக் களையும் உணரவேண்டும். சிலர் பலாப்பழத்தின் முன்தோலையே மதம் என்கிறார்கள் அவர்களுக் காகப் பரிதாபப்படுகிறோம். சிலர் ஒட்டிக் கொண்டு இருக்கும் பிசிறுகளை மதம் என்று அலைகிறார்கள் அவர்களைக் கண்டால் நமக்கு அருவருப்பாக இருக்கிறது மற்றும் சிலர் கொட்டையுடன் பலாச்சுளையை விழுங்க முற்படுகிறார்கள். அவர்களைக் கண்டு னுதாபப்படுகிறோம்.

ஆனால் உரித்தெடுத்த பலாச்சுளையைப் போன்றது தான் இஸ்லாம். இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டினருக்கும் பொருந் திய மதமாக அமைந்திருக்கிறது. ஒரு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏதாவது ஒரு பிரச்சினை தோன்றினாலும் செய்ய வேண்டுவதெல்லாம் நபிகள் நாயகம் அவர்களுடைய கருத்துக்களிலி ருந்து பகுத்தறிவு விளக்கம் கொடுக்க வேண்டியது தான், எல்லாப் பிரச்சினைகளுக்கும் விடை காண முடியும், பிற மதங்களிலே அற்புதங்கள் அதிகம் அடிப்படை உண்மைகள் குறைவு. இஸ்லாத்திலே அடிப்படை உண்மைகள் அதிகம் அற்புதங்கள் குறைவாகவேயுள்ளன.

இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டதா என்ற கூற்று அர்த்தமற்றது. இஸ்லாத்தை பரப்ப வாள் பயன்பட்டதில்லை. ஆனால் சிலுவை யுத்தங் களிலே இஸ்லாத்தைக் காக்க அது பயன்பட்ட துண்டு இந்தியாவில் முகலாயர் ஆட்சியும் மற்ற முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியும் இருந்தபோது முஸ்லிம்கள் ஒரு கோடி பேர் கூட இருக்கவில்லை.

அந்த அரசுகளெல்லாம் மறைந்த பிறகே பத்து கோடி மக்களாகப் பெருகினார்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ன நன்னெறி பரவி யிருந்த நாட்டிலே இடையிலே அக்கருத்துக் களெல்லாம் மறந்திருந்த நிலையில் இஸ்லாம் அக்கருத்துக்களையே வலியுறுத்தவும், 1400 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் இஸ்லாம் பரவிற்று தொட்டிலிலே படுத்துறங்கும் குழந்தையைத் தட்டி எழுப்பிய உடனே தாயை எப்படி கட்டியணைத்துக் கொள்கிறதோ அவ்வாறே தமிழகத்தில் இஸ்லாமிய கருத்துக்கள் தழுவப்பட்டது."

இதுபோல் அண்ணா இஸ்லாத்தை பற்றி பேசிய பல்வேறு நிகழ்வுகள் இருக்கிறது.

இஸ்லாத்திற்கு ஆதரவாக மட்டுமல்ல. இஸ்லாத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு களுக்கு பதிலளிப்பவராகவும் அண்ணா இருந்தார்.

மதரசாக்கள் மேடைகள் தான் தன்னை ஒரு பேச்சாளராக உருவாக்கியது என்று அண்ணா கூறுவார். அப்போதைய அரசியல் சூழலில் அண்ணாவுக்கும், பெரியாருக்கும் பெரும்துணை யாக இருந்தது காயிதே மில்லத்தும் அவரது முஸ்லிம் லீக் அமைப்பும் தான்.

முதன் முதலில் முஸ்லிம்களுக்கு சட்ட மேலவையில் முஸ்லிம்களின் பங்களிப்பு இல்லையென்று முஸ்லிம்களை பொறுப்பில் அமர்த்தினார். முஸ்லிம்களுக்கு உரிய பங்கீடு கொடுக்க வேண்டும் என்று மிக கவனமாகவும் இருந்தார்.

திமுகவில் முஸ்லிம்கள் அதிகமாக தங்களை இணைத்துக்கொள்ளும் சூழல் உருவான போது அண்ணாவிடம் திமுகவில் " மத சிறுபான்மை அணி" அமைக்கலாம் என்று கோரிக்கை வைக்கப் பட்டது. அப்போது அண்ணா, "காயிதே மில்லத் தலைமையிலான முஸ்லீம் லீக் நட்புக் கட்சியாக இருக்கும் போது அது தேவையில்லை" என்று மறுத்து விட்டார்.

1967ல் அண்ணா முதலைமைச்சராக பொறுப் பேற்றிருக்கும் போது தமிழகத்தில் அச்சிரப் பாக்கத்தை அடுத்த பள்ளிப்பட்டு கிராமத்தில் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் தொடர்பாக ஒரு பிரச்சனை ஏற்பட்டு இருந்தது.



முஸ்லிம்களுக்கு அடுத்த நாள் பெருநாள் தொழுகை. ஆனாலும் முஸ்லிம்கள் அங்கே தொழுகை நடத்தக் கூடாது என்று பெரும் எதிர்ப்பு. இந்த விடயம் டெல்லியில் இருக்கும் காயிதே மில்லத் அவர்களுக்கு செல்கிறது. காயிதே மில்லத்தின் மகன் மியா கான் களத்தில் மக்களுடன் நிற்கிறார்.

சிறிது நேரத்தில் காவலர்கள் சூழ படை வந்து அடுத்த நாள் விடியலுக்குள் அங்கே சிறு பள்ளிவாசல் உருவாக்கப்பட்டு. மியா கான் அவர்களுடன் பெருநாள் தொழுகை நிறைவேற் றப்படுகிறது. தொழுகை நிறைவேற்றி வெளியே வந்த மியா கானை காண அருகிலிருக்கும் பயணியர் விடுதியில் அண்ணா காத்திருந்தார்.

இந்த சம்பவம் நடக்கும் போது அண்ணா கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஆனால், அந்த நிலையிலும் முஸ்லிம்களின் பிரச்சனைக்கு களத்திற்கு வந்து உதவி செய்தவர் அண்ணா.

## மீலாது தின மேடைகள்

தமிழகத்தில் முஸ்லிம்கள் நபிகள் நாயகத்தின் பிறந்தநாளை மீலாது தின திருவிழாவாக கொண்டாடுவார்கள். அந்த மேடைகள் அரசியல் மேடையாக பயன்படுத்தப்படும்.

அண்ணா, பெரியார், கலைஞர் மூவருக்குமே இந்த மேடைகள் தமிழகத்தின் முகங்களாக அடையாளம் காட்டியது. அண்ணா கலை ஞரை முதன்முதலாக திருவாரூரில் நடைபெற்ற மீலாது விழாவில் தான் பார்த்தார். அண்ணா வுக்கு கலைஞரை அறிமுகம் செய்து கொள்ள உதவியதும் முஸ்லிம்கள் மேடை தான்.

ஆனால், அப்படி முஸ்லிம்களுக்கும் மற்ற தலைவர்களும், மக்களுக்கும் நெருக்கத்திற்கு உள்ளாகும் அளவுக்கு இருந்து வந்த மீலாது தின மேடைகள் இன்றைய முஸ்லிம் தலைமுறை யினருக்கு சுத்தமாக தெரியாது.

இஸ்லாத்தின் இறைவழிபாடுதல் தவறாக உணரப்பட்டு இஸ்லாத்தின் வழிகாட்டுதலில் மீலாது தின திருவிழாக்கள் கூடாது என்று முஸ்லிம்களே அந்த மேடைகளை அமைக்க தவறி விட்டார்கள், அந்த சூழலை இந்துத்துவ மதவாத அமைப்புகள் பெரிய அளவில் பயன்படுத்திக்கொண்டன.

குறிப்பாக, ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் மீலாது தின ஊர்வலம் நிறுத்தப்பட்டது. முஸ்லிம்கள் நீங்கள் மீலாது தின ஊர்வலத்தை நிறுத்துங்கள் இந்து முன்னனி அமைப்பினரும் விநாயகர் ஊர்வலத்தை நிறுத்துவார்கள் என்ற பின்னனியில் முஸ்லிம்கள் எப்போதும் அறத் துடன் செயல்படுவதாக நினைத்து அமைதியாக, சகோதரத்துவமாக நடந்து வந்த மீலாது தின ஊர்வலம் நிறுத்தப்பட்டது. ஆனால், விநாயகர் ஊர்வலம் சகலமும் எப்போதும் போல வருட வருடம் கலவரங்கள் பல நிகழ்த்துவதற்காக நடத்தப்படுகிறது.

இனியாவது முஸ்லிம்கள் மீண்டும் இப்படி யான மேடைகளை உருவாக்க வேண்டும். அது காலத்தின் மிக அவசியமான தேவையாகவும் இருக்கிறது.

- அபூ சித்திக்.



# பிரசாந்த் பூஷனின் உச்ச நீதிமன்ற வாக்குமூலம்.!

## - லஜபதி ராய் வழக்கறிஞர்

வழக்கறிஞர் பூஷனின் கருத்தாழமிக்க வாக்குமூலம் காலத்தால் அழியாதது. 02.08.2020 அன்று வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் தன் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 175 பத்திகளையும் 134 பக்கங்களையும் கொண்ட உறுதிமொழித்தாள் ஒன்றை உச்சநீதிமன்றத்தில் அளித்தார் அதில் கூறப்பட்ட விபரங்கள் நீதியின் பால் நம்பிக்கை கொண்டோருக்கு பலத்த அதிர்ச்சியை அளிக்கும்.

பூஷன் மீது நீதிமன்ற அவமதிப்பு தொடரப் பட காரணமான புகார் அளித்த மஹேக் மகேஸ் வரியின் புகார் நகல் தனக்கு தரப்படவில்லை என்றும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட அவரது கருத்து அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்ட கருத்துரிமைக்கு உட்பட்டது என்றும் நீதிபதியின் மீதான தனிப்பட்ட அவதூறும் நீதிமன்ற அவமதிப்பும் வேறு வேறென்றும், நல்லெண்ணம் கொண்டு நீதித்துறையை விமர் சிக்கும் உரிமை குடிமக்களுக்கு உள்ளது எனவும் பூஷன் குறிப்பிட்டார்.

இதுதவிர இந்தியன் எக்ஸ்பிரஸ், தி ஹிந்து, தி வயர், தி குயின்ட் போன்ற ஊடகங்களில் கருத்து உரிமைக்கு ஆதரவாக வெளியான செய்தி களையும் முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி ஷா போன்ற சட்ட மேதைகளின் கருத்துக்களையும், விமர்சனங்களை ஒடுக்குவதன் மூலம் நீதித் துறையை மதிப்பார்கள் என்பது தவறான எண்ணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாரதிய ஜனதா மற்றும் ஆர்.எஸ்.எஸ் தொடர்புடைய சிறுசிறு காவி குழுக்களால் பட்டியல்சமூகத்தினர் மற்றும் சிறுபான்மையினர் கொல்லப்பட்டதையும் அதன் பின்னணியில் அரசியல் சக்திகள் இருந்ததையும், காவல்துறை மிக அரிதாகவே நடவடிக்கை எடுத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொய் தகவல்களும் போலி செய்திகளும் இஸ்லாமியர்களுக்கு எதிராக பரப்பப்பட்டு அவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக்கப் பட்டதையும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்பு சட்டம் ஆகியன சிறுபான்மையினருக்கும் பட்டியல் இனத்தவருக்கும் எதிராகப் பயன்படுத் தப்பட்டதையும் சுட்டிக்காட்டினார் பூஷன்.

2019ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்டம் மதத்தின் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டுவதையும் சிறுபான்மையி னருக்கு எதிராக செயல்பட்டதையும் பூஷன் பதிவு செய்தார்.

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது பாரதிய ஜனதா கட்சி தலைவர்கள் வன்முறை தாக்குதல் களில் ஈடுபட்டதையும், ஜாமியா கல்வி வளா கத்தில் மாணவர்கள் கொடூரமாக தாக்கப்பட்ட தையும் அத்தாக்குதலை காவல்துறையினரே முன்னின்று நடத்தியதையும் அவர் தனது வாக்கு மூலத்தில் சுட்டிக்காட்டினார்.

டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் தில் ஆயுதம் தாங்கிய குண்டர்கள் காவல் துறை யினரின் பார்வையின் கீழ் அனுமதிக்கப்பட்டு அவர்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அடித்து நொறுக்கியதையும் பின்னர் காவல் துறையினர் அவர்களை பாதுகாத்து பத்திரமாக, இரகசியமாக வெளியே அனுப்பியதையும், காணொளி காட்சிகள் மூலம் மாணவர்கள் மீதான மூர்க்கத்தனமான தாக்குதல்கள் நிகழ்ந்தது அம்பலமானதையும் பதிவு செய்தார். ஜம்மு - காஷ்மீரில் சட்டமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அம்மாநிலம் மூன்றாக பிளக்கப்பட்டு, குடியாட் சியின் சிறு சிறு உரிமைகளைக் கூட பெறாமல் முன்னாள் காஷ்மீர் முதலமைச்சர் சிறையிலடைக் கப்பட்டதையும் பூஷன் குறிப்பிட்டார்.

கடந்த ஆறு வருடங்களில் வேலையில்லா திண்டாட்டம் மற்றும் வேலை இழப்பு ஆகிய இரண்டும் உச்சத்தைத் தொட்டு கோவிட்-19 காலகட்டத்தில் 10 கோடிக்கு மேலானோர் தங்கள் வேலைகளை இழந்துள்ளதையும் பூஷன் பதிவு செய்தார். அரசியலமைப்பு சட்டத்தின் அங்கங்களான தேர்தல் ஆணையம், தலைமை கணக்காயர், சி.பி.ஐ, நடுவண் விழிப்புணர்வு ஆணையம், போன்ற பொது அமைப்புகள் சீரழிக்கப்பட்டதையும் அவர் பதிவு செய்தார்.

தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களாக பிரதமருக்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷா வுக்கு நெருக்கமானவர்கள் நியமிக்கப்பட்டு தேர்தல் ஆணையத்தின் நம்பகத் தன்மையையும் சுதந்திரமும் மிகப்பெரிய கேள்விக் குறியான தையும், விதிகளை பிற்போக்குத்தனமாக மாற்றி யதன் மூலம் ஜனநாயகத்தை பணநாயகமாக மாற்றியதும் முன்னர் 7.5 விழுக்காடு உச்ச வரம்பு பெருநிறுவன நன்கொடைகள் வழங்கும் நிலை மாறி எவ்வித கட்டுப்பாடுமற்ற ரகசிய அரசியல் நன்கொடையை ஊக்குவிக்கும் வழிகளையும் தேர்தல் பத்திரங்கள் மூலம் மறைமுகமாக நன்கொடை அளிக்கும் திட்டத்தை செயல் படுத்திய பாரதிய ஜனதா கட்சி இந்தியாவில் தேர்தல் நன்கொடை மூலம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கடந்த மூன்று வருடத்தில் பெற்றதையும் மொத்த நன்கொடைகளில் 90 விழுக்காட்டைப் பெற்றதையும் சுட்டிக் காட்டினார்.

இத்தகைய சட்ட திருத்தங்கள் மறைமுகமாக பண மசோதா என்ற வடிவில் கொண்டு வரப் பட்டு பாரதிய ஜனதாவுக்கு பெரும்பான்மை இல்லாத மாநிலங்களவையில் எவ்வித விவாத மும் இன்றி சட்டப் புறம்பான வழியில் நிறை வேற்றப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஃபேல் ஒப்பந்தம் வழக்கில் உச்சநீதிமன் றத்தில் கொடுக்கப்பட்ட குறிப்பு தலைமை கணக்காயர் அறிக்கைக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே அரசால் உச்சநீதிமன்றத்தில் தரப் பட்டது பற்றியும் பாராளுமன்ற குழுவிற்கு முழு விபரங்களையும் தராமல் அரைகுறை அறிக்கையை கொடுத்தது பற்றியும், தலைமை கணக்காயர் அலுவலகம் அரசுக்கு பணிந்ததை யும் சுட்டிக்காட்டியுள்ளார்.



லோக்பால் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் லோக்பால் பொறுப்பிற்கு உறுப்பினர் களை தேர்ந்தெடுக்கும் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரும் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை எனவும் லோக்பால் அமைப்பு ஒரு

வழக்கைக் கூட விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை எனவும் லஞ்ச ஊழலை கண்டுபிடிப்பவரின் பாதுகாப்பிற்காக கொண்டு வரப்பட்ட விசில் புளோயர் சட்டம் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தாமையையும் சுட்டிக்காட்டியுள்ளார் . ரஃபேல் ஒப்பந்தத்தில் அலுவலக ரகசியங்களை பாதுகாக்கும் காலனிய கால சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப் படுமென ரஃபேல் ஊழலை வெளிக்கொண்டு வந்தவர்கள் மிரட்டப்பட்டதையும் அவர் குறிப்பிட்டார்

சி.பி.ஐ அமைப்பின் சுதந்திரம் தரம் தாழ்ந்து போனதும், சிபிஐ இயக்குனர் ஒருவர் ரஃபேல் ஒப்பந்தத்தை விசாரிக்க முனைந்ததால் ஒரே இரவில் வெளியேற்றப்பட்டதையும் அவருக்கு பதிலாக நாகேஸ்வர ராவ் என்பவர் இயக்கு னராக நியமிக்கப்பட்டதையும் அவர் ஒரே நாளில் 40 பேரை அரசுக்கு ஆதரவாக இட மாற்றம் செய்ததையும் குறிப்பிட்டார்.

மத்திய விழிப்புணர்வு ஆணையத்தின் தலைமையிலிருந்து தலைமை அதிகாரி பல வருடங்களாக நடத்திய சோதனைகளில் சஹாரா மற்றும் பிர்லா குழுமங்களில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் பிரதமர் மற்றும் பாரதிய ஜனதா கட்சி அமைச்சர்கள் கணக்கில் வராத பணத்தை பெருமளவில் பெற்றதை காட்டும் ஆவணங்கள் மறைக்கப்பட்டதையும் குறிப்பிட்டார்

தேசியப் புலனாய்வு குழுவானது இந் நாட்டின் மிக நேர்மையான மனித உரிமைப் போராளிகள் மீதும், அரசின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் மீது வழக்குத் தொடுக்கும் கருவியாக மாறியது எனவும் எவ்வித கட்டுப் பாடுமற்ற பெருமுதலாளிகள் நாட்டின் வங்கி களையும் நிதி நிறுவனங்களையும் ஏமாற்றி லட்சக் கணக்கான கோடிகளை சூறையாடினர் எனவும் இவர்கள் லண்டன் அல்லது ஆண்டிகுவா அல்லது பெர்முடா போன்ற வரி ஏய்ப்பு சரணாலய நாடுகளில் குடி புகுந்தனர் எனவும், அரசு அவர்களை இந்நாட்டிற்கு பிடித்து வருவதற்காக வெறும் நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறது எனவும் மத்திய ரிசர்வ் வங்கியின் சுதந்திரம் அழிக்கப்பட்டது எனவும் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் நீக்கப்பட்டதும் அவருக் குப் பிறகு நியமிக்கப்பட்ட உர்ஜித் பட்டேலும் வெளியேற்றப்பட்டார் எனவும், ரகுராம் ராஜன் கடன் மோசடி செய்தவர்களின் சொத்துக்கள் குறித்து விசாரிக்க முயன்றதாலும், உர்ஜித் பட்டேல் ரிசர்வ் வங்கியின் ஒரு லட்சம் கோடி பணத்தை அரசுக்குத் தர மறுத்ததாலும் வெளியேற்றப்பட்டார் எனவும், 90 விழுக்காடு வெகுஜன ஊடகங்கள் அரசின் பிரச்சார நிறுவனங்களாக மாற்றப்பட்டன எனவும் குறிப் பிட்டார்.

நியாயப்படுத்த முடியாத அரசின் நடவடிக் கைகள் மூடத்தனமாக நியாயப்படுத்தப்பட்டன எனவும் கோவிட்-19 முழு அடைப்பு, பண மதிப்பிழப்பு போன்ற நடவடிக்கைகள் நியாயப் படுத்தப்பட்டன எனவும், இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு ஊடகங்களால் விசிறி விடப் பட்டது எனவும், நூற்றுக்கணக்கான கோடி அரசு விளம்பரங்கள் மூலம் ஊடகங்கள் கைப் பற்றப்பட்டன எனவும், மறுக்கும் ஊடகங்கள் மிரட்டப்பட்டு வழிக்கு கொண்டு வரப்பட்டன எனவும், பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்றவை அரசால் கட்டுப்படுத்தப்பட்டன எனவும் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு தலைமை நீதிபதிகளின் கால கட்டத்தில் மக்களுடைய உரிமைகள் நசுக்கப் பட்டன எனவும், அரசின் ஒடுக்குமுறை போக்கை உச்சநீதிமன்றம் கட்டுப்படுத்த தவறியது எனவும் கொலிஜியம் என்ற நீதிபதிகளை நியமிக்கும் உரிமை கொண்ட முதுநிலை நீதிபதிகள் குழு வானது செயலிழந்ததையும், கொலிஜியத்தால் பரிந்துரைக்கப்பட்ட 43 பரிந்துரைகள் ஏற்கப் படாததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிபதி இர்ஷாத் அலி அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப் பட்ட பரிந்துரை நிரகாரிக்கப்பட்டதையும், குஜராத் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி அகில்குரேஷி முதலாவதாக பம்பாய்க்கும் பின்னர் மத்திய பிரதேச தலைமை நீதிபதியாக மாற்றப் பட்ட தையும் அதன் பின்னர் அவர் திரிபுரா உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக நியமிக்கப் பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

காஷ்மீரில் இன்டர்நெட் வசதிகள் தடுக்கப் பட்ட வழக்கையும், ஆட்கொணர்வு நீதிப் பேராணை தொடர்பாகவும், ஜவஹர்லால் நேரு கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டது

தொடர்பாகவும் தொடுக்கப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாததையும் திரு.அமித்ஷா அவர்களின் கொலைச் சதி வழக்கை விசாரித்து வந்த நீதிபதி லோயா மர்மான முறையில் இறந்தது தொடர்பான வழக்கையும், ரஃபேல் ஊழல் தொடர்பான வழக்கையும் விசாரிக்கும் போது மூடி முத்திரை இடப்பட்ட உறையில் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு மட்டும் கொடுத்து எதிர் தரப்பிற்கு அவ்வழக்கு ஆவணங்கள் தரப்படாமலேயே அவ்வழக்குகள் முடிக்கப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

*2013*ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முன்னாள் தலைமை நீதிபதி கோகாய் சஹாரா பிர்லா புலனாய்வு தொடர்புடைய வழக்கின் போது, சஹாரா குழுமத்தில் கைப்பற்ற ஆவணங் களில் ஒன்றில் அன்றைய குஜராத் முதல்வருக்கு *25* கோடி கொடுத்தற்கான குறிப்பு ஒன்று கிடைத்தது எனவும், ஆனால் அந்த ஆவணங் களைப் பெற்ற வருமான வரித் துறையானது சி.பி.ஐ-க்கு அவற்றினை கொடுத்திருக்க வேண்டும் எனவும், ஆனால் அவ்வாறு நடக்க வில்லை எனவும், மன்மோகன்சிங் தலைமையி லான அரசானது இவ்வழக்கை சரிவர தொடரா தது ஆச்சரியம் அளிக்கவில்லை எனவும், அதில் தொடர்புடைய அனைவரும் அவரது ஆட்சிக் கால அதிகாரிகள் எனவும், ஆனால் அடுத்து வந்த அரசும், அவற்றை கிடப்பில் போட்டனர் எனவும் தற்போதைய பிரதமர் தனது தேர்தல் கூட்டங்களில் சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டும் என்றால் திருமதி.ஜெயந்தி நடராஜன் அவர்களுக்கு ஜெயந்தி வரி கொடுக்க வேண்டும் என்று பேசினார்,

எனவே பிர்லா குழுமம் டைரி குறிப்புகள் பற்றி அவர் அறிந்திருக்கவேண்டும் எனவும், ஆனால் அன்றைய குஜராத் முதல்வருக்கு *25* கோடிகள் கொடுக்கப்பட்டதாக சொல்லும் டைரி குறிப்பே தற்போதைய அரசு அவ்வழக் கின் விசாரணையை தொடராமல் இருப்பதற்கு காரணம் எனவும்,

இது தவிர நவம்பர் *2014*ஆம் ஆண்டு திருவாளர் மோடி அவர்கள் அரசாங்கம் அமைந்த போது வருமான வரித்துறை சஹாரா குழுமத்தை சோதனையிட்டது என்றும் பணமாக மட்டும் *137* கோடி கைப்பற்றப்பட்டது எனவும் *113* கோடி ரூபாய் என்று, யாரால், எவ்வாறு, எந்த இடத்தில் கொடுக்கப்பட்டது என்ற குறிப்புகளைக் கொண்ட தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும், குஜராத் முதல்வர் திருவாளர் மோடி அவர்களுக்கு *40* கோடி ரூபாய் *9* தடவைகளாக கொடுக்கப்பட்டதாக குறிப்புகளில் கண்டிருந்த தையும் பூஷன் சுட்டிக்காட்டினார்.

இது தவிர காங்கிரஸ் முதல்வர் ஷீலா தீட்சித், மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் போன்றவர்களும் பயன்பெற்றதைக் காட்டும் குறிப்புகளும் கைப்பற்றப்பட்டன எனவும், ஆனால் இந்த ஆவணங்கள் சி.பி.ஐ வசம் ஒப்படைக்கப்படவில்லை எனவும், மேற்சொன்ன ஆவணங்கள் லஞ்சம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் குற்றம் நடந்ததை தெளிவாக காட்டிய பின்னும், வழக்கில் இவ்வாறான டைரி குற்றவியல் புலன் விசாரணைக்கு போது மானது என உச்சநீதிமன்றத்தின் முன் தீர்ப்புகள் இருந்த போதிலும் பிர்லா சஹாரா தாள்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவே யில்லை எனவும், அந்த விசாரணைக்கு பொறுப் பாக இருந்த கே.வி.சவுத்திரி என்ற வருமான வரி உறுப்பினர் தலைமை கண்காணிப்பு ஆணை யராக நியமிக்கப்பட்ட போது அதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் நீதிபதிகள் ஜகதீஷ் சிங் கேகர் மற்றும் அருண் மிஸ்ரா ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தன எனவும், அவ்வழக்கானது நீதிபதிகள் கேகர் அமர்வில் இருந்து மாற்றப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது எனவும், அவ்வழக்கின் தீர்ப்பு தவறானது என உச்சநீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் துஷ்யந்தவே அவர்கள் எழுதிய கட்டுரையும் அவர் குறிப்பிட்டார்.

நீதிபதி அருண்மிஸ்ரா தனது மருமகன் திருமணத்தை டெல்லி அரசு ஒதுக்கீடு செய்த வீட்டிலும், குவாலியரிலும் நடத்திய போது மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் அத்திருமண வரவேற்பு நிகழ்வில் குவாலியரில் கலந்து கொண்டதையும் சஹாரா வழக்கு தீர்ப்பில் அவர் பயன்பெற்றதையும் பூசன் குறிப்பிட்டார்.

உச்சநீதிமன்றம் தனது நடத்தை விதிகளை வகுத்துள்ளது எனவும் அதன்படி அரசியல் வாதிகளுடன் பழகுவதை தவிர்க்க வேண்டும் எனவும், அவ்வாறான நடத்தை விதிகள்

நடைமுறையில் இருக்கும் போது அவ்வாறான விதிகளுக்கு மாறாக தனது வீட்டு திருமணத்தில் பங்கு பெற்ற ஒருவரது வழக்கை கையாண்டது சரியல்ல என்றும் குறிப்பிட்டார்.

*09.08.2016* அன்று அருணாச்சல பிரதேச முதல்வர் கலிக்கோபுல் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு மூன்று வாரங்கள் முன்ன தாக நீதிபதி கேகர் மற்றும் திபக் மிஸ்ரா இருவரும் அவரை பதவி நீக்கம் செய்யும் முக்கிய தீர்ப்பை வழங்கி இருந்தார் எனவும், தற்கொலை செய்த கலிக்கோபுல் தனது தற்கொலை கடிதத்தில் நீதிபதியின் கேகரின் மகன் *49* கோடி ரூபாய் கொடுத்தால் சாதகமான தீர்ப்பு எழுத முடியுமென அவரிடம் கூறியதாகவும் நீதிபதி தீபக் மிஸ்ரா *37* கோடிகள் கேட்டதாகவும் தற்கொலை கடிதத்தில் சொல்லியிருந்ததையும் சுட்டிக்காட்டினார். ஆனால் இன்று வரை அது தொடர்பான புலனாய்வோ விசாரணையோ நடக்கவில்லை.

*28.08.2017*லிருந்து *01.10.2018* வரையிலான உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவின் பதவிகாலம் பலமுரண்களை கொண்டது.

நீதிபதி தீபக் மிஸ்ராவின் பதவி காலத்தில் *01.08.2017* அன்று பிரசாத் கல்வி அறக்கட்டளை தொடர்பான வழக்கில் இந்திய மருத்துவ குழு பரிந்துரைகளை மறு ஆய்வு செய்ய உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டது.

*24.08.2017*ஆம் ஆண்டு தலைமை நீதிபதி பக் மிஸ்ரா அவர்கள் பிரசாத் கல்வி அறக்கட்ட ளையின் தங்களது மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டு அலகாபாத் உயர்நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவிட்டார். இந்திய மருத்துவ குழுவின் அங்கீகாரம் பெறாத கல்லூரிகள் வழக்கில் ஒரு வழக்கை மட்டும் தனியாகப் பிரித்து அனுப்பியது வழக்கத்திற்கு மாறானது.

மாணவர்கள் சேர்க்கை தொடங்கும்படி பிரசாத் கல்வி அறக்கட்டளைக்கு உத்தரவிட்ட அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக இந்திய மருத்துவ குழு மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டில் மறுபடியும் பிரசாத் கல்விக் அறக்கட்டளைக்கு உயர்நீதிமன்றத்தை அணுகும்வாய்ப்பு தரப்பட்டது. பிரசாத் கல்வி அறக்கட்டளை வழக்கில் சி.பி.ஐ. பதிவு செய்த நீதிபதிகள் லஞ்சம் வழங்கியது தொடர்பான. முதல் தகவல் அறிக்கையில் திரு.யாதவ் என்பவர் ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி குதுசி, மற்றும் பவனா பாண்டே என்பவர்களை தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் மீரட்டிலுள்ள வெங்கடேஸ்வரா மருத்துவகல்லூரியின்சுதுர்கிரி என்பவர்மூலமாக இது தொடர்பான சிக்கல்களை சரி செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

*19.09.2017* ஆம் ஆண்டு குற்றச்சதி மூலம் லக்னோவின் பிரசாத் மருத்துவ அறக்கட்டளை வழக்கில் உச்சநீதிமன்றம் நீதிபதிகளின் தொடர்பு பற்றி விசாரிக்க திருமிகு காமினி ஜெய்ஸ்வால் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட நீதிபதி தீபக் மிஸ்ரா விசாரித்து தள்ளுபடி செய்தது, சட்ட நீதிகளுக்கும், நியாயத்திற்கும் புறம்பானது எனவும், சி.பி.ஐ பதிவு செய்த உரையாடல்களில் நீதிபதி தீபக் மிஸ்ரா அமர்வில் பிரசாத் அறக்கட்டளை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான ஐந்து நீதிபதிகளின் அமர்வில் அமர்ந்த நீதிபதிகளுக்கு வழங்க வேண்டிய லஞ்ச பணத்தையும் மற்றும் வழக்கு தொடர்பான விவரங்கள் குறித்த உரையாடல் நடந்ததையும் பூசன் சுட்டிக்காட்டினார். பிரசாத் மருத்துவ அறக்கட்டளை வழக்கில் அலகாபாத் நீதிபதி சுக்லா என்பவர் இடைக்கால தடை உத்தரவு வழங்க பணம் பெற்றது தெள்ளத் தெளிவாக தெரிந்த பிறகும் அவர் மீது வழக்கு பதிய உச்சநீதிமன்ற உள்ளரங்க நடவடிக்கை மூலம் மறுத்த தீபக் மிஸ்ரா நீதிபதி சுக்லாவை பாரளுமன்றம் மூலம் பதவி நீக்கம் செய்யவும் பரிந்துரைத்தார். ஆனால் அப்பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தவறிவிட்டது. *17.07.2020*வில் நீதிபதி சுக்லா ஓய்வு பெற்றார்.

ஜனவரி *2018*ல் நான்கு முதுநிலை நீதிபதி களான செல்லமேஸ்வர், குரியன் ஜோசப், மதன் லோகூர்;, ரஞ்சன்கோகாய் ஆகியோர் நீதிபதி தீபக் மிஸ்ராவின்சர்வதிகார போக்கை கண்டித்தும், மிக முக்கிய வழக்குகளை அவரே கையாளுவதைப் பற்றியும், குறிப்பிட்ட சில அமர்வு நீதிபதிகளின் அமர்வில் மட்டுமே அவற்றை ஒப்படைப்பது குறித்தும், மருத்துவ ஊழல், நீதிபதி லோயா இறப் பிற்கான புலன் விசாரணை வழக்கு, ஆதார் வழக்கு, நீதிபதிகள் நியமன தொடர்பான வழக்கு போன்ற வழக்குகள் கையாளப்பட்ட விதம்


குறித்தும் பூசன் அதிருப்தி தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலிருந்த போது பீமா கொரேகாவ்ன் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமூக போராளிகள் மீது புனே காவல்துறையால் புனையப்பட்ட வழக்கை சிறப்பு புலனாய்வு குழுவிற்கு மாற்றம் செய்ய மறுத்தது உச்சநீதிமன்றம், மகராஷ்ராவில் 2019ஆம் ஆண்டு தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தோல்வியடைந்தவுடன் தானகவே முன் வந்து சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்டதையும் பின்னர் சமூக போராளிகளும், அறவழியில் நம்பிக்கைடையவர்களுக்கும், பிணை வழங்க உச்சநீதிமன்றம் மறுத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிபதி ரஞ்சன் கோகாய் அவர்களின் பதவிக்காலத்தில் அஸ்ஸாம் தேசிய குடியுரிமை வழக்கு, ரபேல் வழக்கு, சி.பி.ஐ இயக்குநர் வழக்கு போன்றவற்றை அவர் கையாண்ட விதம் குறித்து பூசன் கவலை தெரிவித்தார். அஸ்ஸாம் தேசிய குடியுரிமை பதிவேடுகள் தொடர்பாக நீதிபதி கோகாய் கையாண்ட வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித பரிகாரம் பெற முடியாத சூழல் ஏற்படும் விதத்தில் நீதிமன்றமே குடியுரிமை பதிவேட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் நிதி பெறுவது தொடர்பான வழக்கு அனைத்து கட்சிகளுக்கு நன்கொடை வழங்கியவர்களின் விவரங்களை மூடி முத்திரையிடப்பட்ட உரைகளில் பெற்று அதன் அடிப்படையில் அவ்வழக்கை கையாண்ட முறை குறித்தும் பூசன் கவலை தெரிவித்தார். தேர்தல் பத்திரம் நடைமுறைக்கு மத்திய ரிசர்வ் வங்கி எதிர்ப்பு தெரிவித்தும், விதிகள் வளைக்கப்பட்டு 95 விழுக்காடு தேர்தல் பத்திரங்கள் ஆளுங்கட்சி மட்டுமே பெற்றதையும் பூஷன் சுட்டிக்காட்டினார்.

காஷ்மீரில் ஒரு வருட முழு அடைப்பு நிகழ்ந்ததையும் உறுப்பு 370 நீக்கம் செய்யப்பட்ட வழக்கில் காஷ்மீர் மூன்றாக துண்டாப்பட்டதையும், அதன்மூலம் அமைதி திரும்பும் என்ற அரசின் வாதம் காஷ்மீரில் 4ஜி அலைக் கற்றையை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வழக்கில் காஷ்மீரில் வன்முறை நிலவுகிறது



லஜபதிராய்

என்றும் அரசு முரண்பாடாக வாதம் செய்ததையும் பூஷன் சுட்டிக்காட்டினார்.

காஷ்மீர் தொடர்பான ஆட்கொணர்வு நீதிப் போராணைகளில் மெத்தன போக்கை உச்சநீதி மன்றம் கடைபிடித்ததையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சீதாராம் யெச்சூரி தாக்கல் செய்த வழக்கில் அவசர மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர் யூசுப்தாரிகமி தாமதமாக விடுதலை செய்யப் பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாமர் மசூதி வழக்கில் அவசரம் காட்டிய கோகாய் 40 நாட்கள் தொடர்ச்சியாக அவ் வழக்கை விசாரித்து, நீதிமன்ற அவமதிப்பு ஏற்படுத்தி உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக பாபர் மசூதியை இடித்தமை சட்ட விரோதம் என தங்கள் 09.11.2019ஆம் ஆண்டு தீர்ப்பில் குறிப்பிட்ட போதிலும், பாபர் மசூதி இடிக்கப் பட்ட அதே இடத்தில் ராமர் கோவில் கட்ட வேண்டும் என அளித்த தீர்ப்பின் மூலம் சட்ட விரோத மசூதி இடிப்பை நியாயப்படுத் தியதுடன் அது சட்டத்தின் ஆட்சிக்கு முரணான தீர்ப்பு எனவும் பூசன் குறிப்பிட்டுள்ளார்.

பாபர் மசூதி தீர்ப்பில் தீர்ப்பு அளித்த நீதிபதியின் பெயர் குறிப்பிடாததையும் சட்ட விரோதமான பின்னிணைப்பு ஒன்றை 116 பக்கங்கள் வழங்கியதும் கேள்விக்குரியது எனவும்,

ஒருமித்த ஆனால் ஒளிந்து கொள்ளும் தீர்ப்பு unanimous but anonymous என நீதிபதி ஏ.பி.ஷா எழுதிய கட்டுரையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி கோகாய் மீது நீதிமன்ற இளநிலை உதவியாளர் ஒருவர் பாலியல் தொந்தரவு புரிந்தாக குற்றம் சாட்டியவுடன், குற்றம் சாட்டிய பெண்மணி மூன்று முறை பணிமாற்றம் செய்யப்பட்டு இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டதையும், டெல்லி காவல்துறையில் பணிபுரிந்த அப்பெண்மணியின் கணவரும், மைத்துனரும் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

அப்பெண்மணியின் மாற்றுதிறனாளியான இன்னோரு மைத்துனர் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டதையும் பூசன் சுட்டிக்காட்டினார் அப்பெண்மணி தாக்கல் செய்த உறுதிமொழி தாள் குறித்த வழக்கில் நீதிபதி கோகாய் தன் மீதான வழக்கைத் தானே அமர்ந்து முடிவு செய்தது அடிப்படை சட்டக்கருத்தான 'தனது வழக்கில் தானே தீர்ப்பளிக்க கூடாது' என்ற சட்ட மீறல் எனவும், பூஷன் குறிப்பிட்டார்.

பாலியல் தொந்தரவு வழக்கில் அமைக்கப்பட்ட குழுவின் நீதிபதிகள் அரவிந்த போப்டே. இந்து மல்ஹோத்ரா, மற்றும் இந்திராபானர்ஜி ஆகியோர் இடம்பெற்ற போதிலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்காக வழக்கறிஞர் முன்னிலையாக அனுமதிக்காததால் புகார் கொடுத்த பெண் மணி அக்குழுவின் முன் முன்னிலையாக விரும்பாததையும் பூசன் குறிப்பிட்டார்.

நீதிபதி கோகாய் மீதான குற்றச்சாட்டு மூன்று நீதிபதிகள் குழுவினால் முடித்துவைக்கப்பட்டாலும் அதன் இறுதி அறிக்கை வெளியிடப் படவேயில்லை என்பதையும், அப்பெண்மணி மறுபடியும் பணி அமர்த்தப்பட்டதையும், அவர்களது மைத்துனர்களுக்கு பணி வழங்கப் பட்டன எனவும். ஆனால் கோகாய் விவகாரம் திரை மூடிய மர்மமாகவே இன்றும் இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

நீதிபதி கோகாய் தலைமையிலான கொலிஜியம் என்ற முதுநிலை நீதிபதி குழு குஜராத் மாநிலத்தில் அரசுக்கு எதிராக பல முக்கிய தீர்ப்புகளை வழங்கிய அகில் குரேஷி பம்பாய் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றி பின்னர் மத்திய பிரதேச தலைமை நீதிபதியாக பரிந்துரைத்து, இறுதியில் திரிபுரா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக்கப்பட்டதையும் பூசன் குறிப்பிட்டார்.

ஓய்வு பெற்ற நான்கு மாதங்களில் நீதிபதி கோகாய் மாநிலங்களவை உறுப்பினர் பதவி பெற்றதையும், சாமானிய மனிதர்களுக்கு நீதித் துறை அமைப்பின் மீது உள்ள நம்பிக்கை சிதைந்து போனதையும் 'உதவிக்கு பதவி' என்ற அடிப்படையில் நீதிபதியும், அரசும் கைகோர்த்து கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிபதி போப்டே அவர்கள் குடியுரிமை திருத்த சட்டம் தொடர்பான வழக்குகளில் மக்களைக் காப்பாற்றத் தவறியதையும், டெல்லி கலவரத்தில் டெல்லி எரிந்த போது நீதிபதி முரளிதரன் அவர்கள் 26.02.2020 முதல் தகவல் அறிக்கை பதிய உத்தரவிட்டதையும் அன்று நள்ளிரவே அவர் மாற்றம் செய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டினார் . இது தவிர புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வழக்கு, காஷ்மீர் வழக்கு 4ஜி அலைக்கற்றை வழக்கு ஆகியவற்றில் நீதிபதியின் போப்டே அவர்களின் உத்தரவுகள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதாக இல்லை என பூஷன் சுட்டிக்காட்டினார்.

இது தவிர ஏராளமான தரவுகளை தான் தர முடியும் எனவும், மேற்சொன்ன நிகழ்வுகளின் அடிப்படையிலேயே தான் கடந்த ஆறு ஆண்டுகளில் குடியாட்சி சிதைக்கப்பட்டதையும் அதில் நான்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகளின் பங்கு குறித்தும் தனது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டதாகவும், அவ்வாறு கூற அரசியலமைப்பு சட்டம் 19(1)(ஏ)யின் படி தனக்கு கருத்துரிமையுள்ளது எனவும், ஆகஸ்ட் மாதம் இரண்டாம்நாள் 2020 ஆம் ஆண்டில் தனது உறுதி மொழி வாக்குமூலத்தை அளித்தார் .

மேற்சொன்ன உறுதிமொழி வாக்குமூலத்தின் அடிப்படையில் இன்று பூசனுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கு உட்பட பல வழக்குகளில் பல அரசியல்கட்சிகள் நீர்த்து போன கருத்துகளை கூறி வந்த சூழலில் பூசனின் உச்ச நீதிமன்ற வாக்குமூலம் மகிழ்ச்சி அளிக்கிறது.

**தி.லஜபதி ராய்**

*மதுரை, 31.08.2020*

பின்குறிப்பு: உதவிய சீனி, புஷ்பவள்ளி, நர்கிஷ் ஆகியோருக்கு நன்றி.!



# நீட் தொடரும் கொலைகள்

## விரிவான அலசல்

**சமூக நீதிக்கு எதிரானது நீட், நீட் கடந்து வந்த பாதை, நீட் தொடரும் கொலைகள், மருத்துவத் துறையில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சி**

### நீட் தொடரும் கொலைகள்

நீட் எனும் மருத்துவ நுழைவுத்தேர்வு தமிழகத்தில் தொடங்கிய காலம் தொட்டு தங்கை அனிதாவில் தொடங்கி நேற்றைய இரண்டு மாணவர்கள் வரை எக்கச்சக்க உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நீட் தொடரும் என்று சர்வாதிகார போக்கில் நடந்து கொள்கின்றன அரசுகள். அதற்கு பல்வேறு பொய்க்காரணங்கள் குறிப்பிட்டு நியாயப்படுத்தவும் படுகின்றன.

நீட் தேர்விற்கு முன்பு தமிழகத்தின் நிலையும், நீட் தேர்வுக்கு பின்னால் தமிழகம் சந்திக்கும் நிலையும் ஒப்பாய்வு செய்யும் போது தான் நீட் தேர்வின் விபரீதத்தை புரிந்து கொள்ள முடியும். நீட் மாநில அளவில் தமிழகத்தை எந்தளவுக்கு வருங்காலத்தில் பின்னுக்கு செல்ல வைக்க போகிறது என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும்.

### நீட் தேர்வுக்கு முன்னால் தமிழகம்

நம் நாட்டில் கொடுக்கப்படும் கல்வி அனைத்து வகுப்பினருக்கும் சென்றடையக் கூடிய ஒன்றாக இருக்கிறது. அதாவது எழை, பணக்காரன், தாழ்ந்தவன், உயர்ந்தவன் என அனைவருக்கும் சேர வேண்டிய ஒன்றானதாக இருக்கிறது. கல்வியின் நோக்கம் நம் மக்களுக்கு தம் திறமையால் சேவை செய்பவர்களை உருவாக்குவதே.

திறமையாளர்கள், சேவை மனப்பான்மை உள்ளவர்கள் ஜாதி, மதம் பார்த்து பிறப்பதில்லை. அனைத்து பிரிவினர்களிலும் இத்தகைய மக்கள் பிறக்கிறார்கள். இதை உணர்ந்தே அனைவருக்குமான கல்வியை கொண்டு சேர்ப்பதில் நம் தமிழ்நாடு பெரும் சாதனைகளை செய்து வருகிறது. நம் மாநில அரசு எக்கட்சியால் ஆளப்பட்டாலும் இந்த தூர நோக்கு திட்டத்தில் பின் 0தங்குவதில்லை. அதற்கு காரணம், திராவிட பின்னணியை கொண்ட சமூக நீதி கோட்பாட்டுடன் கல்வி நடைமுறைப்படுத்தப் படுகிறது.

அத்தோடு நமது கிராம சுகாதார திட்டத்தால், தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது. கிராமம்தோறும் பெண்களுக்கான மகப்பேறு மருத்துவ திட்டம் தமிழ்நாட்டின்சிறப்பானதிட்டங்களில்ஒன்று. மேலும் இத்திட்டத்தில் கிராமங்களில் பணியாற்றும்

மருத்துவர் பணியிடங்கள் கிட்டத்தட்ட நிரப்பப்பட்டு பற்றாக்குறையே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக மருத்துவர்கள் கிராமங்களில் பணியாற்றுவதை தவிர்க்கும் நிலையில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல வகைகளில் மருத்துவ சுகாதார பிரிவுகளில் தமிழர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் திட்டங்களில் மருத்துவர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள்.

மருத்துவர் இல்லையெனில் மருத்துவமனை வெறும் கட்டடமாகவே மதிக்கப்படும். இத்தகைய வளர்ச்சியை இத்துறையில் நாம் சாதிக்க காரணம், கடந்த பல பத்தாண்டுகளாக நாம் பின்பற்றி வந்த கல்வி கொள்கையே. 12ம் வகுப்பு மதிப்பெண்ணை வைத்து உருவான வளர்ச்சி இது. இதனால் தான் நுழைவுத்தேர்வு முன்னேற்பாடுகளுக்கு வசதிகளை பெற முடியாத கிராமத்து மாணவர், ஏழை மாணவர் மருத்துவராக முடிந்தது.

மருத்துவ படிப்பை முடித்த மருத்துவர், தன் கிராமத்தில் மருத்துவமனையை அமைக்க முடிந்தது. தங்கள் சேவையை நினைத்து மெச்சி நின்றார்கள்.

இதனால் பொருளாதார வசதி, அந்தஸ்து போன்றவைகள் சுழற்சி முறையில் எல்லா தரப்பு குடும்பங்களுக்கும் சென்றடைந்தது. வாழ் வழித்தது.

எம்.பி.பி.எஸ் படிப்புக்கு பின் சிறப்பு மேற்படிப்பிற்கான 195 இடங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மருத்துவ கல்லூரிகளில் உள்ளது. இத்தகைய மேற்படிப்பிற்கு வட நாட்டின் 10 மாநிலங்களில் ஒரு இடம் கூட இல்லை.இது எந்தளவுக்கு அவர்கள் பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை நமக்கு காட்டுகிறது.

ஆக இவர்களா நமக்கு வழிகாட்டி? முன்னேறியவனே பின்தங்குபவனுக்கு எடுத்துக்காட்டாக இருப்பான்.இதை நினைவில் கொண்டிருந்தால் மத்திய பி.ஜே.பி அரசு நீட் தேர்வை நமக்கு விதியாக்கியிருக்காது.நமக்கு மட்டுமல்ல, அகில இந்தியளவில் நீட் தேர்வை ரத்து செய்திருக்கும்.

## தமிழகம் நீட்டிற்கு பிறகு பின் தங்கியிருக்கும் புள்ளிவிவரங்கள்

தமிழகத்தில் மட்டும் தான், இந்தியாவிலேயே அதிகப்படியான மருத்துவத்துறையின் சிறப்பு சிகிச்சைகளுக்கான உயர்மேற்படிப்பில் 195 சீட்டுகள் இருக்கிறது. இந்தியாவில் உள்ள 10 மாநிலங்களில் ஒரு சீட் கூட இல்லாத நிலையும், 10 மாநிலங்களில் பத்துக்கும் குறைவான சீட்டுகளே இருக்கின்றன. இந்த நிலையில் கடந்த ஆண்டு(2017) நடத்தப்பட்ட NEET-SS நுழைவுத்தேர்வில் வெறும் 19 பேர் தான் தமிழகத்தை சார்ந்தவர்கள். தேர்வான மற்றவர்கள் எல்லாம் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள். . இது தொடர்ந்தால் மருத்துவத் துறையிலும், சிறப்பு சிகிச்சை முறையிலும் பேர் பெற்றிருக்கும் தமிழ்நாடு அந்த நிலையை இழக்க நேரிடும் என்கிறார்கள் தமிழக மருத்துவர்கள்.

MBBS சேர்வதற்கு நடத்தப்படும் நீட் தேர்விலும் இதே நிலை தான். கடந்த ஆண்டு நீட் தேர்வில் 720 மதிப்பெண்ணிற்கு 420 க்கு அதிகமாக மதிப்பெண் எடுத்தவர்கள் தமிழ்நாட்டில் வெறும் 470 பேர் மட்டும் தான். ஆனால் அதுவே கேரளாவில் 4000 மாணவர்கள், உத்தரபிரதேசத்தில் 11900 மாணவர்கள், டெல்லியில் 9000 மாணவர்கள் 400 க்கு மேல் வாங்கியிருக்கிறார்கள். ( 07-08-17) TOI,mdu.)

தமிழ்நாட்டில் மொத்தம் 22 அரசு மருத்துவ கல்லூரியில் 2447 MBBS சீட்கள் இருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டில் அரசு பள்ளியிலிருந்து நீட் தேர்வின் மூலம் வெறும் 4 பேருக்கு மட்டும் தான் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுவே 2017ல் 2 பேர் என்ற அளவில் தான் இருந்தது.

ஆனால், 2016ம் ஆண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு அடிப்படையில் நடந்த மருத்துவ சேர்க்கையில் அரசு பள்ளியில் இருந்து 30 மாணவர்கள் தேர்வாகியிருந்தார்கள். இந்த எண்ணிக்கை போதாது எனும் நிலையில் கூட, முன்னேறி கொண்டிருந்த வளர்ச்சியையும் அழித்து தமிழகத்தை படுபாதாளத்தில் தள்ளியிருக்கிறது மத்திய அரசு கொண்டு வந்த 'நீட்' நுழைவுத் தேர்வு. - TOI 21-08-18.

## மருத்துவத் துறையில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சி

உலகத்தரத்தில் கீபிளி விதி, 1000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என சொல்

கிறது. ஆனால், தமிழகம், கேரளா, கர்நாடகம், டெல்லி போன்ற மாநிலங்களில் இதை விட அதிகமான மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்று மருத்துவதுறையின் உச்சியை தொட்டிருப்பதாக சொல்லப்படும் மேலை நாடுகளுக்கு நிகராகவும், அதிகமாகவும் தமிழகத்தின் வளர்ச்சி இருக்கிறது.

1000 பேருக்கு 4 மருத்துவர்கள் என்பது தமிழகத்தின் நிலை, இது நார்வே(4.3), ஸ்வீடன்(4.2) ஆகிய நாடுகளுக்கு இணையான வளர்ச்சியாகும். இதுவே டெல்லியில் 1000:3, ஹிரி, அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு இணை யான வளர்ச்சி. கேரளா மற்றும் கர்நாடாகாவில் 1000:1.5 எனவும் பஞ்சாப் மற்றும் கோவா 1000:3 என்ற அளவிலான வளர்ச்சியையும் பெற்றிருக்கின்றது. (- TOI 02-09-18)

தமிழகத்தில் கல்வி வளர்ச்சி அடைந்ததற்கான காரணம், இங்கிருந்த திராவிட சித்தாந்த சிந்த னையாளர்களே. ராஜஸ்தான், உத்திர பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்களில் 4 பேரில் ஒருவர் மட்டுமே எழுத, படிக்க தெரிந்தவர்கள். ஆனால் தமிழகம் மற்றும் கேரளாவில் இது 100% ஆக இருக்கிறது. உயர் படிப்பிற்கு செல்வோர்கள் விகிதம் தமிழகத்தில் 49.3% ஆக இருக்கிறது. இது தேசிய(இந்திய) அளவில் இருப்பதை விட இருமடங்கு அதிகம். உலக அளவில் 10% அதிகம். (wire 05-09-2018 )

## நீட்டினால் உண்டாகும் ஆபத்துகள்

## நீட் கடந்து வந்த பாதை

நீட் மூலம் தமிழக மாணவர்கள் எந்தளவு ஏமாற்றப்பட்டிருப்பார்கள் என்பதை நீட் கடந்து வந்த பாதையின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

முதன் முறையாக நீட் 2013ல் தொடங்கப் பட்டது. அப்போதே தமிழகம், கேரளம் போன்ற மாநிலங்கள் கடுமையாக எதிர்த்து உச்சநீதி மன்றத்தை அணுகின.

ஜூலை, 2013: நீட் தேர்வு அரசியலமைப் பிற்கே எதிரானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப் பளித்தது.

ஏப்ரல் 2016: நீட் தேர்விற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது. (2013ல் காங்கிரஸ் ஆட்சியின் போது அரசியலமைப்பிற்கு எதிராக இருந்த நீட் 2016ல் மோடி ஆட்சியின் கீழ் அரசியல மைப்பிற்கு உரியதாக மாறிபோனது)

மே, 2016: முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தன் தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டவாறு நீட் தேர்வு தமிழகத்திற்கு கூடாது என்று பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார்.

2017: 2017ம் ஆண்டு முதல் தமிழகத்தில் நீட் கட்டாயமாகப்பட்டு தேர்வு தொடங்கியது.

ஜூலை 14,2017 : மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு 85% இடஒதுக்கீடு தமிழகத்தின் மருத்துவ கல்லூரியில் கொடுக்கப் படும் என தமிழகம் நிறைவேற்றிய அரசாணை உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. (BBC 05.09.2017)

## சமூக நீதிக்கு எதிரானது நீட்

நீட் தேர்வுக்கு தயார் ஆக வேண்டும் என்றால் அது ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் முடியாத ஒன்று. தனியாக கோச்சிங் செண்டர் வழியாக படிக்க முடியாத மாணவர்கள் நீட் தேர்வில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. இது ஒருபுறம் இருந்தாலும் அடிப்படையிலேயே இத்தேர்வு சமநிலைக்கு எதிரானது.

மாநில பாடத்திட்டம் இருந்த வரையில் போட்டி என்பது ஒரு ஆண்டில் 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்குள் மட்டுமே இருந்தது. அனைவரும் ஒரே பாடத்திட்டத்தை ஓராண்டு படித்து தேர்வை எதிர்கொண்டார்கள். ஆனால், நீட் வந்த பிறகு நிலைமை தலைகீழானது. ஒரு அரசாங்க பள்ளி மாணவர் 12ம் வகுப்பு முடித்து நீட் தேர்வை எதிர்கொள்ள வேண்டுமென்றால் அவர் போட்டியிடுவது ஏற்கனவே 12ம் வகுப்பு முடித்து இரண்டாண்டுகள் முழுக்க நீட் தயாரிப்பு செய்த மாணவருடன் போட்டியிடு கிறான். அடிப்படையிலேயே இவன் இரண்டு ஆண்டுகள் தயாரிப்பில் பின்தங்கியிருக்கும் போது இது எப்படி சமமான தேர்வு முறையாக இருக்கும்.

சென்ற கல்வியாண்டில்(2019) மொத்தம் தமிழகத்தில் 1.23.078 மாணவர்கள் நீட் தேர்வு எழுதினார்கள். அதில் 59,785 மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள். இதிலும் தமிழகத்தில் இருக்கும் 3250 அரசு மருத்துவ கல்லூரிகளில்

உள்ள இடங்கள், தனியார் கல்லூரியில் உள்ள 3600 இடங்கள் தவிர மற்ற 52935 மாணவர் களுக்கு தமிழக கல்லூரிகளில் வாய்ப்பில்லை.

இந்த 3250+3600= 6850 இடங்களும் நீட் தேர்வுக்காக இரண்டாண்டுகள் வரை தயார் செய்தவர்கள் தான் பெரும்பாலும் இடம் பிடிப் பார்கள் என்பது தான் யதார்த்தமான நிலை. சென்ற ஆண்டில் (2019) தமிழகத்தில் MBBS படிப்பில் சேர்ந்த மாணவர்கள் 70% பேர் பழைய மாணவர்கள். அதாவது ஓராண்டுக்கு மேல் நீட் தயாரிப்பு செய்து வெற்றி பெற்றவர்கள். இது எப்படி சமமான தேர்வு முறையாக இருக்கும். (BBC Tamil 07.06.2019) (விகடன் 12.06.2019)

## கிராமங்களை மறக்கடிக்கும் நீட்

நீட் வருகைக்கு முன் தமிழகத்தில் மருத்து வர்கள் உயர்படிப்பு படிக்க வேண்டும் என்றால் மூன்று வருடங்கள் கட்டாயமாக ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது கிராம அரசு மருத்துவ மனைகளில் பணியாற்ற வேண்டும் என்ற விதி இருந்தது. நீட்டிற்கு பிறகு இது அவசியமற்றதாக மாறியிருக்கிறது.

மூன்று வருடங்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் கிராமங்களில் இருக்கும் மருத்துவ தேவையை உணர்ந்து சேவை மனப்பான்மையுடன் செயல் பட தொடங்குவார்கள். இது மருத்துவர்களை கிராமங்களை நோக்கி நகர்த்த பெருமளவுக்கு உதவியும் செய்தது. ஆனால், இந்த விதி தளர்த் தப்பட்ட பிறகு மருத்துவம் படிப்பவர்களுக்கு தனது துறையை பொருளாதாரத்தை உயர்த்து வதற்காக மட்டும் பயன்படுத்தும் கருவியாக மாற்றும் சூழல் உருவாகியிருக்கிறது.

நீட்டில் தேர்ச்சி பெற கோச்சிங் செண்டர் உதவி அவசியம். இந்த கோச்சிங் செண்டர்களை ஏழைகளாலும், ஒடுக்கப்பட்ட மக்களாலும் பெற முடியாது. அதனால் நீட் மூலம் உருவாகும் மருத்துவர்கள் ஏழ்மை நிலை அறியாத மருத்து வர்களாகவும் உயர் சமூகத்து மருத்துவர்களா கவுமே இருப்பார்கள். இது கடந்த காலங்களில் ஒடுக்கப்பட்ட, ஏழ்மை நிலையில் இருந்து மருத்து வராக மாறி தன் சமூகத்துக்கு, கிராமத்துக்கு உதவும் தியாக உணர்வு கொண்ட மருத்துவத் திற்கு மாறானதாக இருக்கிறது. (BBC Tamil 07.06.2019)

## மாநில உரிமைகளில் கைவைப்பு

2018ம் ஆண்டு நடந்த நீட் நுழைவுத்தேர்வில்






உயர் நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகளில் தமிழக மாணவர்கள் அதிகமாகவே மன உளைச்சலுக்கு உள்ளானார்கள்.

தமிழகத்திலிருந்து நீட் தேர்வை எழுத 1500 பேருக்கு கேரளா, கர்நாடகம், ராஜஸ்தான் என வெளி மாநிலங்களில் தேர்வு மையங்கள் ஒதுக் கப்பட்டிருந்தன. இதனை ஒட்டி மதுரை உயர் நீதிமன்றம் தமிழகத்திற்குள்ளேயே தேர்வு மையம் ஒதுக்க வேண்டும் என்று உத்தர விட்டது. இதனை நம்பி முன்பதிவு செய்திருந்த பயணச்சீட்டுகளையும் ரத்து செய்தனர் பல மாணவர்களின் பெற்றோர்கள். ஆனால் இறுதி நேரத்தில் உச்ச நீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பு செல்லாது என உத்தரவிட்டது. இதில் தமிழக மாணவர்கள் பல்வேறு மன உளைச்ச லுக்கு ஆளாகி தேர்வு மையத்திற்கு சென்றார்கள். (the week04 05 18)

நீட் தேர்வில் தமிழில் தேர்வெழுதிய மாண வர்களுக்கு 49 கேள்விகள் தவறாக கொடுக்கப் பட்டிருந்தது. அதனால், மதுரை உயர்நீதிமன் றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 198 மதிப் பெண்களை கருணை அடிப்படையில் வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனால் ஆறுதலைடந்த மாணவர்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றத்தை தந்தது.

உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து CBSE உச்சநீதிமன்றத்தை முறையிட்ட போது, எந்த மதிப்பெண்ணும் வழங்க முடியாது இது தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்களின் குற்றம். ஆங்கிலத் தில் சரியாகவே இருந்தது. மாணவர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை, அதனால் கருணை மதிப்பெண் வழங்கக்கூடாது என்ற சிபிஎஸ்இ தரப்பின் வாதத்தை ஆமோதித்து உச்ச நீதி மன்ற மும் அதே தீர்ப்பை வழங்கியது. - TOI 21-08-18.

## மாணவர்களின் கனவுகளை சிதைந்திருக்கிறது

கிராமப்புறங்களில் இருக்கும் மாணவர்கள் வரை வகுப்பில் முதல் மாணவனாக வரும் மாணவருக்கு தன் லட்சியம் மருத்துவராக வேண்டும் என்பதாகவே இருக்கும். ஆனால் இந்த லட்சிய எண்ணம் கூட தற்போது சுருங்கி கொண்டிருக்கிறது, கிராமப்புறங்களில் படிக்கும் அரசு மாணவர்கள் நீட் தங்களுக்கு கிடைக்காது என்று புறக்கணிக்கும் மனநிலைக்கு கூட தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஆண்டு நீட் தேர்வுக்கு தமிழகத்தில் விண்ணப்பித்திருக்கும் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 17% குறைவாக இருக்கிறது. இந்த குறைவுக்கு கொரோனா நோய் காரணம் என்று சொல்லப்பட்டாலும் மாணவர்களின் விலகுதல் தன்மையே இதில் பெரும் ஆபத்தானதாக இருக்கிறது. (தினமணி 23.01.2020)

## சங்கிகள் வைக்கும் பொய்க் குற்றச்சாட்டுகள்

நீட் கொண்டு வந்த பிறகு தான் மருத்துவம் ஏழைகளுக்கும் கொண்டு செலல்ப்பட்டிருக்கிறது என்ற மேலோட்டமான குற்றச்சாட்டை வைக் கிறார்கள் நீட் ஆதரவாளர்கள்.

தமிழகத்தில் 2016க்கு முன் மாநிலப் பாடத் திட்டத்தில் மருத்துவத்தில் ஒரு மாணவர் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்றால் சேர்த்து மொத்தமாக 13,600 ரூபாய். உலக அளவில் மருத்துவம் படிக்க இதுவே மிக குறைந்த செலவாகும். ஆனால் நீட்டிற்கு பிறகு இதே கட்டணம் தான். ஆனால், நீட் தயாரிப்பிற்காக கோச்சிங் செண்டர்களில் லட்சங்கள் செலவு செய்யப்படுகிறது.

இறுதியாக நீட் ஒரு வியாபாராமாக மாற் றப்பட்டு கோடிக்கணக்கில் பணம் செழிக்கும் நீட் கோச்சிங் செண்டராக மாற்றப்பட்டுள்ளது, இதனால் வடநாட்டு பயிற்சி மையங்களுக்கு தமிழகத்தில் பெரும் வசூல் நடக்கிறது. ஆக, மொத்தத்தில் மருத்துவம் நீட்டிற்கு முன்பு இருந்ததை காட்டிலும் பெரும் வியாபாரமாக மாற்றப்பட்டுள்ளது.

இன்னொரு பச்சைப்பொய் நீட்டிற்கு முன்பாக மிக குறைவான மதிப்பெண் பெற்ற வர்கள் கூட மருத்துவத்தில் நுழைந்து விட முடியும் என்பது! 2016க்கு முன் 12ம் வகுப்பின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் மதிப்பெண் விகிதம் 99.5 %- 97.5%க்குள் முடிந்து விட்டது. இது தான் புள்ளி விவரம். ஆனால், அரசு கல்லூரிகளில் பணம் கொடுத்து மிகக் குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்ற பொய்யான குற்றச் சாட்டு வைக்கப்பட்டே வந்தது.

(இந்து தமிழ் 27.07.2020)

## கொச்சையான அரசியல் செய்யும் சங்கிகள்

நீட் தேர்வின் இத்தகைய கொடூர சூழலை மனதில் வைத்து பல மாணவர்கள் தற்கொலை செய்கிறார்கள். அவர்களின் மரணத்திற்கு காரணமாக அமைந்த நீட்டை எதிர்ப்பதற்கு பதிலாக மிக அருவருப்பாக எள்ளி நகைக் கிறார்கள் சங்கிகள். இவர்களெல்லாம் தமிழகத்தில் அமர்ந்து கொண்டு தமிழகத்திற்கு துரோகம் இழைப்பவர்கள்.

## தமிழகமே நடத்தட்டும்.

தமிழகம் மற்ற மாநிலங்களை விடவும் பெரும் வளர்ச்சியை அடைந்த நிலையில் சில கிராம சுகாதார மையங்களில் இன்னமும் தட்டுப்பாடு நிலவவே செய்கிறது. ஆனால், இந்த நிலையில் தமிழகத்திலிருந்து வரும் மருத்துவர்களின் எண்ணிக்கை பகுதியாக குறையும் போது தமிழகம் மருத்துவத் துறையில் பெரிய பின்னடைவை சந்திக்க வேண்டியிருக்கும்.

சமூக நீதி மூலம், அரசு பள்ளியில் படித்து கொண்டிருந்த ஏழை மாணவர்களுக்கு கிடைத்து கொண்டிருந்த அரிய வாய்ப்பை பிடுங்கியி ருக்கிறது 'நீட்'. அதனால் தான் பொதுத்தேர்வில் 1176 மதிப்பெண் வாங்க முடிந்த அனிதாவால் நீட் தேர்வில் 720க்கு வெறும் 86 மதிப்பெண் மட்டும் பெற முடிந்தது. ஒரு ஏழை மாணவியை மருத்துவராக்கும் சமூக நீதி முறையை ஒழித்து விட்டு, அனைவரும் எட்டி பிடிக்க முடியாத தூரத்தில் கல்வியை வைத்திருக்கும் 'நீட்' நுழைவுத்தேர்வை நடைமுறைப் படுத்தியது தான் அனிதா'வின் தற்கொலைக்கு காரணம். அனிதாவையும் சேர்த்து தமிழகம் தனக்கான உரிமையையும், வளர்ச்சியையும் மத்திய அரசிட மிருந்து இழந்து வருகிறது. இதை மீட்டெடுக் காமல் போனால் தமிழகத்திற்கு பேரிழப்பாக மாறும் அபாயம் இருக்கிறது.

இங்கே 12வது மதிப்பெண் தான் பிரச்சனை என்றால் தமிழகமே நுழைவுத்தேர்வை நடத் தட்டும். இதில் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் ஒரே தேர்வு என்பதெல்லாம் தமிழ கத்தின் வளர்ச்சியை பின்னோக்கி இழுக்கும் செயல் என்கிறார்கள் மருத்துவ அமைப்புகள். ( 07-08-17) TOI,mdu.)

**-அபூ சித்திக்.**



தொடர்

# சிலுவைப் போர்கள் 2.0

புகுமுன்
அன்பார்ந்த வாசகர்களே!

ஜான் பெஃபர் அவர்கள் இந்தத் தொடரில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்க எப்படிப் பொய்களை இட்டுக் கட்டுகின்றார்கள் மேலை நாட்டவர்கள் என்பதைச் சுட்டிக் காட்டி வருகின்றார்.

முஸ்லிம்களைக் கொலை வெறிக் கொண்டவர்களாகவும், மனிதாபிமானம் அற்றவர்களாகவும் வரலாறு முழுவதும் மேலை நாட்டவர்கள் சித்தரித்தது. இதைத்தான் இந்தியாவிலுள்ள பாசிஸ்ட்டுகளும் பின்பற்றி பொய்களைப் பரப்புகின்றார்கள்.

ஆனால், போர்களின் போதுகூட முஸ்லிம்கள் மனிதநேயம் மிக்கவர்களாகவும், இங்கிதம் தவறாதவர்களாகவும் நடந்து கொண்டார்கள். காரணம், இஸ்லாம் காட்டும் வழிகாட்டுதல்கள். இதனை ஜான் பெஃபர் அவர்கள் ஓரிருவரிகளில் தனது நூலில் சுட்டிக் காட்டினார்கள்.

அவரால் தனது நூலில் அதனை விரிவாகச் சுட்டிக்காட்டிட இயலவில்லை. ஆனால், நாம் போர்களின் போது இஸ்லாம் வகுத்து வழங்கிய வழிகாட்டுதல்களை விரிவாகவே சுட்டிக் காட்டிட விரும்புகின்றோம்.

இந்த வரலாற்று உண்மைகள் இன்றைக்கு வளர்ந்து வரும் இஸ்லாமோ போஃபியாவை எதிர்கொள்ள அதிகமாக பயன்படுத்துவோம். இன்ஷா அல்லாஹ்..!

இந்தத் தொடரில் அதை விரிவாகத் தந்திடுவோம் என்பதை சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த இதழில் மீண்டும் ஜான் பெஃபர் அவர்கள் கூறுவதைத் தருகின்றோம்.

**ஜான் பெஃபர் கூறுகின்றார்....**

காலங்காலமாக நாம் பரப்பி வந்த பொய்கள், குறிப்பாக 1) முஸ்லிம்கள் இயல்பாகவே வன்முறையை விரும்புபவர்கள். 2) அவர்கள் உலகை தங்கள் கைவசப்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பன மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அவர்கள் முஸ்லிம்கள் இந்த உலகில் வாழ்ந்திட தகுதியற்றவர்கள் என்பதே மக்களின் முடிவு என்றாக்கி விட்டார்கள்.

12ஆம் நூற்றாண்டில் திருக்குர்ஆனை மொழிப் பெயர்த்த கேற்றானின் ராபர்ட் என்பவர் இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை வசைபாடுவதில் புதிரானவராக இருந்தார். அவர் இப்படி தன் வசயைப் பாடினார். "LIKE THE WAR YOU ARE YOU EVERY WHERE CONTRADICT YOURSELF"

ஒரு பொய்யரைப் போன்ற நீர் உமக்கே எல்லா வகையிலும் முரண்பட்டு நிற்கின்றீர்.!

முதல் சிலுவைப் போர் வீரர்கள் அடிக்கடி தங்கள் எதிரிகள் (முஸ்லிம்கள்) அடிக்கடி நம்பிக்கை துரோகத்தைச் செய்தார்கள். எற்றொரு புகாரை அடிக்கடிச் சொல்வார்கள். ஆனால் 14-ஆம் நூற்றாண்டின் ஃபிடன்டியஸ், என்ற ஆட்சியாளன் அடிக்கடி தான் தந்த வாக்குறுதிகளை மாற்றிக் கொண்டும், மீறிக் கொண்டும் இருந்தான். இதை அவன் தன்னடைய புத்திசாலித்தனம் என எடுத்துக்

கொண்டான். அதனால் இவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்ட முஸ்லிம்கள் இவர் ஒப்பந் தத்தை மீறும் போதெல்லாம் அவர்களும் மீறினார். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தங்களுக் குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஃபிடன்டியஸ் என்ற ஆட்சியாளர் தொடர்ந்து துரோகங்களைச் செய்து கொண்டிருந்ததால், முஸ்லிம்கள் பேச்சுவார்த்தைப் பயன்தராது. இனி போர்கள் மட்டுமே ஒரே வழி என்ற முடி வுக்கு வந்தார்கள். (Soure : Christopher Tyerman. "God's War, Page - 638. and John Tolan = Sapacens. Page - 2110)

நம்பிக்கையின்மை என்பது கிருஸ்தவர்கள் மீதும் வீழ்ந்தது. காரணம் அவர்கள் முஸ்லிம் களுடன் இணைந்து வாழ்ந்திட லாயக்கற்ற வர்கள் என்பதுதான். கிருஸ்தவர்களும், முஸ்லிம் களும் இணைந்து வாழ்ந்திட முடியாத நிலைக் குப் போனதற்கு காரணம் முஸ்லிம்களா? கிருஸ்த வர்களா? எனக் கேட்டால் கிருஸ்தவர்கள் இதற்குக் காரணம். இதுவே உண்மை.!

எடுத்துக்காட்டாக போப் கிரிகோரி IX என்பவர் 13-ஆம் நூற்றாண்டின் கிருஸ்தவ மன்னன் பிடரிக் என்பவரைக் கிறிஸ்துவுக்கு எதிரானவர் Antichrist என்றழைத்தார். காரணம் அவர் முஸ்லிம்களோடு நல்லுறவை வைத்துக் கொள்ள முயற்சி செய்தார்.

துரோகம் என்பது சிலுவைப்போர் வீரர்களின் அசைக்க முடியாத குணாதிசயங்களுள் ஒன்றாக இருந்தது.

இதற்கும் ஓர் எடுக்காட்டைக் கூறிட இயலும். அது,

ஜெர்மனியில் யூதர்கள் பெரிய அளவில் படுகொலைகளுக்கு - கூட்டுப்படுகொலை களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். மெய்ன்ஸ் - என்ற கிருஸ்தவ தேவாலயத்தின் தலைமை பாதிரி அந்த நகரில் வாழ்ந்த யூதர்கள் அனை வரையும் பாதுகாப்பதாக வாக்களித்தார். ஆனால், யூதர்கள் அதற்காக, சில வெள்ளிகளைத் தந்திட வேண்டும் எனக் கேட்டார். யூதர்கள் தங்களிட மிருந்த வெள்ளிகளையெல்லாம் கொண்டு தலை மைப் பாதிரியிடம் கொடுத்தார்கள். யூதர்களைப் பாதுகாத்திட வேண்டிய தருணம் வந்தபோது அந்த பாதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். இதனால் பாதிரியின் மாளிகையில் தங்கியிருந்த யூதர்கள் கூடக் கொலை செய்யப்பட்டார்கள். (ஆதாரம் : Christopher Tyreman : Gods War : 102)

அதேபோல் 1099 இல், முஸ்லிம்களின் ஆட்சி யின் கீழிருந்த, ஜெருசலம் துவம்சம் செய்யப் பட்டது. அப்போது சிலுவைப் போர் வீரர்களின் ஒரு தளபதி 'TANCRED' டான்கிரட், ஆல் அக்ஸா பள்ளிவாசலில் வந்து தஞ்சம் புகும் முஸ்லிம் களைப் பாதுகாப்பேன். ஆனால் அவர்கள் தங்களி டமிருக்கும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட வேண்டும் என்றார். முஸ்லிம்கள் தங்களிட மிருந்த ஆயுதங்களைக் கீழே போட்டார்கள். அல்அக்ஸா மஸ்ஜித்-இல் தஞ்சம் புகுந்தார்கள். சிலுவைப் போர் வீரர்கள் தங்கள் துரோகத்தைத் தாராளமாகக் காட்டினார்கள்.

அல்அக்ஸாவில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள் அத்தனை பேரையும் வெட்டி சாய்த்தார்கள். (Source : Karan Armstrong, Holy War - 178)

கிருஸ்தவர்களின் துரோகம் இத்தோடு நின்று விட வில்லை. அவர்களின் மிகப்பெரிய துரோகம், ஒன்றை தேவனின் சாம்ராஜ்யம். "Kingdom of Heaven"-ல் என்ற 2005 ஆம் ஆண்டில் வந்த, திரைப்படத்தில் கோட்டிக் காட்டினார். அது சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களிடம் (கிறிஸ்தவர்கள்) சிலுவைப் போர் வீரர்கள் செய்து கொண்ட ஒப்பந்தமும், அதனை அவர்கள் மீறியதும், சுல்தான் சலாஹுத்தின் அய்யூபி அவர்களிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் எக்காரணத்தைக் கொண்டும் ஹஜ்ஜுக்குச் செல்லும் புனிதப் பயணிகளைத் தாக்கிட மாட்டோம் என உறுதி கொடுத்தார்கள்.

ஆனால், அவர்கள் ஹஜ்ஜுக்கு செல்லும் புனித பயணிகளை ஒருமுறை அல்ல பலமுறை தாக்கினார்கள். இவற்றையெல்லாம் ஓரளவுக்கு ரிட்லி ஸ்காட் என்பவர் எடுத்த "Kingdom of Heaven" என்பதில் பெருமளவுக்குக்காட்டினார். இப்படியெல்லாம் நடந்துகெண்ட சிலுவைப் போர் வீரர்களிடமும், கிறிஸ்தவர்களிடமும் பின்னர் சிலுவைப் போரில் வெற்றிகளை ஈட்டிய முஸ்லிம்கள் எப்படி நடந்திட வேண்டும்? - இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் அதுபற்றி ஜான் பெஃபர் கூறுவதைக் கேட்போம்.

- தமிழில் **MGM**

# பாஜகவின் ஊதுகுழலான முகநூல்

சமீபத்தில் அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீட் ஜர்னல் (Wall Street Journal) என்ற பத்திரிக்கை ஒரு ஆய்வை நடத்தி அதில் இந்தியாவில் முகநூல் பாஜகவின் வளர்ச்சிக்கு திட்டமிட்டு செயல் படுகிறது. பாஜகவினர் வெளியிடும் முஸ்லிம் களுக்கெதிரான வெறுப்பு கருத்துகளை பரவலாக பரப்புவதில் துணை நிற்கிறது என்று ஆதாரப் பூர்வமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இதை தொடர்ந்து முகநூல் (Facebook) முழு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும், பிஜேபி ஆதரவானதாக செயல்பட்டதாக வைக் கப்படும் குற்றச்சாட்டில் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் உலகம் முழுக்க குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

## அமெரிக்க பத்திரிக்கை வெளிப்படுத்திய தகவலின் சுருக்கம்

முகநூல் (Facebook) இந்தியாவில் பாஜகவுக்கு இணங்கி செயல்படுகிறது. முகநூல் நிறுவனத்தின் விதிப்படி வெறுப்பு கருத்துகள் பதிவிட்டால் உடனடி நீக்கப்படும். ஆனால், பாஜகவை சேர்ந்த தலைவர்களின் வெறுப்பு கருத்துகள் நீக்கப்படுவதில்லை. இதற்கு மூன்று பாஜக தலைவர்களின் பதிவுகள் உதாரணமாக இருக்கிறது.

இந்தியாவில் முகநூல் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக இருக்கும் திருமதி, அஃங்கி தாஸ் (Ankhi Das) பாஜகவின் ஆதரவாளராகவே செயல் படுகிறார். மேலும் இந்தியாவில் இருக்கும் முகநூல் பணியாளர்களுக்கு, பாஜக தரப்பினர் செய்யும் விதிமீறல்களுக்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டாம். இது பாஜக வுக்கு மட்டும் அல்ல நமது நிறுவனத்திற்கும் பெரிய லாபத்தை தேடித்தரும் என்று கூறியிருக் கிறார். இது இந்தியாவில் நமது நிறுவனத்தின் லாபத்துக்கு எந்த பாதிப்பையும் தராமல் வைத் திருக்கும் என்று கூறியிருக்கிறார்.

தெலுங்கானாவை சேர்ந்த பாஜகவின் சிங் என்ற சட்டமன்ற உறுப்பினர் ரோஹிங்யா முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட வேண்டும், இந்திய முஸ்லிம்கள் துரோகிகள், மசூதிகளை இடித்து தள்ளுவோம் என்று முகநூலில் வெளிப் படுத்திய கருத்துகள் எவையும் முகநூல் நிர்வாகம் நீக்கவில்லை. இவர் மீது இத்தகைய வெறுப்பு பேச்சுக்கு பல்வேறு வழக்குகளும் நிலுவையில் இருக்கிறது.

பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த் குமார் ஹெக்டே, இந்தியாவில் கொரோனா வைரஸை முஸ்லிம்கள் திட்டமிட்டு பரப்புகிறார்கள். இதற்கு பின்னால் கொரோனா ஜிகாத் என்ற சதித்திட்டம் இருக்கிறது என்று தன் முகநூலில் பதிவு செய்தார். இந்த கருத் தையும் முகநூல் நிர்வாகம் நீக்கவில்லை.



அதே போல் டெல்லியை சேர்ந்த பாஜக தலைவர் கபில் மிஸ்ரா சிஏஏ சட்டத்திற்கு எதிராக அமைதியாக நடந்து கொண்டிருந்த போராட்டத்தை காவல்துறை அப்புறப்படுத்த வில்லை என்றால் நாங்கள் எங்கள் சக்தி கொண்டு அப்புறப்படுத்துவோம் என்ற வெறுப்பு பேச்சு இறுதியில் 53 உயிர்களை பறித்து முஸ்லிம் களுக்கு எதிரான கலவரமாக மாறியது. ஆனால் இந்த பதிவு முகநூலில் கபில் மிஸ்ரா பதிவிட்ட பிறகும் நீக்கப்படவில்லை.

உதாரணத்திற்கு சில பாஜக தலைவர்களின் பதிவுகளை குறிப்பிட்டு அவர்களுக்கு ஆதரவாக முகநூல் நிர்வாகம் எப்படி சாதகமாக செயல் படுகிறது என்பதனை தெளிவாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. (Times of India 17.08.2020)

## திருமதி, அஃங்கி தாஸ் மீது வழக்கு பதிவு

இந்தியாவின் முகநூல் அதிகாரியாக இருக்கும் அஃங்கி தாஸ் (Ankhi Das) மீது காவல்துறையில் பத்திரிக்கையாளர் ஒருவர் புகார் கொடுத்து அவர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

சத்திஸ்கர் மாநிலத்தின் ராய்பூரை சேர்ந்த அவேஸ் திவாரி (Awesh Tiwari) என்ற பத்திரிக்கை யாளர் முகநூல் நிறுவனம் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுகிறது என்பதனை கண்டித்து தனது முகநூலில் எழுதியிருக்கிறார். அதை தொடர்ந்து அவருக்கு கொலை மிரட்டல் வந்திருக்கிறது.

இதன் காரணமாக இந்தியாவின் முகநூல் இயக்குனராக உள்ள அஃங்கி தாஸ் மீதும் கொலை மிரட்டல் விடுத்த மற்ற இருவர் மீதும் பல்வேறு குற்ற பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருகிறது. (outlook 18.08.2020)

இதைப்போல் பத்திரிக்கையாளர் திவாரி மீது அஃங்கி தாஸ் ஒரு புகார் கொடுத்துள்ளார். அதில், தனக்கு பத்திரிக்கையாளர் திவாரி மிரட்டல் விடுப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், திவாரி கூறும் போது, எனக்கும் அவருக்கு எந்த தொடர்புமே கிடையாது. ஆனாலும் என் மீது புகார் கொடுத்ததற்கான காரணம் தெரியவில்லை. நான் எனது முகநூலில் புல்வாமா தாக்குதல் சமயத்தின் போதும், NRC பிரச்சனையின் போதும் மோடி அரசின் நடவடிக்கைகளை கேள்வி கேட்டு எழுதி யிருந்தேன். அந்த பதிவுகள் முகநூல் நிறுவனத் தால் தடை செய்யப்பட்டன. என்றும் கூறியிருக் கிறார். (The Quint 18.08.2020)

## முகநூலின் யோக்கிதை ஒரு வருடத்திற்கு முன்பே தோலுரிப்பு

முகநூலின் பாஜக சார்பான நடவடிக்கையை பற்றி இந்திய நாடாளுமன்றத்திலேயே விவாதிக் கப்பட்டிருக்கிறது.

ஜூன் 25,2019 அன்று நடந்த நாடாளுமன்ற அவையில் திருணாமுல் காங்கிரஸ் தலைவர் திரு,தெரேக் ஓ பிரேன் (Derek O'Brien) முகநூலுக்கும் பாஜகவும் இருக்கும் தொடர்பை பற்றி குறிப்பிட்டார்.

அந்த உரையில்,

பரன்சாய் குஹா தகூர்தா (Paranjoy Guha Thakurta) என்பவர் எழுதிய "இந்தியாவில் முக நூலில் உண்மையான முகம்" என்ற புத்தகத்தை எடுத்து காட்டி இந்த புத்தகம் பாஜகவுக்கும் முகநூலுக்கும் இருக்கும் மறைக்கப்பட்ட கூட் டணி பற்றி பேசுகிறது. முகநூல் பாஜகவின் தேர்தல் பிரச்சார சக்தியாக செயல்பட்டிருக் கிறார்கள். பாஜகவுக்கு எதிராக வரும் பல செய்திகளை திட்டமிட்டு மறைத்து மற்ற கட்சி களுக்கு எதிராகவும் பாஜகவுக்கு ஆதரவாகவும் செயல்படுகிறது என்றார்.

அதுபோலவே, முகநூல் மட்டுமல்ல வாட்சாப் பற்றியும் சொல்லியாக வேண்டும். தற்போது வாட்சாப் நிறுவனமும் முகநூலின் கைகளுக்குள் சென்று விட்டது. இந்த நிலையில் தான் நமது உள்துறை அமைச்சர் " ஒரு செய்தி சரியோ தவறோ, உண்மையோ பொய்யோ அதெல்லாம் கவலை இல்லை. ஆனால் அதை நாம் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க நினைத்தால் அதை நம்மால் செய்ய முடியும். நமது கட்சியின் வாட்சாப் குழுக்களில் மொத்தம் 32 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அதனால் எதையும் வேகமாக மக்களிடம் கொண்டு போய் சேர்க்க முடியும்" என்று பேசினார்

பாஜகவுக்கு இத்தனை உதவிகள் செய்ததன் பலனாக முகநூல் நிறுவனமும் பாஜகவிடமிருந்து

நிறைய பலன்களை பெற்றிருக்கிறது என்றார்.

*2019*ல் நாடாளுமன்ற அவையில் இந்த தகவல் வைக்கப்பட்ட போது பெரிய வரவேற்பை பெறவில்லை. தற்போது ஒரு பத்திரிக்கை ஆதாரப்பூர்வமாக வெளிப்படுத்தி இருப்பதால் இன்று பேசுபொருளாக்கப்பட்டிருக்கிறது. (Telegraph 18.08.2020)

## பாஜகவை தோலுரித்த கேரவன் பத்திரிக்கையின் அறிக்கையை நீக்கிய முகநூல் நிர்வாகம்

சர்வதேச பத்திரிக்கையாக அறியப்படும் தி கேரவன்(The caravan) பத்திரிக்கை அமித் ஷாவும் அவரது மகன் ஜெய் ஷாவும் அரங்கேற்றிய ஊழல் பற்றி ஒரு விரிவான கட்டுரை எழுதியிருந்தார்கள். அதில், அமித் ஷாவின் மகன் ஜெய் ஷாவுடைய நிறுவனத்தின் வருமானம் கற்பனைக்கு எட்டாத வளர்ச்சியை அடைந்திருந்ததை சுட்டிக் காட்டியிருப்பார்கள்.

இந்த கட்டுரையை தனது அதிகார முகநூல் பக்கத்தில் பதிவிட்ட போது முகநூல் நிர்வாகம் இதனை நீக்கியிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக கட்டுரையை நீக்கியதற்கான காரணத்தையும் அதனை மீண்டும் பதிவிடக் கோரியும் முகநூல் தளத்தின் உயர் அதிகாரிகள் வரை சென்றும் கூட கட்டுரையை முகநூலில் பதிவு செய்யவில்லை.

இது ஆகஸ்ட் மாதம் *2018*ல் நடந்த நிகழ்வு. கிட்டத்தட்ட *2014*ல் தொடங்கி முகநூல் பாஜகவிற்கு வெளிப்படையாக ஆதரவு கொடுத்தே வந்திருக்கிறது.

அஃங்கி தாஸ் (Ankhi Das) யார்?.. பிஜேபிக்கு ஏன் ஆதரவு தருகிறார். தற்போது இந்தியாவின் முகநூல் இயக்குனராக இருக்கும் திருமதி. அஃங்கி தாஸ் பாஜகவுக்கு மிக நெருக்கமானவராக அறியப்படுகிறார். அதிலும் தற்போது முகநூல் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டிற்கு பிறகு அதிகம் பேசப்படும் நபராகவும் மாறியிருக்கிறார்.

JNU வில் பட்டம் முடித்த தாஸ் *2011*ல் முகநூலில் பணியமர்த்தப்படுகிறார். பிறகு *2014*ம் ஆண்டு மோடி தனது தேர்தலுக்கு வெற்றிகரமாக முகநூலை பயன்படுத்தியதை பாராட்டி ஒரு கட்டுரை எழுதினார். அது தற்போதும் பிரதமர் மோடியின் தனிப்பட்ட வலைத் தளத்தில் இருக்கிறது.

*2014*ல் பாஜகவின் தேர்தல் பரப்புரைக்கு தேவையான உதவியை செய்வதற்கு அஃங்கி தாஸ் மறுத்ததே இல்லையென்று மோடியின் சமூக வலைத்தளத்தை கையாண்ட நபர் தெரிவித்திருக்கிறார். மேலும் அவர்கள் செல்லமாக அஃங்கி தாஸை, இவர் என்ன நரேந்திர மோடியின் பேத்தியா? என பாஜகவுக்கு ஆதரவு கொடுப்பதை பற்றி பேசுவார்களாம்!..

இத்துடன் மட்டும் தாஸ் அவர்களது தொடர்பு விடுபடவில்லை. திருமதி தாஸின் தங்கை ரேஷ்மி தாஸ் பாஜகவின் மாணவர் பிரிவான ஏபிவிபி'யின் தலைவராகவும் இருந்தவர். தற்போது எழுத்தாளராக பாஜகவுக்கு ஆதரவாக எழுதி வருகிறார்.

இப்படி பாஜக தன் அபிமானிகள் அனைவரையும் ஒவ்வொரு துறையிலும், நிறுவனத்திலும் பணியமர்த்தி தனது காரியங்களை தனது வெற்றியை தக்க வைக்கிறது. ( International Buisness Times 17.08.2017, Caravan 12.05.2016)

முகநூலை பாஜகவினர் எப்படி பயன்படுத்துகிறார்கள் முகநூலை பயன்படுத்தி தேர்தல் வெற்றி பெறுவதில் ஏதும் பெரிய தவறில்லை. ஆனால், உலகம் முழுக்க அறியப்பட்ட தனிப்பட்ட பொது நிறுவனம் அதற்காக உழைத்திருக்கிறது என்பது தான் ஆபத்தானது. அதனுடன் பாஜக தனது சமூக வலைத்தலங்களை வெறும் தங்கள் கட்சி பிரச்சாரமாக கட்டமைப்பதில்லை. அதற்கு மாறாக முஸ்லிம் வெறுப்பு அரசியலை மட்டுமே மையப்படுத்தியும் பொய்ச்செய்திகளை பரவலாக தங்களது சமூக வலைத்தளங்கள் வாயிலாக எடுத்து செல்கிறது. இது தான் மிகவும் ஆபத்தானதாக கருதப்படுகிறது.

பாஜகவின் சமூக வலைத்தல பக்கங்களை பற்றி ஆய்வு நடத்திய Alt news என்ற செய்தி நிறுவனம் ஒரு தனிப்பட்ட பக்கத்தை மட்டும் ஆய்வு செய்து பாஜகவின் முகத்திரையை அம்பலப்படுத்தினார்கள்.

“Sharing is Caring “ என்ற தனி முகநூல் தளம் விளம்பரங்களுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. எதை விளம்பரப்படுத்துகிறது என்றால்,

ஆயிரங்களில், லட்சங்களில் பின்பற்றப்படும் சமூக வலைத்தளங்கள் விற்பனைக்கு என விளம் பரம் செய்யப்படுகிறது. இந்த ஒரு பக்கத்தின் வாயிலாக Alt news சேகரித்த தகவல் தான் நம்மை ஆச்சர்யத்துக்கு உள்ளாக்குகின்றன. தனிப் பட்ட தலைப்புகளின் கீழ் இதில் விற்பனை செய்யப்படுகிறது.

மோடி மற்றும் பிஜேபி பெயரில் லட்சக் கணக்காணோர் பின்பற்றப்படும் முகநூல் தளங் களை உருவாக்கி அதில் மோடி மற்றும் பாஜக தொடர்பான ஆதரவு செய்திகளை போட்டால் பதிவுக்கு ஏற்ப பணம் வழங்கப்படுகிறது.

பிரவின் சிங் என்ற நபர் தன் முகநூல் கணக்கில் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமான நபர்கள் கொண்ட மோடி முகநூல் குழு ஒன்று விலைக்கு இருக்கிறது வேண்டுபவர்கள் சொல் லவும் என்று பதிவு செய்கிறார். அத்துடன் இந்த குழுவில் நீங்கள் போடும் போஸ்டிற்கு வரும் லைக்கிற்சகு 0.12பைசா பணம் வழங்கப்படும். இதன் மூலம் மட்டுமே 46,320 ரூபாய் தான் சம்பாரித்திருப்பதாக கூறுகிறார்.

இதை போலவே கௌரவ் மேதா என்ற நபர் 9 லட்சத்திற்கும் அதிகமான நபர்கள் கொண்ட மோடி முகநூல் குழு விலைக்கு இருக்கிறது. இதில் ஒரு பதிவுக்கு வரும் லைக்கிற்கு 0.9 பைசா வழங்கப்படுகிறது. தற்போது இந்த பக்கத்தின் விலை 81,000 ரூபாய் என்று பதிவு போட்டிருக் கிறார்.

இந்த Sharing is caring என்ற குழுவில் இருக்கும் அங்கித் பாண்டே மற்றும் ராஜேஷ் சின்ஹால் இரு வரும் பிஜேபிக்கு நெருக்கமான வர்கள். இவர்கள் இதுபோல விலைக்கு வரும் முகநூல் குழுக் களை விலைக்கு வாங்குகிறார்கள்.

## இந்திய ராணுவத்தின் பெயரில்


இந்திய ராணுவம் என்ற பெயரில் பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் நிறைய நபர்களை பின்பற்ற வைத்து அதற்கு பிறகு அந்த குழுக்களை விற்பனை செய்கிறார்கள். அந்த குழுக்கள் மூலமாக இந்துத்துவ சித்தாந்தங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கிறார்கள். இதற்கும் அவர்களுக்கு பணம் தரப்படுகிறது.

## பெண்களின் புகைப்படங்கள் பெயரில்

ஆபாசமான பெண்களின் புகைப்படங்களை உபயோகித்தும், அடையாளம் அற்ற பெண்களின் பெயரில் முகநூல் குழுக்களை உருவாக்கி அதன் மூலம் லட்சக்கணக்கில் பின்பற்றுவரின் எண்ணிக்கையை உயர்த்தி விட்டு அதனை " "மோடி 2019" என்று மாற்றப்படுகிறது. இதன் மூலமும் மோடிக்கு ஆதரவான கருத்துகள் பரவலாக வைக்கப்படுகிறது.

இதைப்போலவே கிரிக்கெட் பெயரில், நகைச்சுவையின் பெயரில், பாலிவுட் நடிகர்கள் பெயரில் குழுக்களை தொடங்கி லட்சக்கணக் கான பின்பற்றாளர்களை கொண்ட பின் மோடி யின் பிரச்சார குழுக்களாக இத்தகைய குழுக்கள் செயல்படுகின்றன. (Alt news 06.08.2018)

-அபூ சித்திக்.

# அஷ் ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்களின் வாழ் நாள் ஆசை



அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நகரமான மதீனா முனவ்வராவில் மரணிக்க வேண்டும் என்பதே அஷ் ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்களின் வாழ் நாள் ஆசையாக இருந்தது.

தனது ஆசையை நிறைவேற்றித் தருமாறு அல்லாஹ்விடம் தொடர்ந்தும் பிரார்த்திப்பவராகவும் இருந்தார். அவர் இவ்வாறு பிரார்த்திப்பதை ஷெய்கின் குடும்பத்தினரும் மாணவர்களும் செவிமடுக்கும் போதெல்லாம், ஆச்சரியப்பட்டனர் மட்டுமல்லாது, " உங்களது ஆசையை அடைந்து கொள்வது கஷ்டமான காரியம், ஒருவர் எந்த இடத்தில் மரணிப்பார்? என்பதை எந்தவொரு ஆத்மாவும் அறியமாட்டாது" என்றும் கூறுவார்கள்.

எனினும், ஷெய்கினுடைய பிரார்த்தனையை நிறைவேற்ற அல்லாஹ் நாடிவிட்டான்.

1996ம் ஆண்டு "இஸ்லாமும் நவீன கால சவால்களும்" எனும் கருப்பொருளில் ரியாதில் நடைபெற்ற கலாச்சாரத்துக்கும் நாகரீத்துக்குமானதேசிய மாநாட்டில் கலந்துகொள்ள ஷெய்க் அல்கஸ்ஸாலி அவர்கள் விரும்பினார்கள்.

ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலியுடன் முரண்படுகின்ற எவரும் ஷெய்க் விடயத்தில் அத்துமீறி செயற்பட வாய்ப்புகள் அதிகம் என்பதனால், மாநாட்டுக்குச் செல்ல வேண்டாம் என அவரது மாணவர்கள் தொடர்ந்தும் வேண்டிக் கொண்டனர்.

அதிகம் உணர்ச்சிவசப்படாமல் இருக்குமாறு ஷெய்க் கஸ்ஸாலி அவர்களுக்கு வைத்திய ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையே அதற்கான பிரதான காரணமாகும்.

அனைவரது வேண்டுகோல்களையும் புறக்கணித்து விட்டு ஷெய்க் அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரியாதை நோக்கிப் புறப்பட்டார்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் ஷெய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்கள் மீது 'ஸுன்னாவின் எதிரி' என குற்றம் சுமத்தப்பட்டவுடனே, உணர்வுகள் பொங்க, ஸுன்னா (ஹதீஸ்கள்) பற்றிய தனது நிலைப்பாட்டையும் ஸுன்னா மீதான தனது நேசத்தையும், ஈடுபாட்டையும் உரத்த குரலில் பேச ஆரம்பித்தார்.

உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலிக்கு மாரடைப்பும் ஏற்பட்டுவிட்டது. " லா இலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ்வைத் தவிர வணங்கி வழிபடத் தகுதியானவர் வேரு எவருமில்லை) எனும் ஒரிறைக் கொள்கையை மேலோங்கச் செய்வதற்கே நாங்கள் விரும்புகின்றோம்" என்ற இறுதி வார்த்தைகளை மொழிந்த நிலையிலே ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்கள் மைய்யித்தாகக் கீழே விழுந்தார்.

அப்போதைய சவுதி மன்னராக இருந்த அப்துல்லாஹ்வின் கட்டளைக்கும், ஷெய்க் பின் பாஸ் அவர்களின் பத்வாவுக்கும் அமைய அவரது உடல் மதீனாவுக்கு இடம் பெயர்க்கப் பட்டது.

கலாநிதி ஸஃலூல் அந்நஜ்ஜார் அவர்கள் கூறுகின்றார்:

"ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்கள் வபாத்தான போது, உலகின் அனைத்துப் பாகங் களிலிருந்தும் விஷேட விமானங்கள் ஜனாஸாத் தொழுகையில் கலந்துகொள்வதற்காக மக்களை ஏற்றிக் கொண்டு வந்தன. ஜனாஸாத் தொழுகை யின் போது, மஸ்ஜிதுந் நபவி நிரம்பி வழிந்தது. பின்னர் நாம் அவரை அடக்கம் செய்வதற்காக ஜன்னதுல் பகீஃ ஐ வந்தடைந்தோம். பகீஃ வரைக்கும் மக்கள் நிரம்பியிருந்தனர்".

தொடர்ந்தும் ஸஃலூல் அந்நஜ்ஜார் கூறுகையில் ....

பகீஃ அடக்கஸ்தலத்தின் பொறுப்பாளர் எம்மிடம் பின்வருமாறு கூறினார் ,

"நிச்சயமாக இம்மனிதனின் விடயம் வியப் பூட்டக் கூடியதாக இருந்தது. இவரை அடக்கு வதற்காக இம்மண்ணிலே பல இடங்களைத் தோண்ட முயற்சி செய்தேன். அவ்விடங்கள் அனைத்தும் மிகவும் கடினமாக இருந்தது. இறுதி யாக, அப்துல்லாஹ் பின் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் அடிமையான 'நாபிஃ' மற்றும் இமாம் மாலிக் பின் அனஸ் போன்றோரின் கப்ருக்கு இடைப்பட்ட பூமிப் பகுதியை தோண்ட முனைந்த போது மாத்திரம் அவ்விடம் மென்மையாக, தோண்டுவதற்கு இலகுவாக இருந்தது. எனவே, இவ்விடத்திலே அவருக்கான கப்ரைத் தோண்டினேன்"

மாபெரும் இஸ்லாமிய அறிஞர் ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலிக்கு அல்லாஹ் அருள் புரிவானாக...

இந்த உலகில் எவ்வளவு காலம் வாழ்வது என்பது முக்கியமல்ல வாழ்க்கையில் எதனைச் சாதித்தோம் என்பதும் எப்படிப் பட்ட நிலையில் மரணித்தோம் என்பஎன்பதும்தான் முக்கியம்.

இறைவா! எமது இறுதி முடிவுகளையும் சிறப்பானதாக ஆக்கி வைப்பாயாக!

தமிழாக்கம்.
உம்மு உரைபா உமைரா நூருல் ஹம்ஸா
(அஸ்ஹரிய்யா )

# CAA - NRC - NPR ஓர் விழிப்புணர்வு பிரச்சாரம்

மதுரையில் கடந்த ஜூன் 22 மற்றும் 23-ல் பெண்களுக்கு இரண்டும், ஆண்களுக்கு ஒன்று என 3 சிறு விழிப்புணர்வு கூட்டங்கள் மதுரை வைகறை வாசகர் வட்டம் சார்பாக நடத்தப்பட்டன.கொரானா தொற்று காலமாக இருந்ததால் சமூக இடைவெளி கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது. சானிடைசர் மற்றும் முக கவசம் பயன்படுத்தப்பட்டது.

இதில் ஆண்கள் 10 பேரும் பெண்களில் சுமார் 44 பேரும் கலந்து கொண்டு பயனடைந்தனர். நாம் அறியாமலேயே கடந்த காலத்தில் என்.பி.ஆர்-கான தகவல்களை நாமே கொடுத்துள்ளதை எடுத்துரைத்து புரிய வைக்கப்பட்டது. அதிர்ச்சி அடைந்த கூட்டத்தினருக்கு என். ஆர்.சி ,சி.ஏ.ஏ பிரச்சனை புரிய வைக்கப்பட்டது .

இதை எதிர்கொள்வதில் நாம் முனைப்பும் ,ஒற்றுமையும் காட்டிட வேண்டும் என்பதை விவரமாக எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்தில் பல்வேறு அடையாள அட்டைகளில் உள்ள முரண்பாடுகளை சரி செய்ய வேண்டியது பற்றி கேள்வி எழுப்பியவர்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது .

இத்துடன் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு முடித்தவர்களுக்கான காலத்திற்கேற்ற மேற்படிப்பு என்ன படிக்கலாம் ? என்பதை விளக்கி கூறப்பட்டது .குறிப்பாக மருத்துவம் சார்ந்த துணை படிப்புகளின் அவசியம் புரிய வைக்கப்பட்டது. மேலும் எதிர்கால வாய்ப்புகள் விளக்கப்பட்டது.

மொத்தத்தில் மிக்க பயனுள்ள சந்திப்பாக அமைந்ததால் கலந்து கொண்டவர்கள் திருப்தி யுடன் சென்றனர் .

கொரானா தொற்றுநோயின் வீரியத்தால் தமிழக அரசு அறிவித்த ஜூன் 24 முதலான ஊரடங்கு உத்தரவை புரிந்து தற்காலிகமாக விழிப்புணர்வு பிரச்சாரம் ஒத்திவைக்கப்பட்டது.

ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஐந்து முறை zoom meeting மூலம் பிரச்சாரம் செய்யப் பட்டதில் அநேகர் பயனடைந்தனர்.



# லவ் ஜிஹாத் பெயரில்

## முஸ்லிம்களை பழி வாங்கும் - NIA வின் அடுத்த நாடகம்

சமீபத்தில் சென்னையை சேர்ந்த பெண் லண்டணில் இஸ்லாமிய மதத்திற்கு கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு கடத்தப் பட்டதாகவும் அந்த வழக்கு NIAவுக்கு மாற்றப் பட்டிருக்கிறது என்ற செய்தியும் பரபரப்பாக பேசப்பட்டது. அந்த வழக்கில் தீவிரவாதத்திற்கு தொடர்பு, லவ் ஜிஹாத் மற்றும் இஸ்லாமிய பிரச்சாகர் ஜாகிர் நாயக்கிற்கு தொடர்பு இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தது.

இப்படி பின்னப்படும் வழக்குகளின் உண்மைத்தன்மை பற்றியும், NIA என்ற அமைப்பு முஸ்லிம்களுக்கெதிராக ஏன் தொடர்ச்சியாக செயல்படுகிறது என்பதனையும் ஆதாரங்களு டன் விளக்குவதற்காகவும் தான் இப்பதிவு,

கடத்தப்பட்டதாக சொல்லப்படுகிற பெண் ணின்தந்தை கொடுத்த பெயரின் அடிப்படையில் தான் இந்த புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலும்NIA தகவல்கள் கொண்டும் சில செய்திகளை ஆராய்ந்தோம்.

முதலில், அந்த பெண் சென்னையில் இருந்து லண்டனுக்கு சென்ற போது கடத்தப் பட்டிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், லண்டனில் வரும் செய்தி தளங்களில் இது தொடர்பாக எந்தவொரு தகவலும் இல்லை. இந்தியாவில் இருந்து வந்த பெண் லண்டனில் கடத்தப்பட்டார் என்றால் அந்த செய்தி சர்வதேச கவனம் மிக்கது. ஆனால், அது செய்தியாக இடம்பெறவே இல்லை.

அடுத்ததாக தனது பெண் பங்களாதேசில் இருக்கும் ஒரு அரசியல்வாதியின் மகனால் கடத்தப்பட்டிருக்கிலாம் என்றும் கூறப்பட்டிருக் கிறது. பங்களாதேசில் இருக்கும் ஒரு பிரபல மான அரசியல்வாதியின் மகன் ஒரு கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தால் கூட அந்த நாட்டு பத்திரிக்கையில் அது தொடர்பாக ஏதாவது செய்திகள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நாட்டு முக்கிய பத்திரிக்கைகளிலேயே இப்படி ஒரு செய்தி வெளிவரவே இல்லை.

ஒரு தந்தை தன் மகள் கட்டாய மதமாற்றத்திற்கு உட்பட்டு கடத்தப்பட்டதாக புகார் கொடுத்தது இது முதல் முறை கிடையாது.

இஸ்லாத்தை தன் வாழ்வு நெறியாக ஏற்றுக்கொண்ட காரணத்தினாலேயே இப்படி பொய் தகவல்களை கொடுத்தே வழக்கு பதிவு செய்வார்கள். அதற்கு நிறைய வழக்குகள் உதாரணங்கள் இருக்கிறது. அதனை நம் 'வைகறை வெளிச்சத்தில்' பல நேரங்களில் எழுதியிருக்கிறோம். அவற்றில் பிரபலமான வழக்கு கேரளாவின் ஹாதியா வழக்கு.

ஹாதியாவின் தந்தை, தன் பெண் கட்டாயப்படுத்தி லவ் ஜிஹாத் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டதாகவும். தனது பெண்ணை கடத்தி ISIS தீவிரவாதியாக மாற்ற முயல்கிறார்கள் என்றும் புகார் கொடுத்தார். அதனையும் இதை போலவே ஊடகங்கள் "லவ் ஜிஹாத்" என பெரிதுபடுத்தி எழுதின. இஸ்லாமியர்களுக்கு எதிராக தங்கள் காழ்ப்புணர்வை பக்கம் பக்கமாக வெளிப்படுத்தினார்கள்.

ஆனால், ஹாதியா உச்சநீதிமன்றம் வரை சென்று தான் விருப்பப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். விருப்பப்பட்டு என் கணவரை திருமணம் செய்து கொண்டேன் இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என போராடி தீர்ப்பு பெற்றார். இதற்கு மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடுமையாக உழைத்தார் ஹாதியா.

## ஹாதியா வழக்கில் NIA

ஒரு தந்தை, தன் மகள் வேறொரு மதத்தை தழுவியதற்கு எதிராக நிற்க வேண்டும் என்பதற்காக பல்வேறு பொய்களை கூறி புகார் கொடுக்கிறார். ஆனால் அதனை விசாரித்த புலனாய்வு அமைப்பு எதற்கு பொய் குற்றச்சாட்டுகளை அள்ளி வீச வேண்டும்?..

இன்று ஒரு பெண் லவ்ஜிஹாத் மூலம் கடத்தப்பட்டதாக வழக்கு பதிவு செய்து விசாரிக்கும் NIA ஹாதியா வழக்கையும் விசாரித்தது.

ஹாதியா வழக்கில் இஸ்லாமியர்களுக்கு எதிராக NIA கொடுக்கும் செய்திகளை கொண்டு இந்தியாவில் இஸ்லாமியர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும் செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டன.

"physcologically kdnapped" என்று ஒரு புதிய பெயரையும் NIA அறிமுகம் செய்தது. அதாவது ஹாதியா உளவியல் ரீதியாக கடத்தப்பட்டார் என்று உச்சநீதிமன்றத்தில் NIA கூறியது.

இதையெல்லாம் உடைத்து தான் ஹாதியா வெளியே வந்தார். ஆனால் அதுவரை முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பு செய்திகள் ஊடகங்கள் வழியாக வந்து கொண்டே தான் இருந்தன.

## தமிழகத்தை குறிவைக்கிறது NIA

NIA தமிழகத்தில் தொடர்ச்சியாக அதிகமான கைது நடவடிக்கைகளை கையாண்டிருக்கிறது. அப்படி தமிழகத்தில் NIA நடத்திய முக்கிய கைது நடவடிக்கைகளை நாம் நமது வைகறை வெளிச்சத்தின் சார்பாக நேரடியாக கள ஆய்வு செய்து வெளியிட்டிருந்தோம்.

டிசம்பர் 2016ல் சில இளைஞர்கள் மதுரையில் கைது செய்யப்பட்டனர். அது தான் தமிழகத்தில் நிகழ்த்தப்பட்ட NIAவின் முதல் கைது. இந்த கைது நடவடிக்கையிலும் சோதனையிலும் பல்வேறு முரண்பாடுகள் இருந்தது.

கைது செய்யப்பட்ட ஒருவரின் வீட்டில் சோதனை செய்யும் போது அதிகாரிகளே கொண்டு வந்த போனை வீட்டில் வைத்து எடுத்தது கண்டுபிடிக்கப்பட்டு இந்த பொருள் எங்கள் வீட்டிலிருந்து எடுக்கவில்லையென்றும் குடும்பத்தார்கள் எழுதி கொடுத்தனர். இப்படியான பொய்யான சாட்சியங்களை உருவாக்க முனைந்தனர்.

அதுபோலவே அர்ஜுன் சம்பத் வழக்கில் கைதானவர்களில் ஒருவரிடம் பேசிய போது அவர் தற்போது ஜாமீனில் இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டதாக கூறி கையெழுத்திட்டிருப்பதாக NIA அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் அவர் வெளிப்படையாக ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்து அத்தனையும் NIAவின் நாடகம் என அம்பலப்படுத்தினார்.

ISISக்கு எதிராக கூட்டங்கள் நடத்தியவர்களை ISIS என கைது செய்வது, குற்றத்தை ஒப்புக் கொண்டால்தண்டனைக்குறைப்பும், வேலையும் வாங்கி தருவதாக மிரட்டுவது, போலியான சாட்சியங்களை உருவாக்குதல் என பல்வேறு முயற்சிகளை NIA எடுத்தது தெரிய வந்தது.

இதேபோல்நாகப்பட்டினத்திலும், சென்னையிலும் கைது நடவடிக்கை நடந்தது. அவற்றில் கைதானவர்களும் தற்போது ஜாமீனில் வெளியேதான் இருக்கிறார்கள்.

இப்படி நாம் கள ஆய்வு செய்த தகவல்கள் வைகறை வெளிச்சத்தில் வெளிவந்திருக்கிறது. தவறாமல் படிக்கவும்.

## அப்பவிகள் கைது

ஆந்திர பிரதேஷத்தில் வழக்குரைஞர், ரவிச்சந்திரன் தனி நபராக உண்மை கண்டறியும் விசாரணையை மேற்கொண்டார் அதில் NIA அதிகாரிகளால்கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் 22 பேரின் வழக்குகளையும் ஆராய்ந்து இப்படி கூறுகிறார்,

எல்லோரும் நள்ளிரவு அல்லது முற்பகல் நேரத்தில் தான் கைது செய்யப்படுகிறார்கள். உடனே அவர்களை கண்களை கட்டி தனியார் விடுதிகளில் கொண்டு சென்று அடைத்து விடுகிறார்கள். பின்னர் 10 நாட்களுக்கு பிறகு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பல வருட சிறை தண்டனைகளுக்கு பிறகு அப்பாவிகள் என்றுவிடுதலைசெய்யப்படுகிறார்கள்என்கிறார். (scroll 01/07/2016)

முஸ்லிம்கள் இங்கே குற்றவாளிகளாக சித்தரிக்கப்பட்டு தீவிரவாத முத்திரையுடன் கைது செய்யப்படுவதும், இறுதியில் அவர்கள் பல ஆண்டுகளுக்கு பிறகு நிரபராதிகள் என நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படும் நிகழ்வுகள் இந்தியாவில் ஏராளம்.

இதுவரை இந்தியாவில் தீவிரவாத முத்திரையில் கைது செய்யப்பட்டு பல ஆண்டு சிறைக்கு பின் விடுதலை செய்யப்பட்ட அப்பாவிகளின் வழக்குகளில் சில,

**நஸ்ருதின் அஹ்மத் - 23 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 1994.*
*விடுதலை செய்யப்பட்டது - 2015*
*கைது செய்யப்படும் போது வயது - 19.*

வழக்கு - பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத்தின் போது நடந்த ஐந்து இரயில் குண்டுவெடிப்பு, இரண்டாம் ஆண்டு மருத்துவ படிப்பின் போது குற்றம் இழைக்கப்பட்டதாக கைது செய்யப்படார்.

**குல்சார் அஹ்மத் பானி , 16 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 2001*
*விடுதலை செய்யப்பட்டது - 2017*
*கைது செய்யப்படும் போது வயது- 28.*

வழக்கு - சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பு வழக்கு.

**ஜாஹீருதீன் அஹ்மத் , 23 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 1994*
*விடுதலை செய்யப்பட்டது - 2016*

வழக்கு - மும்பையில் சிவில் பொறியாளராக இருக்கும் போது தீவிரவாத செயலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டார்.

**Md.ஆமிர் கான், 14 வருட சிறை**

*கைது செய்யப்பட்டது - 1998*
*விடுதலை செய்யப்பட்டது - 2012*
*கைது செய்யப்படும் போது வயது- 20.*

வழக்கு - டெல்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்.

**ஹபீப் பாவா மற்றும் ஹனிப் பாகிட்வாலா, 14 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 2003*
*விடுதலை செய்யப்பட்டது - 2017*

வழக்கு - 2002 ல் டிபன் பாக்ஸ் குண்டு பேருந்தில் வெடித்த வழக்கு.

**ஹுசைன் பாசிலி மற்றும் ராபிக் ஷாஹ் , 12 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 2005*
*விடுதலை செய்யப்பட்டது - 2017*

வழக்கு - ஷாஹ் இஸ்லாமிய மாணவராக இருக்கும்போதுகைது செய்யப்பட்டார், டெல்லி தொடர் குண்டுவெடிப்பின் குற்றவாளிகள் என கைது செய்யப்பட்டார்.

**ஆறு பேர், 11 வருட சிறை.**

*கைது செய்யப்பட்டது - 2003*
*விடுதலை - 2014*

வழக்கு - 2002 அக்ஸர்தம் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள்.

**இர்ஷத் அலி மற்றும் மௌரிப் கமர், 11 வருட சிறை.**

*கைது - 2005, விடுதலை - 2017*

வழக்கு - அல்-பத்ர் எனும் குழுவில் உறுப்பினர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள்.

**ஒன்பது பேர் , 10 வருட சிறை.**

*கைது - 2006, விடுதலை - 2016*

வழக்கு - மாலேகான் குண்டுவெடிப்பு.

**அப்துல் வாகித் செய்க் , 9 வருட சிறை**

*கைது - 2006, விடுதலை- 2015*

வழக்கு - 11/07 மும்பை ரயில் குண்டுவெடிப்பு,

**ஐந்து பேர், 9 வருட சிறை.**

*கைது - 2007, விடுதலை - 2016.*

வழக்கு - தடைப்பட்ட ஹுஜி குழுவை சார்ந்தவர்கள் மீமீமீஎன்றும், பாகிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள்.

**சொஹெப் ஜாஹிர்தார், அப்துல் நய்யிம், md. இம்ரான் கான் மற்றும் சையத் கான். 7 வருட சிறை.**

*கைது - 2007, விடுதலை- 2014*

வழக்கு - மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு.

**ரியாஸ் கான் மற்றும் அப்துல் சையத், 7 வருட சிறை.**

*கைது - 2010, விடுதலை - 2017*

வழக்கு - மக்கா குண்டுவெடிப்பு வழக்குக்கு பழிவாங்க காவலதிகாரியை கொலை செய்ததாக கைது.

**17 பேர், 7 வருட சிறை.**

*கைது - 2008, விடுதலை - 2015*

வழக்கு - சிமி அமைப்பில் இருந்து நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்டவர்கள்.

**ஹாரூன் ரஷீத், விபீ. இஃப்திகார், மசூத் அஹ்மத், திலாவர் கான் , 5 வருட சிறை.**

*கைது - 2005, விடுதலை - 2010*

வழக்கு- டெஹ்ராடூனில் இருக்கும் மிலிட்டரி பள்ளியில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்ட மிட்டனர்.

**மஹ்பூப் இப்ராகிம், சபாப் சோப்தார், 5 வருட சிறை**

*கைது - 2006, விடுதலை- 2011*

வழக்கு - டெல்லியில் உள்ள IIT மீது தீவிர வாத தாக்குதலை நடத்த முயற்சித்தார்கள் என்று கைது.

இப்படி கைது செய்யப்பட்டு அப்பாவி என்று கூறி விடுவிக்கப்பட்ட எவருக்கும் எந்த வித நிவாரணமும் கிடையாது. பொய்யான குற்றச் சாட்டின் பெயரில் 23 வருடங்கள் வரை தங்கள் வாழ்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள்.இந்த நிலையை கொண்டு வந்ததற்கே நமது நீதி மன்றங்கள் குற்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உச்சநீதிமன்றத்தில் அக்ஸர்தம் குண்டுவெடிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேர் நிவாரணம் கேட்டு தொடர்ந்த வழக்கில் இப்படி நிவாரணம் கொடுத்தால் " ஓர் மோசமான முன்மாதிரியாக" மாறி விடும் என சொல்லியது நீதிமன்றம். இந்நாட்டில் நீதி மன்றங்களே பாசிச சிந்தனையில் மூழ்கியிருக்கும் போது இந்தியாவில் இருக்கும் முஸ்லிம்கள் யாரை தான் நம்புவது?. (TOI 11/08/17)

## நாட்டின் நிர்வாக அமைப்பே முஸ்லிம்களுக்கு எதிரானது

முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு அதன் பிறகு போராடி பல ஆண்டுகள் கழித்து நிரபராதி என்று விடுதலை பெற நடத்தப்படும் சட்ட போராட்டம் வரை முஸ்லிம்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த அத்தனை நடைமுறைகளும் காலங் காலமாக பின்பற்றப்படுகிறது. ஜனநாயகம் என்று உபயோகத்தில் நிலவி வரும் நிர்வாகத்தில் தான் இந்த சிக்கல் இருக்கிறது. பின்பற்றப்படவும் படுகிறது.

முஸ்லிம் ஒருவர் தீவிரவாத பட்டத்துடன் கைது செய்யப்படும் போது அவர் ஒட்டுமொத்த நாட்டுக்கும் எதிரானவர் போல் ஊடகங்களால் பூதகாரமாக்கப்பட்டு சித்தரிக்கப்படுகிறார். கைது செய்யப்பட்டவர் தரப்பின் செய்திகளுக்கு எந்த முக்கியத்துவமும் தரப்படுவதில்லை. தீவிர வாத பட்டத்துடன் கைது நடவடிக்கை என்பதால் வழக்கறிஞர்கள் ஆஜராவது வரை இங்கே பெரும் சிக்கல் இருக்கிறது.

கைது செய்யப்பட்டு பல ஆண்டு விசாரணை

முடிவுக்கு பிறகு விடுதலை செய்யப்படுகிறார். இந்த "பல ஆண்டு" என்ற சொல்லுக்கு "23 ஆண்டுகள்" என்றும் அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம்.

இப்படியொரு நிர்வாக அமைப்பு திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. இவற்றை சீர் செய்து ஒரு நீதமான அமைப்பை உருவாக்குவதன் மூலமாகவே அனைத்து மக்களுக்கும் நீதியாக இருந்திட முடியும்.

இஸ்லாமிய சட்டங்கள் இதற்கொரு தீர்வை தருகிறது. ஒரு மனிதன் காரணமின்றி சிறைப்படுத்தப்படுவதை பெரிய அளவில் கண்டிக்கிறது.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அப்போது, கூட்டத்திலிருந்து அமர்ந்த ஒரு நபர் எழுந்து என் அண்டை வீட்டுக்காரரர் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார். ஆனால் அவர் என்ன குற்றம் செய்திருக்கிறார் என்று கேட்கிறார். நபி (ஸல்) பதில் தரவில்லை அமைதியாக நிற்கிறார். இரண்டாவது முறையாக கேட்கிறார். அப்போதும் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகவே நிற்கிறார்கள். மூன்றாவது முறையாக கேட்ட பிறகு அவர் விடுதலை செய்யப்படுவார் என்று நபி (ஸல்) கூறுகிறார்கள்.

உரை முடிந்த பிறகு தோழர்களிடம், அந்த நபரை கைது செய்த அதிகாரி இந்த அவையில் இருந்தார். அவர் கைது செய்ததற்கான காரணங்களை கூறுவதற்காகவே மூன்று முறை வாய்ப்பளித்தேன். ஆனால் அவர் பதில் கூறவில்லை. அதனால் அவரை விடுதலை செய்ய உத்தர விட்டேன் என்று கூறினார்கள்.

இன்று இருப்பது போல் பரந்த நிர்வாக கட்டமைப்பு இல்லாத சூழலில் கூட குற்றமிழைக்கப்படாத நபர் அநியாயமாக சிறைக் கதவுகளுக்கு பின் இருக்கக்கூடாது என்ற சட்டத்தை 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறது.

- அபூ சித்திக்.


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது

ஹிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:

12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு, சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைபேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

*நபி (ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.*

*ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர் களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித் தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம் களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.*

*இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம் களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர்.*

*சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர் களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.*

*அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு*

நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங் கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை.

ஜூலை மாதத்தின் தொடர்ச்சி...

இனி வரலாறு உள்ளே...

## நூருத்தீன் அவர்களின் தந்திரம்

இந்தப் போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் எதிரிகள் மத்தியில் ஒரு செய்தியை தன்னுடைய

உளவுத்துறையினர் மூலம் பரப்பினார். அதா வது ஹரிம் என்ற இடத்தில் ஃபிரான்குகள் நூருத்தீன் அவர்களால் தோற்கடிக்கப்பட்ட தாகவும்

நூருத்தீன் அந்தக் கோட்டையை தன் கைவசம் கொண்டு வந்து விட்டதாகவும், மேலும் அவர் பனியாஸ் என்ற இடத்தை நோக்கி தன்னுடைய

படையை நகர்த்திக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் எதிரிகள் மத்தியில் வந்து சேர்ந்தன. இது அவர்களை பெரும் குழப்பத்தில்

ஆழ்த்தியது. என்ன செய்வது என்றே அவர் களுக்கு தெரியவில்லை. எகிப்தில் சண்டையிடு வதா அல்லது திரும்பச் சென்று தங்களுடைய

நிலங்களை பாதுகாப்பதா பனியாஸ் கோட்டையை நூருத்தீன் கைப்பற்றுவதற்கு முன் தடுப்பதா என்ற பெரிய குழப்பம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டு விட்டது.

எனவே அவர்கள் வேறு ஒரு தந்திரம் செய்வதாக நினைத்துக் கொண்டு அசதுதீன் அவர்

களிடம் ஓர் ஒப்பந்தத்திற்கு முன்வந்தனர்.

அசதுதீன் அவர்களுக்கு நூருத்தீன் அவர்களின் தந்திரங்கள் சென்றடையவில்லை. ஃபிரான்குகள் தங்களுடைய நிலத்திற்கு திரும்பி

விடுவதாகவும் அசதுதீன் அவர்களை பாது காப்பாக விட்டு விடுவதாகவும் அதற்கு பதிலாக எகிப்தியர்களுக்கு எகிப்தியர்களிடமிருந்து

கைப்பற்றிய நிலங்களை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் ஓர் ஒப்பந்தத்தை முன் வைத்தனர். நூருத்தீன் அவர்களின் திட்டங்கள் தெரியாத காரணத்தினால் அசதுதீன் இந்த ஒப் பந்தத்திற்கு வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். காரணம் அவருடைய படைவீரர்கள் பாதுகாக் கப்படவேண்டும். தற்போதுள்ள நிலையில் அவர்களுடைய உயிர்களை பாதுகாப்பதற்கு இதைவிட வேறு சிறந்த வழி ஏதும் அவர்முன் தென்படவில்லை.

அசதுதீன் அவர்களின் வீரத்தை கண்டு வியந்த சிலுவைப்படைவீரன் பில்பிஸ் கோட்டையை விட்டு அசதுதீன் தன் படையினருடன் திரும்பும் போது, இந்த படையினரின் தளபதி என்ற அடிப்படையில் படைக்கு முன்னர் செல்லாமல் அந்தப் படையின் கடைசியில் வந்து கொண்டி ருந்தார். முஸ்லிம்களும் சிலுவைப்படையினரும் இதனை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்போது சிலுவைப்படையினரில் ஒருவன் அசதுதீன் அவர்களிடம் வந்து சிலுவைப்படை யினர் உங்களை ஏமாற்றி விடுவார்கள் என்றோ அல்லது எகிப்தின் முஸ்லிம்கள் உங்களுக்கு துரோகம் இழைத்து விடுவார்கள் என்று நீங்கள் அஞ்சவில்லையா என்று அவரிடம் கேட்டார்.

இதற்கு பதிலளித்த அசதுதீன் இவ்வாறு அவர்கள் செய்வார்களேயானால் இதற்குமுன் பார்க்காதவற்றையெல்லாம் நீ நிச்சயமாக பார்ப் பாய். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் இறப்பதற்கு முன்னால் என்னால் எவ்வளவு பேரை கொல்ல முடியுமோ அவ்வளவு பேரை கொன்று விடுவேன். அதன் பின்னர் அரசர் நூருத்தீன் அவர்கள் மீதமுள்ள உங்கள் அனை வரையும் இங்கே வந்து கொன்றுவிடுவார்.

நான் என்னுடைய பாதுகாப்பு குறித்து அஞ்சவில்லை. என்னுடைய படையினரின் பாதுகாப்பு குறித்தே அஞ்சுகிறேன்.

நான் முன் சென்று என் படையின் கடைசியில் வரும் வீரன் தாக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற் காகவே நான் கடைசியில் வருகிறேன் என்று கூறினார்.

இந்த பதிலைக் கேட்ட அந்த சிலுவைப் படையை சேர்ந்தவன் ஆச்சரியமடைந்து தன்னு டைய முகத்தில் சிலுவை குறியிட்டு கொண்டு

பின்வருமாறு கூறினான், நாங்கள் உங்களை யும் உங்களுடைய பலத்தையும் பற்றி மிக அதிக மாக உயர்த்தி கூறிய ஃபிரான்குகளிடம் அதனை ஏற்காமல் பல கேள்விகளை கேட்டுள்ளோம். ஆனால் இப்போது அவர்களை நாங்கள் மன்னித்து விட்டோம். காரணம் அவர்கள்

கூறியது அனைத்தும் உண்மையே. அவர்கள் உங்களைப் பற்றி எதையும் மிகைப்படுத்தி கூறவில்லை.

இதன்பின்னர் அந்த சிலுவைப்படையை சேர்ந்தவன் தன்னுடைய இடத்திற்கு திரும்பி விட்டான். அசதுதீன் அவர்கள் தன்னுடைய படையினருடன் பாதுகாப்பாக லெவான்தை வந்தடைந்தார்.

கி.பி.*1164* ஹிஜ்ரி *559* இந்த ஆண்டு இறைவன் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு லெவான்தை தாக்கும் வாய்ப்பை அளித்தான். அப்போது லெவான்தில் குறைந்த அளவில் சிலுவைப்படையினர் இருந்தனர். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட நூருத்தீன் ஹரிம் என்ற இடத்தில் எதிரிகளை தாக்கத்

தொடங்கினார். முஸ்லிம்களும் சிலுவைப் படையினரும் பலமாக மோதிக் கொண்டனர். இதில் நூருத்தீன் அவர்கள் எதிர்பார்த்தது போல் அல்லாமல் இந்த போரில் அந்தியோக்கியாவின் தளபதி, திரிபோலியின் பாதிரியார் இப்னு லஜூஸ்லின் என்பவர் மற்றும் ரோமாபுரியின் மன்னர் குடும்பத்தை சேர்ந்த தலைவர்களில் ஒருவர் என பலர் தங்கள் படைகளுடன் சிலுவைப் படையினருடன் சேர்ந்து கொண்டனர். நூருத்தீன் அவர்களும் சில தந்திரங்களை செய்தார்.

## நூருத்தீனை ஏமாற்ற முடியுமா?

நூருத்தீன் இப்போது எதிரிகளை முழு அளவில் பழி வாங்க முடிவு செய்துவிட்டார். எதிரிகளை அவர்களுடைய கோட்டையிலேயே

சென்று சந்திப்பது என்று தீர்மானித்து விட்டார். இதன் காரணமாக அவர் தன்னுடைய சகோதரர் மொசூலில் இருந்த குத்புதீனுக்கும், அல்-ஹிஸ்ன் என்ற இடத்தில் இருந்த ஃபக்ருதீன் கரா அர்ஸலான் என்பவருக்கும், மர்தீன் என்ற இடத்தில் இருந்த நஜ்முதீன் அல்பி என்பருக்கும்,

இன்னும் சில தலைவர்களுக்கும் சில திட்டங்களை தகவல்களை அனுப்பினார். அந்த மூன்று பேரும் தன் படைகளுடன் நூருத்தீன் அவர்களுக்கு உதவ குறிப்பிட்ட இடத்திற்கு வர வேண்டும்.

அதன்படி குத்புதீன் அதாபேக் தன்னுடைய படைகளை விரைவாக நூருத்தீன் சொன்ன இடத்திற்கு கொண்டு சென்றார். தன்னுடைய உதவியாளர் ஜெய்னுதீன் என்பவரையும் தன்னுடன் அழைத்து சென்றார்.

ஆனால் ஃபக்ருதீன் தன்னுடைய படைகளை நூருத்தீன் உத்தரவுபடி சொன்ன இடத்திற்கு கொண்டு செல்லவில்லை. பக்ருதீன் அவர்களின் நெருங்கிய நண்பர்கள் நீங்கள் என்ன செய்ய முடிவு செய்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு, நான் இங்கேயே இருந்துவிட போகிறேன். நூருத்தீன் சொன்னது போல் நான் செய்யப்போவது இல்லை. ஏனென்றால் நூருத்தீன் இப்போது பலவீனம் அடைந்து விட்டார். தொடர்ந்து நோன்பு வைத்து தொழுது கொண்டிருப்பதன் காரணமாக அவர் முற்றிலும் பலவீனமாகி விட்டார். நூருத்தீன் தன்னையும் அழித்துக் கொண்டு தன்னோடு இருப்பவர்களையும் சேர்த்து அழித்துக் கொண்டிருக்கிறார். என்று கூறிவிட்டார். அவரோடு இருந்தவர்களும் பக்ருதீனின் இந்த கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் அடுத்த நாளே ஃபக்ருதீன் தன்னுடைய துருப்புகளை அழைத்து சிலுவைப்படையினர் மீது தாக்குதல் நடத்த ஆயத்தமாக இருக்குமாறு உத்தரவிட்டார். இது அவருடைய முந்தைய ஆலோசனைக்கு மாற்றமானது.

எனவே, ஏற்கனவே அவருடன் ஆலோசனையில் பங்கேற்றவர்கள் இப்பொழுது ஆச்சரியத்துடன் அவரிடம் சென்று, நேற்று நாம் வேறு விதமாக முடிவு செய்து இருந்தோம். ஆனால் இன்று அதற்கு நேர்மாறாக முடிவெடுத்துள்ளோம். இதற்கு காரணம் என்ன? என்று ஃபக்ருதீனிடம் கேட்டனர்.

இதற்கு பதிலளித்த ஃபக்ருதீன், நூருத்தீன் அவர்கள் சிறந்த இராஜதந்திரி. நான் அவரை ஏமாற்றிவிடாவண்ணம் அவர் சில தந்திரங்களை செய்துள்ளார். இதையும் மீறி நான் அவரை ஏமாற்றினால் அவருக்கு உதவாவிட்டால் என்னை சார்ந்தவர்களே எனக்கு எதிராக மாறிவிடுவார்கள், எனக்கு எதிராக புரட்சி செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் என்ற நிலையை அவர் உருவாக்கி வைத்துள்ளார். நூருத்தீன் அவர்கள் மார்க்க அறிஞர்களுக்கும் இறை நம்பிக்கையாளர்களுக்கும் சில செய்திகளை அனுப்பியுள்ளார்.

அதில் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளையும் அநீதிகளையும் பட்டியலிட்டுள்ளார். மேலும் அநியாயமாக முஸ்லிம்கள் சிலுவைப்படையினரால் கொல்லப் பட்டதையும் அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டதையும் கொள்ளையடிக்கப் பட்டதையும் அதில் பட்டியலிட்டுள்ளார். முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு சிறைபிடிக்கப் பட்டு அடிமைகளாக்கப்பட்டதையும் சிறு குழந்தைகள் கூட கொல்லப்பட்டதையும் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டதையும் ஞாபகப் படுத்தி உள்ளார். நூருத்தீன் இறை நம்பிக்கையாளர்களை தங்களுக்காக எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்யவும் எல்லா முஸ்லிம்களையும் ஜிஹாதுக்கு செல்ல வழிகாட்டும் படியும் கோரிக்கை வைத்துள்ளார். இதன் காரணமாக மார்க்க அறிஞர்களும் இறை நம்பிக்கையாளர்களும் தங்களுடைய ஆதரவாளர்களுடன் அமர்ந்து நூருத்தீன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தை படித்துக்காட்டி அழுது துவா செய்த வண்ணம் உள்ளனர். அவர்கள் என் மீது கடும் கோபத்தில் உள்ளனர். என் மீது சாபங்களை விட்டுக் கொண்டுள்ளனர்.

எனவே, எனக்கு வேறு வழியே கிடையாது. நான் நூருத்தீன் அவர்களின் அழைப்பிற்கு செவிசாய்த்தே ஆக வேண்டும், என்று கூறினார். இதன் பின்னர் ஃபக்ருதீன் நூருத்தீன் அவர்களை நோக்கி தன் படைகளை நகர்த்தி சென்றார்.

## புதிய போர் தந்திரம்



நஜ்முதீனும் நூருத்தீன் அவர்களை நோக்கி அவருக்கு உதவ தன் படைகளுடன் வந்து சேர்ந்தார். நஜ்முதீன் தன் படைகளை நகர்த்த ஆரம்பித்த உடனே,

அந்த செய்தி கிடைத்த உடனே நூருத்தீன் ஹரீம்-ஐ நோக்கி தன் படைகளை கொண்டு சென்று அதனை முற்றுகையிட்டார். ஃபிரான்கு களுக்கு நூருத்தீன் எகிப்தை நோக்கி படையை நகர்த்தவில்லை, ஹரீமை முற்றுகையிட்டுள்ளார் என்ற செய்தி கிடைத்தவுடன் அவர்கள் தங்கள் படைகளை நூருத்தீனை நோக்கி கொண்டு வர ஆரம்பித்தனர். அந்த படைகளுடன் அந்தியோக் கின் (தற்போதைய துருக்கியின் ஒரு பகுதி) ஆட்சியாளர், திரிபோலியின் தலைமை பாதிரி லஜூஸ்லின் மற்றும் ரோமாபுரியின் அரசு குடும்ப தலைவர் ஆகியோர் தங்கள் படைகளுடன் ஏற்கனவே இருந்த சிலுவைப்படையுடன் சேர்ந்து கொண்டனர்.

இவையெல்லாம் நடக்கும் என்று நூருத்தீன் அவர்கள் கணித்தே இருந்தார். நூருத்தீன் இப்போது தன் படைகளில் துணிச்சலானவர் களை தேர்ந்தெடுத்து அவர்களிடம் முக்கியமான போர் தளவாடங்களை அவர்களிடம் ஒப்படைத் தார். சிலுவைப்படையினர் நூருத்தீன் அவர்களை நெருங்கியவுடன் நூருத்தீன் ஹரீமை விட்டு விட்டு அர்தாஹ் என்ற இடத்தை நோக்கி சென்றார். அந்த பகுதியின் மக்களும் இப்போது நூருத்தீன் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். நிச்சயம் நூருத்தீன் அவர்கள் சிலுவைப்படை யினரை அடக்கி வெற்றி வாகை சூடுவார் என அவர்கள்திடமாநம்பினர். சிலுவைப் படையினர் அம் என்ற இடம் வரை நூருத்தீனை பின் தொடர்ந் தனர். ஆனால் அதன் பின்னர் அந்த இடத்தில் நூருத்தீன் அவர்களை எதிர்த்து தங்களால் போரிட முடியாது என்ற தங்களது பலவீனத்தை உணர்ந்து அவர்கள் மீண்டும் ஹரீம் கோட்டைக்கு திரும்பினர். இப்போது நூருத்தீன் அவர்கள் சிலுவை படையினரை பின்தொடர்ந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டு படைகளும் நேருக்கு நேராக சந்தித்துக் கொண்டன. இரு படைகளும் பயங்கரமாக மோதிக்கொண்டன.

முதலில் சிலுவைப் படையினர் முஸ்லிம் களின் வலது பக்கமிருந்தவர்களை நோக்கி தங்களுடைய தாக்குதலை துவக்கினர். அந்த பக்கத்தில் அலெப்போவின் முஸ்லிம் படைகளும் அடக்கம்.


சிலுவைப் படையினர் முஸ்லிம்களை சிதற டித்து அவர்களை போர்களத்தை விட்டு தப்பி ஓடும்படி செய்தனர். முஸ்லிம்கள் போர்க் களத்தை விட்டு தப்பி ஓடினர். முஸ்லிம்களை பொருத்தவரை இது அவர்கள் ஏற்கனவே போட்டு வைத்திருந்த திட்டத்தின் ஒரு பகுதி. அதன்படியே

அவர்கள் போர்க்களத்தை விட்டு வெளியே ஓடுவது போல் பாசாங்கு காட்டினர். முஸ்லிம் களின் திட்டம் என்னவென்றால்

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

- எஸ்.எம். முஷ்ரிப்






**முந்தைய குண்டு வெடிப்புகளில் உள்ள் எல்லா முக்கிய தடயங்களும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டன, இவை பிராமிணிஸ்ட்டுகளைக் காப்பாற்றுவதற்காகவே மறைக்கப்பட்டன**

மேற்கொண்டு நடந்த விசாரணைகள் குண்டு வெடிப்புகளின் போக்கையே மாற்றின.

மாலேகோன். குண்டு வெடிப்புகளில் மட்டும்தான் இந்துத்துவ வாதிகள் கைவரிசை வெளிப்பட்டன என்றில்லை. மாறாக அதற்கு முன்னால் உள்ள பல குண்டு வெடிப்புகளும் இந்துத்துவ-பிராமிணிஸ்ட்டுகளின் வேலைதான் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் தடயங்கள் கிடைக்கவே செய்தன. ஆனால், அவையெல்லாம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டன.

ஆனால், ஹேமந்த் கர்கரே அவற்றை அம்பலப்படுத்தினார். அன்றிலிருந்து எல்லாமே மாறிப்போனது.

ராஜஸ்தான் மாநிலத்தின் அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு-2007, ஆந்திர மாநிலம் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு-2007, பானிபட் சம்செவ்தா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பு - 2007, இவற்றில் இந்துத்துவ - பிராமிணிஸ்ட்டுகளின் கைவரிசை குண்டுவெடிப்பு நடந்த இரண்டொரு நாள்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் மத்திய உளவுத்துறை தலையிட்டுஅந்த விசாரணைகள் அதற்கு மேற் செல்லாமல் பார்த்துக் கொண்டன.

# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்



மராட்டிய மாநில காவல்துறையின் தீவிர வாதத் தடுப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே மாலேகான் குண்டுவெடிப்பின் உண்மை களை வெளிப்படுத்தினார். இந்துத்துவ பிராமி ணிஸ்ட்டுகளைக் கையும் களவுமாகப் பிடித்தார். உடனேயே உடனே நாடெங்கும் அதிர்வலைகள் ஏற்பட்டன. இதர மாநிலங்களெல்லாம், தங்கள் மாநிலங்களில் நடந்த குண்டு வெடிப்புகளை மறு ஆய்வுக்கு உட்படுத்திட தலைப்பட்டன.

மூன்றாண்டுகளுக்குப் பின்னர் 2010-2011-இல் இராஜஸ்தான் மாநிலத்தின் SIT : சிறப்புப் புலனாய்வுப் படை NIA- என்ற தேசியப் புலனாய்வு முகமை இவையெல்லாம் 2007 - ஆம் ஆண்டில் என்ன தடயங்கள் கிடைத்தனவோ அவற்றைக் கொண்டு புலனாய்வுகளை மேற் கொண்டன. முழுமையான ஆய்வுக்குப்பின் இராஜஸ்தான் மாநிலத்தின் சிறப்புப் புலனாய் வுப் படை, தேசிய புலனாய்வு முகமை இவை மிகவும் ஆழமான புலனாய்வு ஒன்றை மேற் கொண்டன. பின்னர் அந்தக் குண்டு வெடிப்பு களை நடத்திய ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் போன்ற அமைப்புகளை - பிராமிணிஸ்ட்டு அமைப்புகசை சார்ந்தவர் களைக் கைது செய்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள். அவற்றில் ஏற்கெனவே குற்றம் சுமத்தப்பட்ட இஸ்லாமிய அமைப்புகள், குற்றம் சாட்டப்பெற்ற முஸ்லிம்கள் இவர்களெல்லாம் நிம்மதி அடைந்தார்கள். இந்த இஸ்லாமிய அமைப்புகள், முஸ்லிம் இளைஞர்கள் இவர்கள் மீது குற்றம் சுமத்தியவர்கள் மத்திய உளவுத் துறையைச் சார்ந்தவர்கள். இவற்றைப் பற்றிய விளைவுகள் பின்வருமாறு...

## அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு மறு ஆய்வுக்கு உள்படுத்திய முதல் வழக்கு

## அஜ்மீர் ஷரீஃப் என்பது காஜா மொய்னுத்தீன் சிஷ்தி அவர்களின் தர்கா - புதை குழியாகும்.

இங்கு அக்டோபர் 11-ஆம் நாள் 2007 ஆம் ஆண்டு மாலை 6.15 மணிக்கு குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது. இது முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் ரமழான் மாதத்தில், நோன்பு துறக்கும் மாலைப் பொழுதில் நடந்தது. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டார்கள். 15 பேர் காயம் பட்டார்கள்.

இன்னொரு குண்டும் இருந்தது. ஆனால் அது வெடிக்கவில்லை.

குண்டு வெடித்த நான்கு நாள்களுக்குள் காவல்துறையினர் குண்டை வெடிக்கச் செய்த சிம் கார்டை கையகப்படுத்தி விட்டார்கள். இந்த சிம்கார்டு "பாபுலால் ராம்ஃபர் யாதவ்ட, என்பவரின் பெயரில் வாங்கப்பட்டிருந்தது. அவர் "டும்கா" 'DUMKA' மாவட்டத்தில் காகோய் கிராமத்தைச் சார்ந்தவர். அவர் ஒரு போலி வாக் காளர் அட்டையைத் தயாரித்து அதனடிப் படையில் அந்த சிம் கார்டை வாங்கி இருந்தார். இந்தத் தகவல்கள் அனைத்தும் முழுமையாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழின் 15, அக்டோபர் 2007 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இந்தத் துப்புகளை வைத்துக் கொண்டு அந்த வழக்கு - குண்டு வெடிப்பு விசாரிக்கப் பட்டிருக்குமேயானால் குற்றவாளிகள் (2007) அன்றே கண்டுபிடிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆனால் இன்றைய காவல்துறையினர் திடுதிப்பென புலனாய்வை கைவிட்டார்கள். பாபுலால் ராம்ஃபர் யாதவ் என்றொரு மனிதனே இல்லை எனச் சொல்லிவிட்டார்கள்.

ஆனால் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பவர்களைப் பொறுத்தவரை சிம்கார்டு (SIM CARD) கிடைக்கப் பெறுவது ஒரு பெரும் புதிரை - முடிச்சியை அவிழ்ப்பதாகும். அவர்கள் சில அறிவியல் ஆய்வாளர்களின் துணையோடு சிம் கார்டை பயன்படுத்தி பேசப்பட்ட உரை யாடல்களை பெற்றிடலாம். (Call Records) அவற்றின் வழி உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்துவிடலாம்.

காவல்துறையினர் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு. வேறு சிலவற்றைப் பின்பற்றினார் கள். அது பாம்பை விட்டுவிட்டு புதரை அடிக்கும் கதையாக இருந்தது. அவர்கள் அதாவது, இராஜஸ்தான் காவல்துறையினர் உளவுத்துறை யின் ஏவலின்படி, பாகிஸ்தானைச்சார்ந்த லஷ்கரே தையுபா என்ற அமைப்பு பங்களாதேஷில் இருக்கும் ஹுஜி போன்ற அமைப்பு என்பதாக தங்கள் புலன் விசாரணையை ஓட்டினார்கள். இவர்களெல்லாம் மாயமான ஒரு பெயரின் கீழ் இயங்குவதாகவும் பேசப்பட்டது.

அந்தப் பெயர் ஷரித் பிலால். அவர்கள் அதாவது, இராஜஸ்தான் காவல்துறையினர் அந்தக் குண்டு வெடிப்புகளில் பலியான செய்யத் சலீம் என்பவரைச் சந்தேகப்படத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் உண்மையான சாட்சியங் களையும் உண்மையான குற்றவாளிகளையும் விட்டு விட்டு முஸ்லிம்கள்தாம் குற்றவாளிகள் என்ற ஒரே கோணத்தில் தங்கள் பார்வையை ஓட்டிடத் தலைப்பட்டு விட்டார்கள்.

இந்த வகையில் எந்த ஆதாரமும் இல்லாமல், அப்துல் ஹாபிஸ் ஷமீம், முஜீபுர் ரஹ்மான், இம்ரான் அலீ போன்றவர்களைக் கைது செய்து சித்திரவதைச் செய்திட தலைப்பட்டு விட் டார்கள். ஆனால், 2008 ஆம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டு வெடிப்பிற்குப் பின் எல்லாமே தலை கீழாக மாறிடத் தொடங்கின. இந்தக் குண்டு வெடிப்பிற்குப் பின், அபிநவ் பாரத்தான் இருக்கின்றது என்பது அம்பலமானது. இதனால் மக்கள் அஜ்மீர் ஷெரீஃப குண்டு வெடிப்பையும், மறு ஆய்வுக்குட்படுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

இதுகுறித்து மக்களிடையே பெரும் கொந் தளிப்பு வந்தது. இந்தப் பின்னணியில் ராஜஸ் தான் அரசாங்கம், அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பை மறு ஆய்வு செய்திட ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை 2008-இல் ஏற்பாடு செய்தது. (SIT)

இந்த (SIT) சிறப்புப் புலனாய்வுக்குழு சரியான திசையில் தனது ஆய்வை மேற்கொண் டது. முதலில் எந்தத் திசையில் புலனாய்வு சென்றதோ அதே திசையில் புலனாய்வை மேற் கொண்டது. அதுவே சரியான திசையாகவு மிருந்தது. அவர்கள் முதலில் கிடைத்த எல்லா தடையங்களையும் விறுப்பு வெறுப்பின்றிப் பின்பற்றினார்கள். உண்மையான குற்றவாளி களைக் கண்டறிந்தார்கள். பின்னர் பின்வரும் குற்றவாளிகள் மீது அக்டோபர்-5, 2010 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள்.

ஆதாரம் (THE CHARGE SHEET OF THE AJMER SHARIF BLAST CASE 2007 FILED IN THE JAIPUR COURT IN OCT. 2010)

1. சுனில் ஜோஷி - ஆர்.எஸ்.எஸ்.-இன் பிரசார பிர்முக் - மாஹு மாவட்டம், மத்தியப் பிரதேச மாநிலம்.



2. சந்தீப் டான்கி - ஆர்.எஸ்.எஸ். பிரசார் பிராமுக் ஜம்தார மாவட்டம். மத்தியப் பிரதேச மாநிலம்.

3. தேவேந்திர குப்தா - ஆர்.எஸ்.எஸ். பிரசார் பிரமுக் ஜம்தார மாவட்டம், ஜார்க்கண்ட் மாநிலம்.

4. சந்திரகாந்த் லிவி ஷாஜாபூர் மாவட்டம். மத்திய பிரதேசம்.

5. ராம்ஜி கல்சங்கரா - ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத் ஆகியவற்றின் தீவிர செயல்பாட்டாளர்.

6. லோகேஷ் ஷர்மா - ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளின் தீவிரவாத பிரிவின் தலைவர்.

1 முதல் 4 வரை குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எந்தெந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் என்பது, குற்றப் பத்திரிகையிலேயே குறிப்பிடப்பட்டது. அதை அப்படியே இங்கே தந்துள்ளோம்.

ஏப்ரல்-2011 ஆம் ஆண்டு இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகைமையிடம் NIA ஒப்படைக் கப்பட்டது. இதை மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்காகவே அதனிடம் ஒப்படைக்கப் பட்டது. அந்த நேரத்தில் சுவாமி அசீமாநந்தா தனது ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கி இருந்தார். இதனால் NIA மிகவும் தீவிரமாக விசாரணையை மேற்கொண்டது. அதன்பின் ஜூலை 2011-இல் 13 தீவிரவாதிகளின் மீது, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இவர்கள் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், ஜெய் வந்தே

மாதரம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்கள். இந்தக் குற்றப் பத்திரிகையில் ஏற்கெனவே குற்றம் சாட்டப் பெற்ற ஏழுபேரும் அடங்குவார்கள். கூடுதலாகக் குற்றம் சாட்டப்பெற்றவர்களின் பெயர்கள் பின்வருமாறு...

1. சுவாமி அசீமானந்தர்,

2. ஹர்ஷத் சோளிங்கி

3. முகேஷ் வசானி

4. பாரத் ரட்டிஷ்வர்

5. பாவேஷ் பட்டேல்

6. சுரேஷ் நாயர்

7. மெஹுல - பட்டப் பெயர் மகேஷ்பாய் கோஹில்

குற்றம் சாட்டப்பெற்ற 13 பேரில் மூன்று பேர் இன்னும் தலைமறைவாகவே இருக்கின் றார்கள். அவர்கள்

1. சந்தீப் டேங்க்

2. ராம்ஜி கல் சங்கரா

3. சுரேஷ் நாயர்

இவர்களில் சந்தீப் டேங்க, ராம்ஜி கல்சங்கரா ஆகியோர் தங்களை வெடிகுண்டுகள் வழி 26/11 என்ற மும்பைத் தாக்குதலின்போது கொலை செய்து கொண்டார்கள் என நம்பப்படுகின்றது. காரணம் இவர்கள் பல குண்டுவெடிப்புகளை நடத்தியவர்கள். அத்தோடு மும்பைத் தாக்கு தலின் போது நடந்த மும்பை ரெயில் நிலையத் தில் நடந்த தாக்குதல் (அதில் அப்பாவி மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்) காமா மருத்துவமனை தாக்குதல் ரெங்கபவன் பகுதியில் கர்கரே போன் றவர்கள் கொலை செய்யப்பட்டது ஆகியவற்றி லும் இவர்கள் உண்டு. இவையெல்லாம் பின்னர் தெரிந்துவிடும் என அவர்கள் அஞ்சினார்கள். அதனால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டார்கள். (சில புலனாய்வுகளின்படி, அவர்கள் அவர்களின் இயக்கத்தவர்களாலேயே கொலை செய்யப்பட்டார்கள்)

முதன் முறையாக மூன்று ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

ஜெய்ப்பூரிலுள்ள (Special NIA Court) சிறப்பு தேசிய புலனாய்வு முகமை வழக்கை நடத்தி, மார்ச்-8,2007 ஆம் ஆண்டு தனது தீர்ப்பை வழங்கியது.

இது கைது செய்யப்பட்ட 10 குற்றவாளி களுக்காக நடத்தப்பட்ட வழக்கும் தீர்ப்பும். இதில் மூன்று ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தண்டிப் பட்டார்கள். ஏழு பேர் விடுவிக்கப்பட்டார்கள். இதில் சுவாமி அசீமானந்தாவையும் நீதி மன்றம் விடுதலை செய்துவிட்டது.

அவர்களுக்குச் சந்தேகத்தின் பயனை அளிப்ப தாகக் கூறிற்று. தண்டிக்கப்பட்ட மூன்று பேர் சுனில் ஜோஷி, தேவேந்திர குப்தா, பாவேஷ் பட்டேல். இதில் சுனில் ஜோஷி இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பே இறந்து விட்டார். (இவரை மாலேகான் பிளாஸ்ட் 2008- இல் குற்றம் சுமத்தப்பட்ட பெண் சந்நியாசி பிரக்யா சிங் தாக்கூர் ஓர் இரகசிய இடத்தில் வைத்துக் கொலை செய்து விட்டார். பிரக்யா சிங்தாக்கூர் மீது இந்த கொலை வழக்கும் நடந்து கொண்டிருக்கின்றது)


இவர் சுனில் ஜோஷி மிகவும் அபாயகரமான சூழலில், மத்தியப் பிரதேசத்திலுள்ள தேவாஸ் எனுமிடத்தில் 29, டிசம்பர் 2007-இல் இறந்து கிடந்தார். இந்த அஜ்மீர் ஷெரீஃப் வழக்கில்தான் முதன் முதலில் ஆர்.எஸ்.எஸ்.-ஐ சார்ந்த ஒருவர் குண்டு வைக்கும் தீவிரவாதச் செயலில், அதாவது தெளிவாக ஆர்.எஸ்.எஸ். காரர் என அறியப்பட்ட ஒருவர் முதன் முதலாகத் தண்டிக்கப்பட்டார்.

சுவாமி அசீமானந்தாவின் வாக்குமூலம் முழுக்க முழுக்க தானாகவே முன்வந்து வழங்கப் பட்ட ஒன்று. ஆனாலும் நீதிமன்றம் சில சில்லரைக் காரணங்களைச் சொல்லி அதை நிராகரித்துவிட்டது. இந்த விவகாரத்தை அத்தியாயம் 10-இல் விரிவாக விவாதித்திருக் கின்றோம். அதில் ஹைதராபாதம் மக்கா மஸ்ஜித் (பள்ளிவாசல்) குண்டு வெடிப்பை விரிவாக விவாதித்திருக்கின்றோம். அசீமானந்தா அந்த வழக்கிலும் இதே போன்றதொரு வாக்கு மூலத்தை வழங்கி இருந்தார்.

**2. மக்கா மஸ்ஜீத் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு - 2007**

- இந்த குண்டுவெடிப்பு இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

## நூல் ஆய்வு




# அத்தாட்சிகள்

## திருக்குர்ஆன்

## கலைக் களஞ்சியம்



M. அமீர் அல்தாஃப்

> **நூல் ஆய்வு**
>
> "அத்தாட்சிகள்"
> "திருக்குர்ஆன் கலைக் களஞ்சியம்"
>
> தொகுப்பு : M. அமீர் அல்தாஃப்
>
> நான்கு பாகங்கள் :
> A4 அளவில் 2800 பக்கங்கள்
>
> விலை : நான்கு தொகுதிகளுக்கும் சேர்த்து ரூ. 3000 /-
>
> அழகிய வடிவமைப்பு
>
> அனைத்து பக்கங்களும் ஆர்ட் காகிதத்தில், நேர்த்தியான அச்சு
>
> அறிவையும் கண்களையும் ஒருசேர கவரும் 13.000 வண்ணப் புகைப்படங்கள்
>
> வெளியீடு
> "புதிய சமுதாயம் அறக்கட்டளை"
> சுந்தராபுரம், கோயம்புத்தூர் - 641 024,
> போன் : 0422 - 2675 614,
> செல் : 90870 4667 -
> alooralthaf@gmail.com

அதோ ஒரு பெரிய மாளிகை : அந்த மாளிகையின் வனப்பைத் தன் குழந்தை களுக்குக் காட்டிட விரும்பும் தாய், தன் குழந்தை களின் கரம்பற்றி மெல்ல உள்ளே அழைத்துச் செல்கின்றாள்,

ஒவ்வொன்றாக முறையாக அறிமுகப்படுத்து கின்றாள், தாய் குழந்தை புரிந்து கொள்ளும் அளவில் எளிமையாக சொல்லித் தருகிறாள், இறுதியில் மொத்த உலகத்தையும் காட்டி விடுகின்றாள், எத்தனை எத்தனை அற்புதங்கள்,

அத்தனைக்கும் சாட்சியங்கள், அத்தாட் சிகள். பல இடங்களில் படத்தைக் காட்டி இதுதான் எனச் சொல்லுகின்றாள், குழந்தைகள் ஆர்வமுடன் கேட்டுக்கொண்டே வருகின்றன. இத்தனையும் உள்ளடக்கிய அந்த மாளிகையை (பிரபஞ்சத்தை) அமைத்தவனை வியந்து போற்று கின்றன. அவன்தான் 'மிக்க மேலானவன்' என்ற முடிவுக்கு வருகின்றன.

இப்படித்தான் அத்தாட்சிகள் வழி அல்லாஹ்வை அவனது அறுதி வழிகாட்டுதலாம் திருக்குர்ஆனை, அதனை வழங்கிட அல்லாஹ் தேர்ந்தெடுத்த அரபு இலக்கியம் வளம் செறிந்த மொழியை திருத்தூதர்களை, அவனது முந்தைய வேதங்களை அவை வந்த / வாழ்ந்த வரலாற்றை, நம் மனக் கண்முன் படிம் பிடித்தல்ல, பல்வேறு வரைபடங்கள் (MAPS), புகைப்படங்கள் வழியாகக் காட்டுகின்றது.

அல்குர்ஆனின் அத்தாட்சிகள் என்ற தொகுப்பு. ஒரு பல்கலைக் கழகம் செய்திட வேண்டிய பணியை மைய லாவகமாக முடித்திருக்கின்றார் முனைவர் அமீர் அல்தாஃப்.

நுழைவாயில், அல்குர்ஆனின் மொழியில் அதன் வளம் / ஆளுமை எனத் தொடங்கி, அல்குர்ஆனின் பொருளாம் ஏகத்துவம், அதனை உலக மக்களிடையே பிரச்சாரம் செய்து மக்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிட வந்த நபிமார்கள், அவர்கள் தங்கள் செய்திகளை எடுத்துரைக்க கடந்து சென்ற நில பரப்புகள்,

இவையெல்லாம் நம் மனக் கண்முன் எடுத்துக் காட்டப்படுகின்றன. இதுமட்டுமல்ல படங் களின் வழி கண்ணெதிரே கொண்டுவந்து நிறுத் தப்படுகின்றன.

## இதர சாட்சியங்கள்

அத்தோடு இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவம், அதுபற்றி இதர வேதங் களில் பரவிக்கிடக்கும் சாட்சியங்கள் அணி வகுத்து வருகின்றன. நீண்ட விவாதம். அதனை இஸ்லாத்தை மக்களிடம் எடுத்துச் சொல்லிடும் இலட்சியப் பணிகள் ஈடுபடுபவர்கள், அரங்கில் விவாதங்களில் உரை வீச்சுக்களை நிகழ்த்தும் சொல்லேர் உழவர்கள்.

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களப்பணியாளர்கள் ஆகியோக்கு பெரிதும் பயன் படும் அத்தாட்சிகள் விவாதங்களில் அடுக்கடுக் கான விவாதங்களை எடுத்து வைக்க, பஞ்சமின்றி கிடைக்கும் ஆதாரங்கள். அனைத்திற்கும் மேலாக முஹம்மத் (ஸல்) அவர்கள் தாம், இன்றைக்கு அனைத்து மக்களும் பின்பற்றிட வேண்டிய நபி என்பதை அறுதி இட்டுச் சொல்லி உறுதியாக நிரூபிக்கின்றது.

இந்தப்பகுதி இன்றைக்கு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் செயல் வீரர்களுக்கு பாடமாக நடத்தப்பட வேண்டும்.

இதில் அமீர் அல்தாஃப் அவர்கள் பளிச்சென ஒரு புது பார்வையைப் பதிவு செய்கின்றார். அது பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு மனித் துளியும் ஓர் முன் மாதிரி. இந்தக் கோணத்தில் ஆய்வுகள் அவசியம் நூல்கள் வர வேண்டும்.

## காஸ்பல் ஆஃப் பர்னபாஸ்

அதேபோல் காஸ்பல் ஆஃப் பர்னபாஸ் பற்றிய தனித்தொரு தொகுப்பு. அதில் காஸ்பல் ஆஃப் பர்னபாஸ் - பர்ணபாஸ் சுவிசேஷம் அனைத்துப் பகுதிகளும் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளன. பக்கங்கள் (654-666)

காஸ்பல் ஆஃப் பர்ணபாஸ் (எ) பர்ணபாஸ் சுவிசேஷமும் உடன் தொடர்புடைய பலர் - (அதைத் திருடி சென்றவர். உள்பட) இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றார்கள். இந்தச் செய்தி அழுத்தமா கப் பதியப்பட்டிருக்கும் இந்த உண்மை ஆழ்ந்து கவனிக்கத் தக்கது.

காஸ்பல் ஆஃப் பர்னபாஸ் உண்மையான கிருஸ்தவர்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டால், அவர்களின் திரித்துவத்தை விட்டு, மூன்று கடவுள் கொள்கைகளை விட்டு, ஏகத்துவத்தை ஏற்பார்கள். இதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பாதிரிகளின் வாழ்க்கை வரலாற்றைத் தோண்டி எடுத்திட வேண்டும். மக்கள் அறிந்திட தந்திட வேண்டும். அவை இன்னும் பல பத்திரிகைகளை இஸ்லாத்தோடு இணைக்கும் பிணைக்கும். இதனால் இது களப்பணியாளர்களிடம் மட்டு மல்ல அறிஞர்கள் அவையிலும் நாம் நடத்தி வரும் இஸ்லாமியக் கல்விக் கூடங்கள் அனைத் திலும் இடம்பெற வேண்டும். இது அடிக்கடி விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று.

கிருஸ்தவ நம்பிக்கையாளர்களிடம் விவாத பொருளாக மாற்றிட வேண்டும். பலர் நேர் வழி பெறுவார்கள்.

## முஹம்மத் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி.

## கரண் ஆம்ஸ்ட்ராங்

இவர் எழுதிய முஹம்மத் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி என்ற நூலின் படம், பக்கம் 614-இல் இடம் பெற்றுள் ளது. இவருடைய ஆய்வுகள் நம் மக்கள் மன்றத்தில் இன்று விவாதத்திற்கு வைக்கப்பட வேண்டி ஒன்று. இது உலக அளவில் பல பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

ஏனெனில் இவருடைய ஆய்வுக்குப்பின் பெருமானார் (ஸல்) அவர்களின் மீதான ஐரோப் பியர்களின் பார்வையை மாறிற்று இந்த நூல். இஸ்லாத்தைப் பற்றி பல நூறு ஆண்டுகளாக, மேலை நாட்டவர்கள் குறிப்பாக ஐரோப்பி யர்கள் கொண்டிருந்த வெறுப்பை வென்றது. அவர்களின் கண்களைத் திறந்தது. அத்தோடு இஸ்லாத்தைப் பற்றிய ஆய்வுகளைத் தூண்டி விட்டது.

கரண் ஆம்ஸ்ட்ராங்கின் பார்வை, காலத்திற் கேற்ற புதிய பார்வை. இப்படி ஒரு பார்வையை மக்களிடையே அதிகமாக அறிமுகப்படுத்திட வேண்டும். இன்றைக்கு இஸ்லாத்தின்மேல் இட்டுக்கட்டும் கதைகள் அன்று மேலை நாட்ட

வர்கள் இட்டுக் கட்டியவையே! அதனால் இந்த நூல் அதிகம் நம் நாட்டில் அதற்குப் பயன் படுத்திட வேண்டும்.

இந்த நூல் அதைத் தொடர்ந்து நடந்த விவாதம். வெளிவந்த தொலைக்காட்சி தொடர்-இஸ்லாமியக் கண்காட்சி இவையெல்லாம் லண்டன் மாநகர மையமாகக் கொண்டு உலகெங்கும் ஏற்படுத்திய தாக்கத்தை நமது இந்து பத்திரிகை ஆங்கிலம் நடுப் பக்கத்தில் வெளியிட, அதனை நாம் 'வைகறை வெளிச்சம்' இதழில் விரிவாக வெளியிட்டிருந்தோம்.

ஐரோப்பாவில் இந்த நூல் ஏற்படுத்திய தாக்கத்தை நமது இந்து பத்திரிகை இப்படி குறிப்பிட்டது.

"இப்போது ஐரோப்பாவில் மஸ்ஜித்கள், தீவிர வாதத்தின் இருப்பிடமில்லை. மதரஸாக்கள் 'Factories of Jihad' ஜிஹாத்-இன் ஆலைகள் அல்ல. திருக்குர்ஆன் தீவிரவாதத்தை போதிக்கும் நூல் அல்ல. தாடியும், தொப்பியும் தீவிரவாதத்தின் அடையாளங்கள் அல்ல. நபி (ஸல்) அவர்கள் தீவிரவாதத்தைப் போதிக்கவில்லை. மாறாக இறைவனின் தூதர் (ஸல்) அவர்களின் போதனைகள்தாம். இன்றைய உலகை கவ்விப் பிடித்திருக்கும். அனைத்து பீடைகளையும் அகற்றும். 'Mohammad : A Prophet, for our time" ஆகவே முஹம்மத் (ஸல்) அவர்கள்நமது இன்றையக் காலக்கத்திற்காக அனுப்பப் பட்ட நபி.

கரண் ஆம்ஸ்ட்ராங்கின் பார்வை, இந்த உலகம் பெருமானார் (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் வாழும் மக்களுக்கும், இனி வரும் நாள்களில் வாழ்ந்திட வரும் மக்களுக்கும் சேர்த்தே அனுப்பப்பட்டவர்கள். இதைப் போன்ற பார்வை, முஸ்லிம்களை ஏகடியம் பேசும் ஐரோப்பியர்களின் ஒரு சொல் வழக்கிற்கு மரண அடி. அவர்கள் இஸ்லாம் பழமையானது என்றும் முஸ்லிம்களிடம் கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் மத்திய வரலாற்று காலத்திற்கு -க்கு நம்மை அழைத்துச் சென்று விடுவார்கள். அதாவது பின்னுக்குத் தள்ளி விடுவார்கள் என்று பேசிவந்தார்கள்.

(சிந்தனைக்கும் பேச்சுக்கும் மரணஅடி : இந்நூல் வைகறை வெளிச்சம் மாதஇதழில் தொடராக வந்தது. இப்போது முன்னோட்டம் என்று நூலாக வந்துள்ளது. இதுபோன்ற புதுப்பார்வைகள் இப்போது மிகவும் அவசியம். இதில் அத்தாட்சிகள், இதுபோல் பல நூல்களை பட்டியலிடுகின்றது.)

**சமஸ்கிருதம் :**

பிறவேதங்களின் மொழிகள் பற்றிய ஆய்வும், அதில் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி முன்னறிவிப்புகளும், விரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதில் சமஸ்கிருதம் பற்றிய வேடிக்கை ஒன்று வரையிட்டுக் காட்டப்படுகின்றது.

இன்று சமஸ்கிருதத்தை எல்லோர் மீதும் திணிக்க பல குள்ள நரித்தனங்கள் பின்பற்றப் படுகின்றன. ஆனால் அன்று சமஸ்கிருதத்தைக் கற்றுத் தேர்ந்தேயாக வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு நின்றார் ஆங்கிலேய அதிகரி வில்லியம்ஸ். இவர் கல்கத்தாவில் கொட்டம் அமைத்து இந்தியாவின் பெரும் பகுதியில், ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார். அவருக்கு சமஸ்கிருதத்தை கற்றுத்தந்திட யாரும் முன் வந்திடவில்லை. அப்படி முன் வந்தவர்களையும் ஐதீக அசாத்தியர்கள் தடுத்தார்கள். பின்னர் முன் வந்த ஒரு பண்டிதர் போட்ட நிபந்தனைகள் ஏராளம்.

தரையில் அமர்ந்துதான் தேவபாஷையினைக் கற்க வேண்டும். கற்கும் காலம் வரை சைவமாகவே நாக்கும் உடம்பும் இருக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் பல. ஆனால் வில்லியம்ஸ் விடவில்லை. கற்றேயாக வேண்டும் என பிடிவாதமாக இருந்தார். தரையில் அமர்ந்தே கற்க பாதாள அறை ஒன்றை தயார் செய்தார். பக்கங்கள் (356-359) இதெல்லாம் இன்றைக்கு நடக்கும். மொழிப்போரில், தமிழ் மொழிப் போராளிகளின் கைகளில் கிடைக்க வேண்டும்.

அதனால்தான் கூறுகின்றோம்... இது அனைவரில் நூல் நிலையங்களிலும் அவசியம் இடம் பெற வேண்டும். தவறாமல் அரசு நூல் நிலையங்களில் இடம்பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை பதிப்பகத்தார் எடுத்திட வேண்டும்.

இதுகுறித்து ஆசிரியர் அமீர் அல்தாஃப் அவர்களிடம் நேரடியாகப் பேசி இருக்கின்றேன்.

இன்ஷா அல்லாஹ் இன்னும் வரும்.

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் –<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு<br>– மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்– டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது– ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் –<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் –<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்– பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை –<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

| | | |
|---|---|---|
| 37. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 | ரூ. 10.00 |
| 38. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –<br>திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 | ரூ. 10.00 |
| 39. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 | ரூ. 25.00 |
| 40. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 | ரூ. 20.00 |
| 41. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | ரூ.25.00 |
| 42. | கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 | ரூ. 60.00 |
| 43. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 | ரூ. 20.00 |
| 44. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 | ரூ. 30.00 |
| 45. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 | ரூ. 30.00 |

## எமது விற்பனையில். . .

| | | |
|---|---|---|
| 01. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | ரூ. 100.00 |
| 02. | மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | ரூ. 100.00 |
| 03. | குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் | ரூ. 170.00 |

### BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 01. | END OF CASTEISM - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | Rs. 50.00 |
| 02. | THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media | Rs. 695.00 |
| 03. | MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong | Rs. 325.00 |
| 04. | KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi | Rs. 350.00 |
| 05. | WHO KILLED KARKARE -<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition | Rs. 300.00 |
| 06. | 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif | Rs. 275.00 |
| 07. | ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed | Rs. 60.00 |
| 08. | MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media | Rs. 280.00 |
| 09. | PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)<br>- Syed Naseer Ahamed | Rs. 25.00 |
| 10. | IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy | Rs. 150.00 |

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் | ரூ. 50.00 |
| 02. | நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் | ரூ. 30.00 |

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.